# ஸ்ரீமஹாபாரதக் கதைகள்

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
BESANT NAGAR. MADRAS-600 090.

பாஷாபாரத துரந்தர, மஹாமஹோபாத்யாய,
ஸ்ரீ. ம. வீ. இராமானுஜாசாரியர்
அவர்களால் தொகுக்கப்பெற்றன.

Published by

M. R. RAJAGOPALACHARI,

KUMBAKONAM.

1940.

விலை அணா 10.

CS CamScanner

GF
016,1A2:g (0-,3)
31H0

*All Rights Reserved.*

Printed at the
SRI MAHABHARATA PRESS,
KUMBAKONAM.

# பொருளடக்கம்


| | | | பக்கம். |
|---|---|---|---|
| I | உத்தம மாணுக்கர்கள் | ... | 1 |
| | 1. உத்தாலகன் | ... | 2 |
| | 2. உபமன்யு | ... | 5 |
| | 3. பைதன் | ... | 12 |
| | 4. உதங்கர் | ... | 14 |
| | 5. ஏகலவ்யன் | ... | 26 |
| II | அரசிளங்குமாரின் ஆயுதப்பயிற்சியும் அரங்கேற்றமும் | ... | 32 |
| III | துரோணர் குருதக்ஷிணை பெறுதல் | ... | 50 |
| IV | பீமனும் பகனும் | ... | 59 |
| V | அரசரொடு பழகுதல் | ... | 90 |
| VI | தன்னலம் பேணல் | ... | 99 |
| VII | விருந்தோம்பல் | ... | 113 |
| | அரும்பதக்குறிப்பு | ... | 124 |


CamScanner

மீனாமை கோலநெடு நரசிங்க மாகிநிலம்
விரகா லளந்த குறளாய்
ஆனாது நின்றமழு வில்லும்கோல் வெல்லும்முனை
அலமுற்ற செங்கை யவராம்
வானாடர் வந்துதொழ மண்ணாடர் ஐவரையும்
வாழ்விக்க வந்த வடிவாம்
நானாவி தங்கொள்பரி ஆளாகி நின்றருளும்
நாராய ணாய நமவே.

*வில்லிபுத்தூரார்.*

7349

ஸ்ரீ:

# முகவுரை.

தமிழ் மஹாபாரதப் பதிப்பாசிரியரும் அடியேனது அரும்பெறல் தந்தையாருமாகிய ஸ்ரீ உ. வே. பாஷாபாரத துரந்தர, மஹாமஹோபாத்தியாய, ம. வீ. இராமானுஜாசாரியஸ்வாமி அவர்கள், தாங்கள் உழைத்துவந்த தமிழ் மஹாபாரதப்பதிப்பு வேலைகளுக்கிடையிலே வேறுபலஉலகஉபகாரமான செயல்களையும் செய்துவந்தார்கள். அந்த முறையில் ஸ்ரீ மஹாபாரதத்திலுள்ள அருமையான நீதிக்கதைகளைத் தமிழ்நாட்டுச் சிறுவர் சிறுமியர்களும், மாணுக்கர்களும் கற்றுத் தெரிந்துகொள்ளும்பொருட்டுப் பல கதைகளைத் தொகுத்துவைத்துள்ளார்கள். அவற்றைச் செப்பஞ்செய்து வெளியிடவேண்டும் என அவர்கள்கொண்டிருந்த எண்ணம் நிறைவேறுமுன் அவர்கள் பெரும்பிரிவுஎய்தியமையின், அடியேன் அவர்கள்கொண்டகருத்தை இயன்றஅளவு நிறைவேற்ற முயன்றுவருகிறேன். அம்முறையில் இப்புத்தகம் முதல் வெளியீடாகும். ஸ்ரீமஹாபாரதத்தின் பெருமையையும், அதனைக்கற்பதால் உண்டாகும்நன்மையையும் பற்றி அடியேன் கூறுவது மிகையாகும்.

இப் புத்தகத்தில் அடங்கியகதைகள் மக்கள் வாழ்க்கையில் கைக்கொள்ளவேண்டிய சிறந்தநீதிகளை எளியமுறையில் போதிப்பன. புத்தகத்தில் கடைசியில் அரும்பதங்களுக்கு உரையும் சேர்க்கப்பட்டுள்ளது. காகிதம் மை முதலியவைகளின்விலை மிக உயர்ந்திருக்கும் இக்காலத்தில், பலரும் எளிதில்பெற்றுப் படிக்கவேண்டும் என்றே விலையும் குறைத்து வைக்கப்பட்டுள்ளது.

CamScanner

இப் புத்தகத்தை ஆதரிக்கும் முகத்தால் அடியேற்கு உற்சாகமூட்டுமாறு வித்யா இலாகா அதிகாரிகளையும் தமிழ் மக்களையும் கேட்டுக்கொள்ளுகிறேன். இவ்வாறு செய்வது தமிழ்நாட்டிற்கும் தமிழ்மொழிக்கும் பெருந்தொண்டியற்றிச்சென்ற எனது தந்தையார் பொருட்டுக் காட்டிய நன்றியறிதலுமாகும்.

இஃது ஆதரவுபெற்றால் இதனைத்தொடர்ந்து பின்னும் பலபுத்தகங்களை வெளியிடும் கருத்துடையேன்.

இப் புத்தகத்தைப் புரூப் திருத்திக்கொடுத்து உதவிய டவுன்ஹைஸ்கூல் தலைமைத்தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமான் ஊ. சா. வேங்கடராமையரவர்களுக்கும் இந்நகர் அரசியல் கல்லூரித் தலைமைத்தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமான் L. ஸ்ரீநிவாஸ ஐயரவர்களுக்கும் இந்நகர் பாணாதுறைஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமான் T. V. சதாசிவப்பண்டாரத்தாரவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைச்செலுத்துகிறேன்.

கும்பகோணம்,
1–12–1940.

*M. R.* ராஜகோபாலாச்சாரி.

---

ஸ்ரீ:

# மஹாபாரதக் கதைகள்.

## I. உத்தம மாணாக்கர்கள்.

### நூன்முகம்.

"அரிது அரிது மானிடராதல் அரிது" என்பர் ஔவையார். மானிடர் அரியராவது, விலங்கு முதலியவற்றைக் காட்டிலும் வேறுபட்டுச் சிறப்பான பகுத்தறிவைப் பெற்று இருப்பதனால். அந்தப் பகுத்தறிவு, "கற்றனைத்தூறும் அறிவு" "தாங்கற்ற நூலளவேயாகும் நுண்ணறிவு" என்ற வாக்கியங்களுக் கேற்பப் பலதிறப்பட்ட பற்பல நூல்களையும் கற்பதால் பெருகி வளரும். "கண்டது கற்கப் பண்டித னாவான்" என்ற பழமொழியும் இங்கே கவனிக்கத் தக்கதாம்.

அப்படிக் கற்பது ஒரு வரன்முறையை ஒட்டியதாக இருக்குமாயின், அது, தவறுதல்களுக்கு உள்ளாக்காமல் நன்னெறியிலே செலுத்தும் தகுதியுள்ளதாகும். அதற்குச் சிறந்த ஆசிரியரது உதவியும், அவரது உபதேசத்தைத் தெரிந்துகொள்ளத் தகுந்தபருவமும் இன்றியமையாதன. "குருவில்லாத வித்தை விழல்" "தொட்டுக்காட்டாத வித்தை சுட்டுப்போட்டாலும் வராது" என்பன ஆசிரியரது உதவி இருக்கவேண்டியதன் அவசியத்தையும், "இளமையிற் கல்வி சிலையில் எழுத்து": "இளமையிற் கல்" என்பன கற்க வேண்டிய பருவம் இன்னது என்பதையும் அறிவிப்பன. இது, மாணவப்பருவம் எனப்படும்.

ஆசிரியர் கூறுவனவற்றைத் தட்டாமற் கேட்டு நடப்பதே மாணாக்கர்களின் முதற்கடமையாகும். அவ்வாறு செய்பவனால் அடையவேண்டிய எல்லாப் பயனையும் அடைய முடியும்.

நமது நாட்டிலே முன்காலத்திலே இப்படிப்பட்ட சிறப்புவாய்ந்த ஆசிரியன்மார்களும், மாணாக்கர்களும்விளங்கி வந்தார்கள். மாணாக்கர்கள் ஆசிரியர்கள் இருக்குமிடத்துக்குச் சென்று அவர்களுடனிருந்துதான் வித்தைகளைக்கற்றுக் கொள்ளவேண்டும். இது குருகுலவாசம் என்றழைக்கப்படும். அக்கால், ஆசிரியர்கள் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட மாணாக்கர்களைப் பலவகைகளினால் பரிசோதிப்பார்கள். அப்பரிசோதனையில் தவறிவிடாது தேர்ந்துவிட்டால் உடனே ஆசிரியர்கள், பெருங்கருணையுடன் அந்த மாணாக்கர்களுக்கு எல்லாவித்தைகளிலும் பாண்டித்யம் உண்டாகும்படி அனுக்ரஹம் பண்ணுவார்கள். அவர்கள் நிறைமொழி மாந்தர்களாதலின் அந்த அனுக்ரஹம் தவறாது பலனளித்து மாணாக்கர்களுக்கு நன்மையினைச் செய்யும். அன்றியும், தங்களது ஆசிரியர்களின் நடையுடை பாவனைகளும் மாணவர்களின் மனத்திலே பதிந்து அவர்களைப் பரிசுத்தர்களாக்கும்.

---

## 1. உத்தாலகன்.

நமது தேசத்திலே தக்ஷசிலா என்ற ஒரு புண்ணிய பூமி இருக்கின்றது. அஃது இக்காலத்தில் சரித்திர ஆராய்ச்சியாளர்களுக்குச் சிறந்த இடமாக விளங்குகிறது. அஃது ஒருகாலத்தில் நமது நாட்டின் சிறந்த வித்யாபீடமாக விளங்

வெது. அந்த இடத்தில் அயோதர் என்ற பெயர்பெற்ற ஒரு முனிவர் இருந்தார். அவருக்குத் தௌமியர் என்பதும் ஒருபெயர். அவர் பல மாணாக்கர்களுக்குக் கல்வி கற்பித்து வந்தார். அவர்களுள் ஆருணி என்ற பெயருடன் ஒருவன் இருந்தான். அவன் பாஞ்சாலதேசத்திலிருந்து இவரிடம் கல்விகற்க வந்தவன்.

அயோதருக்குச் சில கழனிகளிருந்தன. அவற்றுள் ஒன்றில் தண்ணீர் தங்குவதில்லை. எவ்வளவு அடைத்தாலும் தண்ணீர் மடையைஉடைத்துக்கொண்டு செல்வதுவழக்கம். ஒருநாள் அயோதர், ஆருணியைப் பரிசோதிக்க எண்ணினர் "ஏ, ஆருணி! நீ என்னுடைய கழனிக்குச் செல்லவேண்டும்.. அதன்மடையைச் சரியாகக்கட்டவேண்டும்" என்றுசொல்லி அனுப்பினர். உடனே, பாஞ்சால தேசத்தவனாகிய அந்த ஆருணி உபாத்தியாயரின் கட்டளையின்படி கழனிக்குச் சென்றான். பல வழிகளாலும் அக்கழனியின் மடையை அடைக்க முயன்றான். எவ்வளவு முயன்றும் அவனது முயற்சிமுழுவதும் வீணாயிற்று; மடையைக்கட்ட முடியவில்லை. பார்த்தான் ஆருணி; உபாத்தியாயரது கட்டளையை எப்படியாவது நிறைவேற்றவேண்டும் என்று உறுதிகொண்டான்; ஓர் உபாயத்தைக் கண்டறிந்தான்; அக்கழனியின் மடையிலே படுத்துக்கொண்டான்.

ஆருணி படுத்துக்கொண்டவுடன் கழனியிலிருந்து ஓடிக்கொண்டிருந்த தண்ணீர் போகாமல் நின்றுவிட்டது. கண்ட ஆருணி 'இந்த உபாயமும் நமது ஆசிரியரின் திருவருளாலேயே நமக்குத் தெரிந்தது' என்று மிக மகிழ்ந்து அங்கேயே படுத்துக்கொண்டிருந்தான்.

இப்படிச் சிலநாட்கள் செல்ல, ஒருநாள் உபாத்தியாயராகிய அயோதௌமியர் ஒன்றையும் அறியாதவர் போலத் தம்முடைய மாணுக்கர்களைப் பார்த்து, "குழந்தைகளே! பாஞ்சால தேசத்தவனை ஆருணி எங்கேபோனன்; வெகு நாட்களாகக் கண்ணிற் படவில்லையே" என்று கேட்டனர். அவர்கள் வணக்கஞ்செய்து "ஐயன்மீர், தாங்கள் சிலநாட்களுக்கு முன் 'கழனிக்குப்போய் மடையைக் கட்டு' என்று சொல்லி அவனை அனுப்பினீர்கள்; அன்று சென்றவன் இன்னும் வரவில்லை. எங்களுக்கு இதற்குமேல் ஒன்றும் தெரியாது" என்றுகூறினர்கள்.

கேட்டமுனிவர், தம்முடைய மாணுக்கர்களைப் பார்த்து, "வாருங்கள்; நாமும் அவன்போயிருக்கும் இடத்திற்குப் போவோம்" என்றுசொல்லி அவர்களையும் அழைத்துக் கொண்டு கழனிக்குச் சமீபத்திற் சென்றுர்; "ஓ, பாஞ்சால தேசத்து ஆருணியே! நீ எங்கே இருக்கிருய்? குழந்தாய் இங்கே வா!" என்று கூவி அழைத்தார். உபாத்தியாயரின் குரலைக்கேட்ட ஆருணி, அந்தக் கழனியின் மடையினின்றும் எழுந்து உபாத்தியாயரிடம் வந்துசேர்ந்து வணங்கி நின்றுன். "முனிவரரே! நான் இதோ நிற்கின்றேன்; தங்களது உத்தரவின்படி கழனியின் மடையைக் கட்டச்சென்ற நான், அந்த மடையில் இருந்து வெளியேபோகும் ஜலம் கட்டமுடியாமலிருந்தமையால், அதைக் கட்டுவதற்காக அந்த மடையிலேயே படுத்திருந்தேன். தங்களுடைய குரலைக்கேட்டு என்னை அழைப்பதாக அறிந்தேன். உடனே கழனியின் மடையைப் பிளந்துகொண்டு தங்களிடம் வந்தேன். நான் செய்யவேண்டிய காரியத்தைத் தெரிவித்து அருள வேண்டுகிறேன்" என்று கூறினன்.

ஆருணியின் அருஞ்செயலைக்கேட்ட ஆசிரியர், "குழந்தாய்! நீ கழனியின்மடையைப் பிளந்துகொண்டு எழுந்ததால் உனக்கும் பிளக்கிறவன் என்று பொருள்படும் உத்தாலகன் என்ற பெயர் நிலைத்திருக்கட்டும். உத்தாலக! என் சொல்லைத் தட்டாது கேட்டு நிறைவேற்றினமையால், நீ சிறந்த பெருமையை அடைவாய்; எல்லா வேதங்களும் எல்லாத் தருமசாஸ்திரங்களும் உனக்கு இனி எளிதில் விளங்கும். நீ எல்லா வித்தைகளிலும் வல்லவன் ஆவாய்" என்று கூறி ஆசிர்வதித்தார். உத்தாலகனும் ஆசிரியரிடம் விடை பெற்றுத் தன்னிஷ்டப்படியே சென்றான். ஆசிரியராகிய அயோதெளம்யரும் மாணாக்கர்களுடன் தமது ஆச்ரமத்துக்குச் சென்றார்.

தனது உடலுக்குத் துன்பத்தைத் தரக்கூடியது என்பதை அறிந்திருந்தும், ஆருணி ஆசாரியரின் கட்டளையை நிறைவேற்றியமையால் உத்தாலகன் என்ற சிறப்புப் பெயரையும் எல்லா வித்தைகளையும் பெற்று இன்புற்றான்; உத்தம மாணாக்கர்களுள் ஒருவன் என்றும் புகழ்பெற்றான்.

---

## 2. உபமன்யு.

அயோதெளம்யருக்குப் பல மாணாக்கர்கள் இருந்தார்கள் அல்லவா? ஆருணியைப் பரிசோதித்து உபதேசம் பண்ணி அனுப்பிய பிறகு ஒருநாள் அவர் உபமன்யு என்ற மற்றொரு மாணாக்கனை அழைத்தார். "குழந்தாய், உபமன்யு! நீ இன்றுமுதல் நம்முடைய பசுக்களை மேய்த்துவரவேண்டும். அதுதான் உனது வேலை" என்று கட்டளையிட்டு அனுப்பி

ர். உபமன்யு, உபாத்தியாயர் சொல்லியபடியே பசுக்களை மேய்க்கலானான். அவன் தினந்தோறும் பகல் முழுவதும் பசுக்களை மேய்த்துக்கொண்டிருப்பான்; சாயங்காலத்தில் குருவின் ஆச்ரமத்திற்கு வந்து வணங்கி அவருக்கு முன்னே நின்றுகொண்டிருப்பான்.

இப்படியாக, உபமன்யு உடல் தளர்ச்சியின்றிப் புஷ்டியாக இருப்பதைக்கண்ட அயோதர் "அப்பா! நீ எதை உண்டு ஜீவனம் செய்கிறாய்? உடல் பருத்திருக்கிறாயே?" என்று கேட்டார். உபமன்யு, "ஐயா! நான் பிக்ஷையெடுத்து அதனை உண்டு ஜீவனம் செய்கிறேன்" என்று மறுமொழி கூறினான். உபாத்தியாயர் திரும்பவும் அவனைப் பார்த்து "இனி, நீ எடுத்துவரும் பிக்ஷையை எனக்குக் காண்பியாமல் உண்ணவேண்டாம்" என்று கட்டளையிட்டார். உபமன்யு "அப்படியே ஆகுக" என்று சொல்லி மறுநாள் பிக்ஷை எடுத்துவந்து அதனை உபாத்தியாயருக்குக் காண்பித்தான். உபாத்தியாயர், அவன் எடுத்துவந்த பிக்ஷை முழுவதையும் வாங்கிக்கொண்டார். உபமன்யு மகிழ்ச்சியுடன் சென்று மறுபடியும் பிக்ஷை எடுத்து உண்டான்; வழக்கம்போலப் பசுக்களை மேய்த்துத் திரும்பிவந்தான்; ஆசாரியருக்கு முன்னேவந்து வணங்கி நின்றான்.

இவ்வாறு சில நாட்களாக ஒருநாள் தௌமியர், உபமன்யுவைப் பார்த்து "உபமன்யு! நீ எடுத்துவரும் பிக்ஷை முழுவதையும் நான் எடுத்துக்கொள்கிறேன். அப்படிச் செய்கையிலும் நீ புஷ்டியாகவே இருக்கிறாய். இப்பொழுது எப்படி ஜீவனம் செய்கிறாய்?" என்று கேட்டார். உடனே, உபமன்யு, "ஐயா! ஒவ்வொருநாளும் நான் முதலில் எடுக்கும்

பிக்ஷையைத் தங்களிடம் கொடுத்துவிட்டு இரண்டாம் முறை பிக்ஷை எடுத்து உண்டு ஜீவனம் செய்கிறேன்" என்று மறுமொழி கூறினன்.

உபாத்தியாயர் உபமன்யுவைப் பார்த்து; "மாணவ! இஃது ஒழுங்கான குருகுலவாசமாகாது. இந்தச் செய்கையால் நீ பிக்ஷை எடுத்து ஜீவனம் செய்கிற குருகுலவாஸிகளாகிய மற்ற மாணுக்கர்களுடைய ஜீவனத்திற்கு விரோதம் பண்ணியவனுகிறுய். இவ்வாறு நடப்பதனுல் நீ ஆசைக்காரனுகவும் ஆகிறுய்" என்று சொன்னுர். உபமன்யு, "நியாயமே, தாங்கள் சொல்லியதன் கருத்தைத் தெரிந்துகொண்டேன்" என்று சொல்லிப் பசுக்களை ஓட்டிக்கொண்டு சென்றுன். அன்றுமுதல் அவன் இரண்டாம் முறையாகப் பிக்ஷை எடுப்பது இல்லை. முதலில் எடுத்த பிக்ஷையை உபாத்தியாயரிடம் கொடுத்துவிடுவான். ஆனுல், பசுக்களின் பாலைக் குடித்து ஜீவனம் செய்யலானுன். வழக்கம்போலப் பகலில் பசுக்களை மேய்த்துச் சாயங்காலத்தில் ஆசாரியரிடம் வந்து வணங்கி நின்றுகொண்டிருந்தான்.

இவ்விதம் பலநாட்கள்செல்ல ஒருநாள், அயோதர் உபமன்யுவைப்பார்த்து "அன்பனே! உபமன்யு! நீயோ முதலில் எடுக்கும் பிக்ஷையை என்னிடத்தில் கொடுத்துவிடுகிறுய்; இரண்டாம் முறை பிக்ஷை எடுப்பதில்லை. இப்படியிருந்தும் உடம்பு தளர்ச்சியில்லாமல் இருக்கிறுய். இப்பொழுது நீ எவ்விதம் ஜீவனம் செய்கிறுய்?" என்று கேட்டார். உபமன்யு "பிரபுவே! நான் பசுக்களின் பாலைப் பருகி ஜீவனம் செய்கிறேன்" என்று விடை கூறினுன். உடனே உபாத்தியாயர், "இது சரியான முறையன்று. பாலை உபயோகிப்பதற்கு நான்

உனக்கு அனுமதி கொடுக்கவில்லையே" என்று சொன்னார். உபமன்யு "இனி நான் பாலை உபயோகப்படுத்துவதில்லை" என்று உறுதி கூறினன்; பசுக்களுடன் சென்றான்.

உபமன்யு, அன்றுமுதல் பசுக்கன்றுகள் பாலை ஊட்டிக் கொண்டிருக்கையில் வெளியே ஒதுங்கும் நுரைகளை உபயோகப் படுத்திக்கொண்டான். இம்மாதிரியாகப் பலநாட்கள் சென்றன. உபமன்யுவும் வழக்கம்போலவே பகலில் பசுக்களை மேய்ப்பதும், சாயங்காலத்தில் ஆசார்ருடைய சந்நிதியில் வந்து வணங்கி நிற்பதும் ஆகிய தன்னுடைய வேலைகளில் குறைவின்றிச் செய்துவந்தான்.

இந்நிலையில் ஒருநாள் முனிவர் உபமன்யுவைப் பார்த்தார்; "குழந்தாய்! நீ முதலில் எடுக்கும் பிக்ஷையையும் உண்ணவில்லை. அதனை என்னிடம் கொடுத்துவிடுகிறாய். இரண்டாம் முறையும் பிக்ஷை எடுக்கவில்லை. பாலையும் பருகவில்லை. இப்படியிருந்தும் உனது உடம்புமாத்திரம் புஷ்டியாகவே இருக்கிறது. நீ இப்பொழுது எப்படிஜீவனம் செய்து வருகிறாய்?" என்று கேட்டார். உடனே உபமன்யு, "ஐயா! நான் பசுக்கன்றுகள் பால்குடிக்கும்பொழுது ஒதுங்கும் நுரைகளைக் குடித்து ஜீவனம் பண்ணுகிறேன்" என்று சொன்னான். ஆசிரியர் சற்றுக் கோபங்கொண்டவர்போலப் பார்த்து "அப்பா! நம்முடைய பசுக்கன்றுகள் நல்ல குணமுள்ளவை. உன்னிடத்திலுள்ள பிரியத்தினால் அவை அதிகமாக நுரையை ஒதுக்குகின்றன. இதனால் அவை தங்களது ஆகாரத்தைக் குறைத்துக்கொள்ள நேரும். உன்னுடைய இச்செய்கை பசுக்கன்றுகளின் ஆகாரத்திற்கு இடையூறு செய்ததாக முடியும். இனி நீ நுரையையும் உபயோ

கப்பிடிக்கக் கூடாது" என்று கட்டளையிட்டார். அன்று முதல் உபமன்யு எவ்வித உணவும் இல்லாமலேயே பசுக்களை மேய்த்து வழக்கம்போல நடந்துவரலானன்.

இப்படிப் பல நாட்கள்செல்ல, உபமன்யு ஒருநாள் பசியினல் அதிகம் கஷ்டப்பட்டான். பசி வந்திடப் பத்தும் பறந்துபோம் அல்லவா? அவன் தனது கொடிய பசியைப் போக்கிக்கொள்ள எண்ணிக் காட்டிலே முளைத்திருந்த எருக்கு இலைகளைத் தின்ருன். உப்பு, கைப்பு, காரம் முதலிய நிரம்பி ஜீரணகாலத்தில் உஷ்ணத்தை உண்டுபண்ணக் கூடிய எருக்கிலைகளைத் தின்றதனல் உபமன்யு கண் கெட்டுக் குருடனுனன். அதனல் அவன் கண் தெரியாதவனுகவே சஞ்சாரம் பண்ணலானுன். அப்பொழுது வழியறியாமல் ஒரு பாழும் கிணற்றில் விழுந்தான். அன்று சாயங்காலம் வந்தது. வழக்கம்போல உபமன்யு தம் முன் வாராமையை அறிந்த ஆசிரியர் "உபமன்யு வரவில்லையா?" என்று கேட்டார். மாணுக்கர்கள் "அவன் பசுக்களுடன் சென்ருன்" என்று மறுமொழி கூறினர்கள்.

அப்பால், தௌமியர் சிஷ்யர்களைப் பார்த்து, "நான் உபமன்யு உபயோகப்படுத்திக்கொண்ட எல்லாப் பொருள்களையும் அவன் உபயோகப்படுத்தலாகாது என்று கூறி மறுத்து விட்டேன். அதனல் அவன் என்னிடத்திலே கோபத்துடன் வராமலிருக்கிருன் போலும்! வழக்கமாக வரவேண்டிய நாழிகை ஆனபிறகும் அவன் வாராமலிருப்பதால் நாம் அவனைத் தேடிவரவேண்டும்" என்று கூறி மாணுக்கர்களுடன் வனத்திற்குச் சென்ருர். குறிப்பான ஓர் இடத்திற்கு வந்து "அப்பா, உபமன்யுவே! நீ எங்கு

இருக்கிறாய்? என்னிடத்திலே கோபங்கொண்டு வராமல் இருந்துவிட்டாயா? குழந்தாய் வா!" என்று கூவி அழைத்தார். அந்தக் குரலைக் கேட்ட உபமன்யு, "பிரபுவே! நான் இந்தக்கிணற்றுக்குள் விழுந்துகிடக்கிறேன்" என்று உரத்த மறுமொழி கூறினான். உடனே ஆசிரியர் வேகமாகக் கிணற்றடிக்கு வந்து, "அப்பா! நீ ஏன் கிணற்றில் விழுந்தாய்?" என, உபமன்யு, "ஐயா! பசியைத் தணித்துக் கொள்ள எருக்கு இலைகளைத் தின்றேன்; அதனால் குருடனாகிவிட்டேன் போலும்" என்றான். கேட்ட தௌமியர் "உபமன்யு! நீ அங்கிருந்துகொண்டே அசுவினீ தேவர்களைத் துதி செய்வாயாக; அவர்கள் தேவ வைத்தியர்கள். உன்னைக் கண்ணுள்ளவனாகச் செய்வார்கள்" என்று கூறி அருளினார்.

குருவின் அனுக்கிரஹத்தைப்பெற்ற உபமன்யு அசுவினீதேவர்களைக் குறித்துச் சிறந்த மந்திரங்களால் துதிக்கத்தொடங்கினான்; "தேவவைத்தியர்களே! உங்களுடைய சிறந்த குணங்களைக்கூறித் துதிக்கும் சக்தி எனக்கில்லை. நான் அசக்தன்; மேலும், கண்ணை இழந்து வழி தெரியாமல் இந்த ஆழமுள்ள கிணற்றிலே விழுந்துகிடக்கிறேன்; காப்பாற்றும் சக்திவாய்ந்த உங்களை அடைக்கலம் புகுகின்றேன்; என்னை ரக்ஷித்தருளவேண்டும்" என்று துதித்தான்.

இவ்வாறு உபமன்யுவால் துதிக்கப்பட்ட அசுவனீ தேவர்கள் அவனிருக்குமிடத்திற்கு வந்தார்கள்; "அப்பா, உபமன்யு! நாங்கள் உன்மேல் அதிகப் பிரியமுள்ளவர்களாயிருக்கிறோம்; இதோ பக்ஷணமிருக்கிறது; இதைச் சாப்பிடு" என்று சொன்னார்கள். உடனே, அவன் "தேவர்

CS CamScanner

களே! பெருமைபொருந்திய நீங்கள் சொல்வது வீண் போகாது. ஆனால், நான் எனது குருவுக்குத் தெரியாமல் அவருடைய அநுமதியின்றி இந்தப் பக்ஷணத்தைத் தின்ன மாட்டேன்" என்று மறுத்துக்கூறினன். அப்பொழுது அந்த அசுவினிதேவர்கள் உபமன்யுவைப் பார்த்து, "குழந்தாய்! முன் ஒருகால் உனது உபாத்தியாயரும் எங்களை இவ்வாறு அப்போது குறித்துத் துதிசெய்தார். அவருக்கு நாங்கள் இப்படியே பக்ஷணத்தைக் கொடுத்தோம். அவர் இதைவாங்கித் தமது குருவுக்குத் தெரியாமல் சாப்பிட்டார்; அதனால் நீயும் இதைச்சாப்பிடு. அஃது உனது உபாத்தியாயர் செய்ததுபோன்றதே" என்று கூறினர்.

அசுவினிதேவர்கள் இவ்வாறு சொன்னபிறகும் உபன்யு "தேவர்களே! தயைசெய்து மன்னித்தருளவேண்டும். இவ்விஷயத்தில் உங்களை மறுபடியும் வேண்டிக்கொள்ளுகிறேன். நான் எனது குருவுக்குத்தெரியாமல் இந்தப்பக்ஷணத்தைச் சாப்பிடமாட்டேன்" என்று கண்டிப்பாகக்கூறினன்.

அப்பால், அசுவனிதேவர்கள் உபமன்யுவைப்பார்த்து, "அன்பனே! உனது குருபக்தியைக்கண்டு நாங்கள் மகிழ்வடைந்தோம். அதனால் உன்னிடம் அன்புள்ளவர்களானோம். உனது உபாத்தியாயருடைய தந்தங்கள் எஃகு என்றும் உலோகமாக இருக்கின்றன. உன்னுடைய தந்தங்கள் பொன்னக அமையட்டும். மேலும் நீ இழந்த கண்களையும்பெறுவாய்; வித்தைகளையும் அடைவாய்" என்று ஆசீர்வதித்தார்கள்.

உடனே, உபமன்யு, கண்களைப்பெற்றான்; கிணற்றி

லிருந்து கரையேறினான்; உபாத்தியாயரிடம் வந்து வணங்கி நின்று நடந்த விஷயங்களைத் தெரிவித்தான். அயோதௌமியர் உபமன்யுவினிடம் அன்புகூர்ந்து, "குழந்தாய்! நீ எனது பரீக்ஷையில் தேறினாய். அசுவனீதேவர்கள் சொன்னபடி உனக்கு வித்யாபலன் உண்டாகும்; நீ எல்லாவேதங்களிலும், எல்லாத் தருமசாஸ்திரங்களிலும் வல்லவனுவாய்" என்று அனுக்கிரஹம் பண்ணினார். உபமன்யுவும் குருவினிடம் விடைபெற்றுத் தனது கருத்தின்படியே சென்றான்.

---

## 3. பைதன்.

வடநாட்டிலே பைதன் என்ற ஒரு மாணுக்கன் இருந்தான். அவன் வித்தைபயிலுவதில் பேரார்வங்கொண்டவன்; 'எவ்வளவு கஷ்டப்பட்டாயிலும் சிறந்த கல்விவானாக வேண்டும்' என்பது அவனது உறுதியானகொள்கை. அதனால் அவன் முன்னே கூறிய அயோதௌமியரிடத்திலே வந்தான். வித்யாப்யாசம்பண்ண விரும்பிப் பலநாட்கள் அவரிடத்திலேயே இருந்துவரலானான்.

ஒருநாள், தௌமியர் பைதனை நோக்கி, "குழந்தாய்! நீ வந்து வெகுநாட்களாயின. எனக்கும் உன்னிடத்தில் பிரியம் அதிகம் உண்டு. எனினும், எனக்கு ஓய்வு கிடைக்கவில்லை. ஆதலின், நீ இன்னும் சிலகாலம் எனது வீட்டிலேயே பணிவிடைகளைச்செய்துகொண்டிரு. உரிய காலத்தில் நீ விரும்பிய வித்தைகளை அடைவாய். நீ உண்மையாக என்னிடமிருந்து வித்தைகளைப்பெறவிரும்பினால் நான் சொல்லுகிற வரையில் நீ மேலேசொன்னபடி இங்கேயே குற்றேவல்களைச்

செய்துவரவேண்டும். அப்பால் உனது இஷ்டம்" என்று சொன்னார். பைதன், வித்தை பயிலவேண்டும் என்பதில் அதிகம் ஆசைவைத்திருந்தான் ஆதலின் அவன் "அப்படியே ஆகுக" என்றுகூறி அங்கே ஏவப்படும் குற்றேவல்களைத் தட்டாமலும், வெறுப்பில்லாமலும் செய்துவரலானான்.

அக்கால், பைதன் எருதுபோலச் சுமைகளைச்சுமக்கும் வேலைகளையும் செய்யநேர்ந்தது. வெப்பம், பசி, தாகம் முதலிய துன்பங்களையும் பைதன் அனுபவிக்கலானான். எவ்வளவு துன்பத்திற்குள்ளானபோழ்தும் அவன் தனக்கு இட்டவேலைகளைத் தடையின்றிச்செய்து நிறைவேற்றுவதிலேயே கண்ணுங்கருத்துமாயிருந்தான். கருமமே கண்ணாயினார் எப்படிப்பட்ட தொல்லைகளையும் பொருட்படுத்தமாட்டார் என்பதைச் செய்கையிற்காட்டுபவன்போலப் பைதன் மிக்க பொறுமையுடன் நடந்துவந்தான். வெகுகாலத்திற்குப் பிறகு பைதனிடம் தௌமியருக்குக் கருணைபிறந்தது. அவர் பைதன் உபதேசம் பெறுதற்கு உரியன் என்று கருதினார். பைதனைத் தம்மருகில் அழைத்து, "குழந்தாய், பைத! நீ செய்த பணிவிடைகளால் நான் மிகமகிழ்ந்தேன். இதுவரையில் நான் உனக்கு இட்டவேலைகள் உன்னைப் பரீக்ஷிப்பதற்காகவே. உன்னைத் துன்பப் படுத்துவதற்காக அன்று. நீ இப்பொழுது புடம்போட்ட பொன்போலப் பிரகாசத்துடன் விளங்குகிறாய். இனி நீ ஸர்வஜ்ஞன். உனக்கு எல்லாவேதங்களும், எல்லாத் தருமசாஸ்திரங்களும், பாரவித்தைகளும் இனிது விளங்கும்" என்று பரமகருணையுடன் அனுக்கிரஹம் பண்ணினார். "காத்தனவெல்லாம் கடைமுறைபோய்க் கைகொடுத்து—வேத்தவைபின்மிக்குச்செயும்" என்றபடி பைதன் மிகச்சிறந்த கல்விவானானன். ஆசாரியருடைய திரு

வடிகளிலே விழுந்து வணங்கினன்; வாயாரப்புகழ்ந்தான்; ஆசாரியரது அனுமதியைப்பெற்றுப் பிரிய மனமில்லாமலே பிரிந்தான்; குருகுலவாஸம்பண்ணித் திரும்பிய பிரமசாரி செய்யவேண்டிய விதிப்படி ஸமாவர்த்தனம் என்னும் ஆசிரம பூர்த்தியை முடித்துக்கொண்டான்; விதிப்படி நல்ல குலத்தி லுதித்த நங்கையை மணந்து இல்லற தர்மத்தை மேற்கொண் டான். பல மாணுக்கர்களுக்குப் போதிக்கும் சிறந்த ஆசாரிய ஞனன்.

---

## 4. உதங்கர்.

முன்னே கூறப்பட்ட பைதர், இல்லற தர்மத்தை அனுஷ்டித்துவருகையில் "யாம்பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்" என்றபடி தாமும் பல மாணுக்கர்களுக்குச் சிறந்த விஷயங்களையும், சாஸ்திரங்களையும் உபதேசம்பண்ண விரும் பினர். அம்முறையில் அவரிடமும் பல மாணுக்கர்கள் வந்து உபதேசம்பெற்றுச் செல்லலானுர்கள்.

பைதர், குருகுலவாசத்தின் கஷ்டங்களையும், பொறுப் பையும் நன்கு அறிந்தவராதலின் அவர் தம்மிடம் உபதே சம் பெறவரும் மாணுக்கர்களைக் கஷ்டப்படுத்துவதில்லை. அவர்களுடைய மன நிலைமையையும், குணத்தையும் நாகரிக முறையில் பரீக்ஷைபண்ணுவார். எந்தக் காரணங்கொண்டும் உடலுறுப்புக்களுக்குத் துன்பந்தரும் பரீக்ஷைகளைச் செய்வ தில்லை.

இவ்வாருக, அவரிடம் வித்தைபயில உதங்கர் என்னும் பெயரினையுடைய ஒரு மாணுக்கர் வந்தார். அவர் வந்த சில

நாட்களுக்கெல்லாம் சிறந்த யாகம் ஒன்றைச் செய்யக்கருதிய ஜனமேஜயன், பௌஷ்யன் என்ற இரண்டு க்ஷத்திரியர்கள் பைதரிடம் வந்தார்கள்; தங்களுக்கு உபாத்தியாயராக இருக்குமாறு அவரை வேண்டிக்கொண்டார்கள். அவர்களது வேண்டுகோளை ஏற்று யாகத்தைச்செய்துவைக்கப்புறப்படும் பைதர், தம்மிடம் வித்தை பயில வந்திருக்கும் உதங்கரைப்பார்த்து, "குழந்தாய்! நான் தூரதேசத்திற்குப்போகிறேன். திரும்பி வருவதற்குப்பலநாட்கள்செல்லும். ஆகலின் நான் வரும்வரையில் நீ நமது கிருகத்தில் எது வேண்டியிருந்தாலும் அதைக் குறைவில்லாமற் செய்யவிரும்புகிறேன்" என்று கட்டளையிட்டுச்சென்றார். உதங்கரும் குருவின் கட்டளைப்படியே அந்தக்கிருகத்தில் இருந்து செய்யவேண்டிய காரியங்களைக் குறைவின்றிச் செய்துவரலானார்; எந்தக் காரணம்பற்றியும் தமது குருகுலவாசத்தில் தவறுதல் நேரலாகாது என்பதில் கண்ணுங்கருத்துமாய் நடந்துவரலானார்.

இந்நிலையில், ஒருநாள், உபாத்தியாயருடைய வீட்டில் உள்ளவர்கள் உதங்கரைப்பார்த்து ஒரு காரியத்தைச் செய்யுமாறு கேட்டுக்கொண்டார்கள். அது, சாஸ்திரத்திற்கு விரோதமாக இருந்தது. ஆதலின், உதங்கர் அதனைச்செய்ய உடன்படாமல் மறுத்துவிட்டார். அப்பொழுது அவர்கள் "உதங்க! இப்படி நீ மறுப்பது உனது ஆசாரியரது கட்டளையை மறுத்தலாகும். மறுமுறை ஆலோசித்துப்பார்; தட்டாமற்செய்" என்றார்கள். உடனே, உதங்கர் 'நமது ஆசிரியர் சாஸ்திரவிரோதமான அகாரியமாயிருந்தாலும் செய் என்று கூறவில்லை. ஆதலின், நாம் இதற்கு உடன்படவேண்டியதில்லை" என்று கருதி மறுத்துவிட்டார். வழக்கம்போல் மற்றக்காரியங்களைச் செய்துவரலானார்.

பிறகு வெகுகாலம் சென்றது. பைதர் தமது பயணத்தை முடித்துக்கொண்டு வீட்டுக்குத் திரும்பிவந்தார்; வீட்டுக்குத் திரும்பிவந்தார்; உதங்கருடைய சிறந்த குணங்களையும், செயல்களையும் அறிந்து மிகவும் சந்தோஷமடைந்தார். "அப்பா, உதங்கனே! உனது சிறந்த நடத்தை எனக்கு அதிக ஸந்தோஷத்தைக் கொடுத்தது. நீ எவற்றை அடைய விரும்புகிறாய்? தர்மத்தை விடாது அநுஷ்டித்துக் காட்டிய உனக்கு எனது அனுக்கிரஹம் பரிபூரணமாய்க் கிடைக்கும். நீ விரும்பியவற்றையெல்லாம் பெறுவாய். விடை தருகிறேன்; போகலாம்" என்று ஆசீர்வாதம்செய்து கூறினர்.

இவ்வாறு உபாத்தியாயர் கூறியதைக்கேட்ட உதங்கர், "பிரபுவே! நான் தங்களுக்குச் செய்யத்தக்கது யாது? ஆசாரியன் ஆசாரிய தர்மத்தையும், சிஷ்யன் சிஷ்ய தர்மத்தையும் விட்டுவிடலாகாது. 'எவர் தமது தர்மத்தை விட்டு விலகி நடந்தாலும் அவர் விரோதத்தை அடையநேரிடும்; இறக்கவும் நேரிடலாம்' என்று அறிவுடையோர் சொல்லுகின்றனர். ஆதலால், உங்களால் விடைகொடுக்கப்பெற்ற நான் குருவுக்கு வேண்டுகிற தனத்தைத் தக்ஷிணையாகக் கொடுக்க விரும்புகிறேன்" என்று கூறினர்.

அதற்கு விடையாக உபாத்தியாயர் உதங்கரை நோக்கி, "அப்பா, உதங்கா! நீ இன்னும் சிலகாலம் இங்கேயே இரு" என்றார். உதங்கரும் அப்படியே அங்கே தங்கியிருந்து பிறகு ஒருநாள் முன்போல "குருவே! உங்களுக்கு வேண்டிய குருதக்ஷிணையை நான் கொடுக்கவேண்டும். தயை செய்து இன்னது என்று கட்டளையிடுங்கள்; நிறைவேற்று

வேன்" என்று சொன்னான். அப்பால், பைதர் "குழந்தாய்! நீ குருதக்ஷிணை கொடுப்பதாகப் பலமுறைகளில் என்னைக் கேட்கிறாய். எனக்கு உன்னிடமிருந்து கிடைக்கவேண்டியது ஒன்றுமில்லை. உனது விருப்பம் நிறைவேற வீட்டிற்குள்ளே போ; உனது உபாத்தியாய பத்தினியிடம் கேள். அங்கே என்ன கேட்கப்படுகிறதோ அதனைக் கொடுத்து உனது கடமையை நிறைவேற்றிக்கொள்" என்று கட்டளையிட்டார்.

இப்படி உபாத்தியாயரால் கட்டளையிடப்பட்ட உதங்கர் உள்ளே சென்றார்; உபாத்தியாய பத்தினியை வணங்கினார். "தாயே! உங்களுக்குப் பிரியமான குருதக்ஷிணையைக் கொடுத்து எனது கடனைத்தீர்த்துக்கொள்ள விரும்புகிறேன்; நான் உங்களுக்குக் கொடுக்கவேண்டிய குருதக்ஷிணை இன்னது என்பதைத் தயைசெய்து தெரிவியுங்கள்" என்று கேட்டார். உடனே, அவர் "குழந்தாய், உதங்க! நீ பௌஷ்யன் என்னும் அரசனிடம் சென்று அவனுடைய மனைவி அணிந்துகொண்டிருக்கும் குண்டலங்களைக் கேட்டு வாங்கி வா. இன்றைக்கு நான்காவதுநாள் ஒரு விரதம் நிறைவேறவேண்டும். அதன்பொருட்டு நடைபெறும் சமாராதனையில் நான் அந்தக் குண்டலங்களை அணிந்துகொண்டு அழகாகப் பிராமணர்களுக்குப் பரிமாற விரும்புகிறேன். அதற்குள் அந்தக் குண்டலங்களை வாங்கிக் கொண்டுவா. இப்படிச் செய்தால்தான் உனது வித்தை பயன்படும். இல்லாவிட்டால் நீ நன்மையை அடையமாட்டாய்" என்று கூறினர்.

இவ்விதம் உபாத்தியாய பத்தினியால் உரைக்கப்பட்ட



CS CamScanner

உதங்கர், தமது கடமையை நிறைவேற்ற எண்ணி வெளிச் கிளம்பினார். பௌஷ்யராஜனது நகரத்தை நோக்கிச் செல்லலானார்; செல்லும்வழியில் ஒரு விருஷபத்தையும், அதன் மேலே ஏறிக்கொண்டிருந்த ஒரு சிறந்த புருஷனையும் கண்டார். அவன், தன்னிடமிருந்தபொருளைக்காட்டி "உதங்கரே! இவை இந்த விருஷபத்தின் சம்பந்தமுள்ளன; இவற்றை உண்பாயாக" என்று சொன்னான். உதங்கர் அதற்கு உடன்படவில்லை. உடனே, அந்தப்புருஷன் "உனது உபாத்தியாயரும் முன்னம் ஒருமுறை இவ்வாறு செய்திருக்கிறார்; நீயும் சந்தேகப்படாமல் உண்ணலாம்" என்றான். அதைக்கேட்ட பிறகு உதங்கர் அவற்றை உட்கொண்டார்; போகவேண்டிய அவசரத்தால் ஆசமனம் முதலிய சுத்திகாரியங்களைச் செய்ய மறந்துவிட்டுத் தம்வழியே சென்றார்; பௌஷ்யன் இருக்கும் இடத்தை அடைந்தார்; அவனை அணுகி ஆசீர்வதித்துத் தாம்வந்த செய்தியைத் தெரிவிக்கத் தொடங்கினார். பௌஷ்யன், உதங்கருக்கு வந்தனம் முதலிய உபசாரங்களைச்செய்து, "ஐயா! உமது விருப்பத்தைப் பூர்த்திசெய்து கொள்ள நீர் அந்தப்புரத்துக்குச்சென்று அரசியிடம் கேட்கக்கடவீர்" என்றான். உதங்கர் அந்தப்புரத்துக்குச் சென்றார்; அங்கே ராஜபத்னி உதங்கருடைய கண்களுக்குக் காணப்படவில்லை. உதங்கர் திரும்பவும் பௌஷ்யனிடம் வந்தார்; "அரசே! நீ என்னைப் பொய்யாக உபசரிப்பது சரியன்று; அந்தப்புரத்தில் உனது அரசி இல்லை; எனக்கு அரசி அகப்படவில்லை" என்று சொன்னார்.

இப்படி உதங்கர் சொன்னபிறகு பௌஷ்யன் சற்று நேரம் ஆலோசனை செய்தான்; உதங்கரைப் பார்த்து "ஐயரே! நீர் நிச்சயமாக ஆசாரங்குறைந்தவராக இருக்கிறீர்;

செவ்வையாக நினைத்துப்பாரும்; அந்த அரசி ஆசாரங் குறைந்தவனுக்கும், அசுத்தனுக்கும் தோற்றமாட்டாள்; கற்புள்ளவளாதலால் அவளைச் சுத்தமில்லாதவன் காண்பது அரிது" என்று சொன்னான். உடனே, உதங்கர் நடந்தவற்றை நினைத்துப் பார்க்கலானார்; "ஆம், நான் உண்டபிறகு அவசரத்தினால் ஆசமனம் செய்யவில்லை; அது அசுத்தம் தானே" என்று எண்ணினார்; நல்ல தீர்த்தத்தால் கைகால்களைக்கழுவிச் சுத்தஞ்செய்துகொண்டார்; கிழக்குமுகமாக இருந்து விதிப்படி ஆசமனஞ்செய்தார்; இரண்டுமுறை கண், காது, மூக்கு முதலிய இடங்களைத் துடைத்துக்கொண்டார்; அந்தப்புரத்திற்குச் சென்றார்; ராஜபத்னியைக் கண்டார்.

உடனே, பௌஷ்ய ராஜபத்னி உதங்கரை எதிர்கொண்டு சென்று நமஸ்காரம்பண்ணினாள்; "முனிவ! உமது வரவு நல்வரவாகுக; உங்களுக்கு நான் என்ன செய்யவேண்டும்? தயைசெய்து தெரிவித்தருளுங்கள்" என்று கூறினாள். உதங்கர் "தேவி! நீங்கள் அணிந்துகொண்டிருக்கும் இந்தக் குண்டலங்களை யாசித்துப் பெறவந்திருக்கிறேன்; அதனை நான் எனது குருபத்னிக்குக் குருதக்ஷிணையாகக் கொடுக்க வேண்டும். நீங்கள் தயைசெய்து எனக்கு அதனைக்கொடுத்துதவுவீர்களாக" என்று ராஜபத்னியைப் பார்த்துக் கேட்டார். அப்பால் ராஜமஹிஷி உதங்கரது நல்லஎண்ணத்துக்கு மெச்சினள்; தானம் செய்தற்குத் தகுந்தவர் என்று கருதினள்; தான் அணிந்திருந்த குண்டலங்களைக் கழற்றி உதங்கரிடம் கொடுத்து, "ஐயா! இந்தக் குண்டலங்களைப் பெறவேண்டுமென்று நாகராஜனாகிய தக்ஷகன் அதிக ஆசையும், முயற்சியும் கொண்டிருக்கிறான். நீர் இவற்றை அதிக ஜாக்கிரதையுடன் கொண்டுபோவீராக" என்று

சொன்னாள். உதங்கர் "அம்மணி! நீங்கள் கவலைப்பட வேண்டாம். நாகராஜனுகிய தக்ஷகன் என்னை வெல்லமாட்டான்" என்று சொல்லி ராஜபத்னியிடம் விடைபெற்றுக் கொண்டு பௌஷ்யனிடம் வந்தார்; தமது இஷ்டம் பூர்த்தியானதைத் தெரிவித்து மகிழ்ந்தார்.

பௌஷ்யன், உதங்கரைப் பார்த்து "மஹானே உலகத்திலே யோக்கியர்கள் கிடைப்பது அரிது; நீங்கள் பூஜிக்கத்தகுந்த சிறந்த அதிதியாதலால் சிராத்தம் செய்ய விரும்புகிறேன்; எனது வேண்டுகோளை ஏற்று நிறைவேற்றித்தர விரும்புகிறேன்" என்றான். உதங்கர் உடன்பட்டு "அரசே! நான் செல்லவேண்டிய இடம் அதிக தூரத்திலுள்ளது; காலமும் இல்லை: எவ்வளவு விரைவிலே செய்ய முடியுமோ அவ்வளவு விரைவில் செய்ய முயல்க" என்றார். பௌஷ்யன் "அவ்வாறே செய்வேன்" என்று சொல்லித் தனது சக்திக்கும் காலத்திற்கும் தக்கபடி அன்னம் முதலியவற்றால் உதங்கரை உபசரித்தான். அக்கால், படைத்த அன்னம் ஆறியிருந்தது. மேலும், அதில் ஒரு மயிரும் இருந்தது. பார்த்த உதங்கர் அதை அசுத்தமாயிருப்பதை அறிந்து "பௌஷ்ய! எனக்கு நீ அசுத்தமான அன்னத்தைக் கொடுத்தமையால் நீ கண்தெரியாதவன் ஆவாய்" என்று அவனுக்குச் சாபங்கொடுத்தார். சாபத்தைப் பெற்ற பௌஷ்யன், "முனிவ! குற்றமில்லாத அன்னத்தைத் தூஷித்ததனால் நீர் ஸந்ததியில்லாதவராவீர்" என்று உதங்கருக்குப் பிரதிசாபம் கொடுத்தான். உதங்கர் மறுபடியும் "அரசே! அசுத்தமான அன்னத்தைக் கொடுத்ததுடன் பிரதிசாபமும் கொடுப்பது நியாயமன்று. நீயே அன்னத்தைக் கண்ணாலே பார்" என்று சொன்னார்; பௌஷ்யன்

அந்த அன்னத்தைப் பார்த்தான்; அசுத்தமாயிருப்பதைத் தெரிந்துகொண்டான். 'அன்னம் கூந்தல் அவிழ்ந்த ஸ்திரீயினால் சமைக்கப்பட்டது; மயிருள்ளது; ஆறியிருப்பது; இவற்றால் அசுசியானதே' என்பதை அறிந்துகொண்ட பௌஷ்யன் உதங்கரைப் பார்த்து, "மஹிமைபொருந்தியவரே! தெரியாமல் மயிருள்ளதும் ஆறினதுமாகிய இந்த அன்னம் உமக்குக் கொடுக்கப்பட்டது. ஆதலால், நான் குருடனாகாமல் இருக்கும்படி ஆசீர்வதிக்கவேண்டும்; அறியாமல் நிகழ்ந்த குற்றத்தை மன்னிப்பீர்களாக" என்று வேண்டிக் கொண்டான்.

உடனே, உதங்கர், பௌஷ்யனைப் பார்த்து, "அரசே! நான் சொல்லியது பொய்யாகாது; நீ சிலகாலம் கண் தெரியாமல் இருந்து பிறகு கண் தெரிகிறவனாவாய்" என்று தமது சாபத்திற்குப் பரிகாரத்தைக் கூறினார்; மேலும், அரசனைப் பார்த்து, "பௌஷ்ய! நீ எனக்குக்கொடுத்த சாபமும் என்னைத் தொடாமலிருக்கவேண்டும்" என்று கேட்டுக் கொண்டார். பௌஷ்யன், "நான் சாபத்தை நீக்கமாட்டேன்; எனக்கு இன்னும் கோபம் அடங்கவில்லை. பிராமணனுக்கு மனம் வெண்ணெய் போன்றிருக்கிறது; வாக்கில் கூரான முனையுள்ள கத்தி வைக்கப்பட்டிருக்கிறது. க்ஷத்திரியனுக்கு இவ்விரண்டும் மாறாக இருக்கின்றன. அவனுக்கு வாக்கு வெண்ணெய் போன்றது; மனம் கூரான கத்திபோன்றது. இவ்வுண்மை உமக்குத் தெரியாதா? இம்முறையில் க்ஷத்திரியனாகிய எனது உள்ளம் கொடியதாதலால் உண்மையைத் தெரிந்துகொண்டபிறகும் என்னால் கோபத்தை அடக்க முடியவில்லை; அதனால் சாபத்தையும் மாற்றக்கூடாதவனாக இருக்கிறேன்" என்று சொன்னான். கேட்ட உதங்கர்,

"அரசே! நீ அளித்த அன்னம் அசுசியாயிருந்ததை நீயே கண்டு பிறகு என்னை வேண்டினாய்; 'குற்றமில்லாத அன்னத்தைத் தூஷித்தமையால் ஸந்ததியில்லாமற் போவாய்' என்று தான் சாபங்கொடுத்தாய். அன்னத்தில் குற்றமிருந்தது உண்மையானபிறகு அந்தச் சாபம் என்னை என்ன செய்யும்? போகிறேன்" என்று சொல்லி அந்தக்குண்டலங்களை எடுத்துக்கொண்டு புறப்பட்டார்; உபாத்தியாயரது வீடுஇருக்கும் இடத்தை நோக்கிச் செல்லலானார்.

வழியில், உதங்கர் வஸ்திரமில்லாத ஒரு பௌத்த ஸந்யாஸி அடிக்கடி காணப்படுவதும் மறைந்துபோவதுமாகத் தம்மைத் தொடர்ந்துவருவதைக் கண்டார்; அவரைப்பற்றிச் சிறிதும் கவனிக்காமல் போய்க்கொண்டே இருந்தார். அப்பொழுது உதங்கருக்கு ஜலமிருக்கும் இடத்திற்குச் செல்ல வேண்டியது அவசியம் நேர்ந்தது. உடனே, அவர் தமது கையிலிருந்த அந்தக் குண்டலங்களைப் பூமியிலே வைத்துவிட்டு ஜலமிருக்கும் இடத்தை நோக்கிச் சென்றார். ஸந்யாஸி விரைவாகவந்து அந்தக் குண்டலங்களை எடுத்துக்கொண்டு ஓடினான். உதங்கர் ஜலகாரியத்தை முடித்துக்கொண்டு வந்தார்; குண்டலங்களை எடுத்துக்கொண்டு அந்த ஸந்யாஸி ஓடுவதைக்கண்டார்; பின்தொடர்ந்து அவனைப் பிடிப்பதற்காக விரைந்து சென்றார். ஸந்யாஸிக்குச் சமீபத்திலே சென்றதும், தப்பிஓட வழியில்லாமையால் ஸந்யாஸியாகவந்த தக்ஷகன் தனது சுயஉருவத்தைஎடுத்துக்கொண்டு பூமியிலே தெரிந்த ஒரு பெரியவளைக்குள் விரைவாகப் புகுந்தான்; நாகலோகத்துக்குச்சென்று தனது வீட்டை அடைந்தான்.

அப்பொழுது உதங்கருக்கு அந்தப்பௌஷ்ய ராஜபத்னி

கூறியது நினைவிற்குவந்தது; குண்டலங்களை எடுத்துக்கொண்டுசென்றவன் தக்ஷகனே என்று எண்ணினர்; அவன் நுழைந்த வளையை ஒருதடியினுல் தோண்டலானுர். அவரால் தோண்டமுடியவில்லை. அவர் கஷ்டப்படுவதை அறிந்த இந்திரன், தனது வஜ்ராயுதத்தைப் பார்த்து, “நீ போய் உதங்கருக்கு உதவிசெய்” என்று ஏவினுன். உடனே, வஜ்ரம் அந்தத்தடிக்குள் தனது சக்தியுடன் பிரவேசித்தது; வளையைப் பிளந்தது. வழியைக்கண்ட உதங்கர் மேலே தொடர்ந்து சென்றுர்; ஆயிரக்கணக்கான மாடமாளிகைகள் நிரம்பிய நாகலோகத்தைக் கண்டார்; நாகங்களைக்குறித்துப் பலவகையாகத் துதித்தார். நாகத்தினிடமிருந்து குண்டலங்கள் கிடைக்கவில்லை. பின்னும், மிக்க வருத்தத்துடன் இந்திரனைத் துதித்தார். ஒரு மஹாபுருஷன் ஒரு குதிரையின்மேல் ஏறிக்கொண்டு உதங்கருக்கு முன்னே தோன்றினுன்; உதங்கரைப் பார்த்து “உம்மிடத்தில் எனக்குப் பிரியம் அதிகமாயிருக்கிறது. உமக்கு வேண்டியது என்ன?” என்று கேட்டான். உதங்கர் தமது வரலாற்றைக் கூறி “எனக்கு நாகங்கள் வசமாகவேண்டும்” என்று கேட்டார். அந்தப் புருஷன் “இந்தக்குதிரையின் பின்புறத்தில் ஊதுவீராக” என்றுன். உதங்கரும் அப்படியே செய்தார். உடனே அந்தக் குதிரையின் மயிர்க்கால்களிலிருந்து புகையுடன் நெருப்புக் கிளம்பியது. அவற்ருல் நாகலோகம் முழுவதும் தாங்கமுடியாத வெப்பம் உண்டாகியது. நாகங்கள் உஷ்ணத்தைத் தாங்கமுடியாமல் தவித்தன. அவற்றின் அரசனுகிய தக்ஷகன் நடுநடுங்கினுன்; மிகுந்த பரபரப்புடன் குண்டலங்களை எடுத்துக்கொண்டு விரைவாக உதங்கரிடம் வந்தான். “முனிவரே! என்னை மன்னியுங்கள்; இந்தக் குண்டலங்களை பெற்றுக்கொள்ளுங்கள்” என்று சொன்னுன். உதங்கர்;

அந்தக் குண்டலங்களை வாங்கிக்கொண்டு 'நான் எனது ஆசாரிய பத்னியிடம் இக்குண்டலங்களைச் சேர்ப்பிக்கவேண்டியநாள் இன்றைத்தினமாயிற்றே; இனி நான் எப்படி அதிக தூரத்திலுள்ள எனது உபாத்தியாயரின் வீட்டிற்குச் செல்வேன்' என்று சிந்திக்கலானார். அப்பொழுதும் அந்தக் குதிரையின்மேலிருந்த புருஷன், "உதங்கரே! அஞ்ச வேண்டாம். நீர் இந்தக் குதிரையின்மேல் ஏறிக்கொள்ளும். குறித்தகாலத்தில் உம்மை அங்கே கொண்டுபோய்ச் சேர்த்துவிடும்" என்றான். உதங்கர் "அப்படியே ஆகட்டும்" என்று கூறி அந்தக் குதிரையின்மேல் ஏறிக்கொண்டார்; உபாத்தியாயரின் வீட்டிற்கு வந்தார். அப்பொழுது ஸ்நானம்செய்து கூந்தலை ஆற்றிக்கொண்டிருக்கும் உபாத்தியாயபத்னி 'இன்னும் உதங்கன் வரவில்லையே' என்று எண்ணிச் சாபங்கொடுக்க எண்ணினார். அந்தச் சமயத்தில் உதங்கர் வீட்டிற்குள் நுழைந்தார்; உபாத்தியாயபத்னியினுடைய பாதங்களிலே விழுந்து வணங்கினார்; குண்டலங்களைக் கொடுத்தார். உடனே, உபாத்தியாயபத்னி, "உதங்கா! நீ சரியான சமயத்தில் வந்தாய். குழந்தாய்! உனது வரவு நல்வரவாகுக. இப்பொழுது நீ வாராமலிருப்பாயானால் நான் உன்னைக் கோபத்தால் சபித்திருப்பேன். உனக்கு எல்லா நன்மைகளும் உண்டாகும்; நீ காரியஸித்தியையும் அடைவாய்" என்று ஆசீர்வசனம் கூறினார். உதங்கர் அப்பால் ஆசாரியரையும் முறைப்படி வணங்கினார்.

பைதர் உதங்கரைப் பார்த்து, "குழந்தாய்! நீ சுகமாக வந்துசேர்ந்தாயா? ஏன் இவ்வளவு தாமதம் ஆகியது?" என்று கேட்டார். உதங்கர், "குருவே! வழியில் நாகராஜனாகிய தக்ஷகன் குண்டலங்களை அபகரித்துக்கொண்டு சென்

Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY
THIRUVANMIYUR, MADRAS



ளன். அதனால் உண்டான இடையூறு மிகப்பெரிது. தக்ஷகனைப் பின்தொடர்ந்து பாதாளலோகத்திற்குப் போனேன்; அங்கே பல அதிசயங்களைக் கண்டேன்; கடைசியாக ஒரு புருஷனைக் கண்டேன்; ஒரு பெரிய குதிரையையும் பார்த்தேன். இவற்றையன்றி நான் பௌஷ்யராஜனிடம் செல்லும் பொழுது வழியில் ஒரு விருஷபத்தையும், ஒரு புருஷனையும் கண்டேன். அந்தப் புருஷன் அவ்விருஷப சம்பந்தமுள்ள வற்றை உட்கொள்ளுமாறு சொன்னான்; நானும் அப்படியே செய்தேன். இவற்றின் வரலாறு எனக்கு விளங்கவில்லை. தயைசெய்து தெரிவித்தருளவேண்டும்" என்று வேண்டிக் கொண்டார். அப்பால், பைதர், "உதங்கா! உன்னால் காணப்பட்ட அதிசயங்கள் காலபேதங்கள். நீ கண்ட புருஷன் பர்ஜன்யன் என்ற மேகதேவதை; குதிரை அக்னிதேவன்; வழியிலே கண்ட விருஷபம் ஐராவதம் என்னும் சிறந்தயானை; அதன்மேல் ஏறியிருந்த புருஷன் இந்திரன். விருஷப சம்பந்தமுள்ளதாக நீ உட்கொண்டது அமிர்தம். அதனாலேதான் நீ நாகலோகத்தில் அழியாமலிருந்தாய். இந்திரன் எனக்கு நண்பன்; உன்னிடத்தில் மிக்க கருணையுடன் இந்த உதவியைச் செய்தான். அதனாலேதான் நீ மறுபடியும் குண்டலங்களைப் பெற்றாய். ஸௌமுகனே! இனி உனது கருத்தின்படியே செல்லலாம். உனக்கு அனுமதி கொடுக்கிறேன். நீ எல்லா மேன்மையையும் அடைவாய்" என்று கூறினார். உதங்கர் வெளிக்கிளம்பினார்; தக்ஷகன் தனக்குச்செய்த இடையூறுகளை எண்ணி அவனுக்குப் பதில் செய்ய முயன்றார்; ஜனமேஜய மஹாராஜாவை அடைந்து ஸர்ப்ப யாகத்தைச் செய்வித்தார். தமது கருத்து நிறைவேறியவராகி மகிழ்ந்தார்.

உதங்கர், முறைப்படி குருகுலவாஸம் பண்ணி வித்தைகளில் சிறந்தவரானார்; உபாத்தியாயர் உத்தரவு கொடுத்த பிறகும் சற்று அகம்பாவத்தால் குருதக்ஷிணை கொடுக்க விரும்புவதாக மறுத்துக் கூறினமையால் சிற்சில கஷ்டங்களை அனுபவித்தார்; அந்த எண்ணமும் குருவின்பொருட்டுக் கடமையைக்குறித்துத் தோன்றியதாதலின் கடைசியில் அவருக்கு எல்லாம் இனிமையாகவே முடிந்தன. முடிவில் அவர் எல்லாம் குருவின் கிருபையால் நிகழ்ந்தனவே என்ற நம்பிக்கையுடன் விடைபெற்றுக்கொண்டார்; உதங்கமஹரிஷி என்ற சிறப்புப் பெயரையும் பெற்றார். உள்ளன்புடன் உண்மையாக ஆசாரியருக்கு வழிபட்டுவந்தால் வரும் இடையூறுகளை நீக்கி அடையவேண்டிய எல்லா இன்பங்களையும் அடையலாம் என்பது இதனால் விளங்குகிறது.

---

## 5. ஏகலவ்யன்.

வடநாட்டிலே அங்கிரஸவம்சத்தாரில் சிறந்தவரான துரோணர் என்ற ஓர் ஆசிரியர் இருந்தார். அவர் வேத வேதாங்கங்களைக்கற்றுத் தேர்ந்திருந்ததுபோலவே தனுர் வித்தையிலும் வல்லவராயிருந்தார். அவருக்கும் அவரது நண்பனும் பாஞ்சால தேசத்தரசனுமான துருபதனுக்கும் நேர்ந்த மனத்தாங்கலால் அவர் ஹஸ்தினபுரத்திற்கு வந்தார். அப்பொழுது ஹஸ்தினபுரத்திலிருந்து குருகுல பிதாமஹராகிய பீஷ்மர் பிரதிகாவலராக ஆண்டுவரலானார்.

குருகுலத்தின் ராஜகுமாரர்களாகிய பாண்டவர்களும், கௌரவர்களும் ஆயுதப்பயிற்சியைப் பெறவேண்டிய

வயதுள்ளவர்களாக இருந்தார்கள். அவர்கள் ஒருநாள் சமீபத்திலுள்ள காட்டிற்குச்சென்று பந்துவிளையாடுகையில் அது தவறிக் கிணற்றில் விழுந்துவிட்டது. அவர்களால் அந்தப் பந்தை எடுக்கமுடியவில்லை. துரோணர் அதனை அம்புகளால் எடுத்துக் கொடுத்தார். இந்தச் செய்தியைப் பேரன்மார்களால் அறிந்த பீஷ்மர் துரோணரை ராஜகுமாரர்களுக்கு வில்வித்தையைக் கற்றுக்கொடுக்கும் ஆசாரியராக நியமித்தார்.

துரோணர், அவர்களுக்குப் பல சிறந்த முறைகளையும் எளிதில் விளங்கும்படி போதித்துவரலானார். அவரிடம் வில்வித்தை பயிலுவோர்களுள் அர்ச்சுனன் மிகச்சிறந்தவனானான். அவன் ஆசிரியர் கற்றுக்கொடுப்பவற்றை விரைவில் அறிந்துகொள்வதுடன் அவற்றை மறவாமல் பிறகு செய்துகாட்டும் திறமையுள்ளவனுமானான். இதனால் துரோணருக்கு அர்ச்சுனனிடத்தில் அதிகப் பிரியம் உண்டாயிற்று. மிகச்சிறந்த புதிய முறைகளையும் அவர் அர்ச்சுனனுக்குப் போதிக்கலானார். அதனால் கௌரவர்கள் துரோணர்மீது குறைகூறத் தொடங்கினார்கள்.

இப்படி அர்ச்சுனன் வில்வித்தையிலே சிறந்துவிளங்குகையில் பல ராஜகுமாரர்களும், கர்ணனும் துரோணரிடம் வில்வித்தை பயிலவந்தார்கள். என்றாலும், அர்ச்சுனனே எல்லாரிலும் சிறந்து விளங்கினான். துரோணரும் பிறருக்குத் தெரியாத பல முறைகளைத் தனியே அர்ச்சுனனுக்கு மாத்திரம் போதித்தும் வந்தார்.

இந்நிலையில் ஹிரணியதனுஸ் என்ற வேடஅரசனுடைய

மகனான ஏகலவ்யன் துரோணருடைய புகழைக் கேள்விப்பட்டான்; அவரைச் சரணமாக அடைந்து வில்வித்தையைக் கற்றுக்கொடுக்குமாறு வேண்டிக் கொண்டான். துரோணர் அவனைச் சிஷ்யனாக அங்கீகரிக்காமலிருந்தார். மேலும், அவனைப்பார்த்து, "வேடகுமார! நீ இயற்கையிலே பாணங்களை விடுவதில் சமர்த்தன். நீ எனது சிஷ்யன் தான். வீட்டுக்குப் போகலாம்" என்று அனுமதி கொடுத்தார். பக்தனாகிய ஏகலவ்யன் ஆசாரியரை வணங்கினான்; விட்டுப்பிரிய மனமில்லாமலே காட்டுக்குச் சென்றான்; துரோணரைப் போல மண்ணால் ஒரு பதுமையைச் செய்தான்; அந்த உருவத்தினிடத்தில் ஆசாரியருக்குச் செய்யவேண்டிய வந்தனை வழிபாடுகளைச்செய்து பாணங்களையும் அஸ்திரங்களையும் பயிலத்தொடங்கினான். மிகச் சிறந்த ஆசாரிய பக்தியோடு முயலும் ஏகலவ்யனுக்கு எல்லா முறைகளும் இயல்பாகவே சிறந்த லாகவத்துடன் அனுபவத்திற்கு வந்தன. ஏகலவ்யனும் தனது ஆசாரியரிடத்தில் அளவுகடந்த பக்தியுள்ளவனாகிப் பயின்றுவந்தான்.

இப்படியாகச் சிலகாலம் சென்றது. ஒருநாள் துரோணரிடம் அனுமதிபெற்றுக் கௌரவர்களும், பாண்டவர்களும் தேர்களிலேறி வேட்டைக்குப் புறப்பட்டனர். அப்பொழுது ஆயுதங்களைத்தாங்கிய ஒரு மனிதன் ஒருநாயுடன் தனியாகப் பாண்டவர்களைப் பின்தொடர்ந்து சென்றான். இராஜகுமாரர்கள் தங்களுக்குத் தெரிந்த பலவகைப்பட்ட ஆயுதப் பயிற்சிகளைச் செய்யக்கருதி அந்த வனத்தில் ஸஞ்சாரம் பண்ணலானார்கள். அக்கால் அந்தநாய் ஏகலவ்யன் என்னும் வேடச் சிறுவனிடம் சென்றது; அவனைக்கண்டு குரைத்துக் கொண்டு அவனருகில் நின்றது. அவன் அஸ்திரப்பிரயோ

..த்தில் தான் பெற்றிருந்த லாகவத்தைக் காட்டிக் குரைக் கின்ற அந்த நாயின்வாயில் பதியும்படி ஏழுபாணங்களை ஒரு கொத்தாக அமையும்படி செலுத்தினன். அந்த நாய் பாணங்கள் நிரம்பிய வாயுடன் பாண்டவர்களிடம் வந்தது. வீரர்களான பாண்டவர்கள் அதைக்கண்டு மிகுந்த ஆச்சரியங் கொண்டார்கள்; அஃது ஒரு வேடனால் செய்யப்பட்டது என்று அறிந்து அவனது சிறந்த லாகவத்தைக் கண்டு வெட்கப்பட்டார்கள்; அவனையும் கொண்டாடினார்கள். உடனே, அவர்கள் அந்தவேடனைத் தேடிச்சென்று கண்டார் கள். பார்வைக்கு விகாரமாக இருக்கும் அவனை அவர்கள் இன்னான் என்று அறியவில்லை. அதனால் அவர்கள், "வேடச் சிறுவனே! நீ யார்?" என்று கேட்டார்கள். அவன் அரச குமாரர்களைப் பார்த்து, "வீரர்களே! நான் ஹிரண்யதனுஸ் என்னும் வேடர்க்கரசனுடைய புத்திரன்; தனுர்வேதத்தை அப்பியாஸம் செய்துகொண்டிருப்பவன்; துரோணருடைய சிஷ்யன்; ஏகலவ்யன் என்பது எனது பெயர்" என்றான். அப்பால் பாண்டவர்கள், தாங்கள் வனத்திலே கண்ட ஆச்ச ரியம் எல்லாவற்றையும் நடந்தபடி துரோணரிடம் தெரிவித் தார்கள்.

இப்பால், அர்ச்சுனன் மாத்திரம் எப்பொழுதும் ஏகலவ் யனையே நினைத்துக்கொண்டிருந்தான்; ஒருநாள் துரோண ரைத் தனிமையிலே சந்தித்தான்; "குருவே! நீங்கள் என்னைத் தழுவிக்கொண்டு 'எனக்கு உன்னைக்காட்டிலும் சிறந்தவனும், பிரியமுள்ளவனும் ஆகிய சிஷ்யன் இல்லை' என்று சொன்னீர்கள். இப்பொழுது வேடராஜகுமாரனாகிய ஏகலவ்யன் என்னையும் பிறவில்லாளிகளையும்விடச் சிறந்த பராக்கிரமமுள்ள வேறொரு சிஷ்யனாக உங்களுக்கு அமைந்

இருக்கின்றானே?" என்று கேட்டான். துரோணர் அந்த வரலாற்றைப்பற்றிச் சிறிதுநேரம் சிந்தித்துப் பார்த்தார்; அர்ச்சுனனை அழைத்துக்கொண்டு அந்த வேடகுமாரன் இருக்குமிடத்திற்கு வந்தார்; உடல்முழுவதும் அழுக்குப் படிந்து ஜடை, மாவுரி முதலிய கோலங்களுடன் பார்வைக்கு விகாரமாக இருக்கும் அவன் வில்லும் கையுமாக இடைவிடா மல் அம்புகளை விடுத்துக்கொண்டிருப்பதைக் கண்டார்; அவனிடம் நெருங்கிவரலானார். ஏகலவ்யன் தன்னைநோக்கி வரும் துரோணரைக் கண்டான்; எதிர்கொண்டுசென்று வெட்டுண்டமரம்போல அவருடைய பாதங்களிலே வீழ்ந்து வணங்கினான்; அவரை விதிப்படிப் பூஜித்துத்தன்னைப் பற்றித் தெரிவித்துக்கொண்டான்; அவருக்கு முன்னே கூப்பியகையுடன் வணங்கி நின்றான்.

உடனே, துரோணர் ஏகலவ்யனை நோக்கி "வீரனே! நீயே என்னை ஆசிரியர் என்று ஒத்துக்கொண்டனை. எனது மாணாக்கனான நீ வித்தையிலே தேர்ந்திருக்கின்றமையால் அதன்பொருட்டு எனக்குக் குருதக்ஷிணையைக் கொடுக்க வேண்டும்" என்று சொன்னார். ஏகலவ்யன் மிக்க சந்தோஷத்துடன் "குருவே! நான் என்ன கொடுக்கவேண்டும்; தயைசெய்து திருவாய்மலர்ந்தருள்வீர்களாக" என்று விரைந்து கேட்டான். துரோணர் அர்ச்சுனனது சந்தேகத்தை நீக்க விரும்பியவர்போல "ஏகலவ்ய! நீ உனது வலக்கைப் பெருவிரலைக் கொடுக்கவேண்டும்" என்று சொன்னார். சொல்லில்தவறாதவனாகிய வேடகுமாரன் துரோணருடைய அந்தக் கொடுஞ்சொல்லைக்கேட்டும் மனந் தளராதவனானான்; தனது சொல்லைக் காப்பாற்றுவதற்காக ஒன்றையும் சிந்திக்காமல் தனது வலக்கைப்பெருவிரலை வெட்டினான்; மலர்ந்த

முகத்தோடு உற்சாகமுள்ளவனாகி அதனைத் துரோணரிடம் கொடுத்தான். அன்றுமுதல் அர்ச்சுனன் கவலையற்றவனானான். ஏகலவ்யன் ஆசாரியரான துரோணரின் மகிமையால் மற்றைவிரல்களால் விற்பயிற்சியில் தேர்ந்தவனானான்; 'சிறந்த குருபக்தியுள்ளவன்' என்ற புகழினையும் பெற்றான்.

---

CamScanner

# II. அரசிளங்குமாரின் ஆயுதப் பயிற்சியும் அரங்கேற்றமும்.

பீஷ்மர், துரோணரைக் குருவாக அங்கீகரித்தார். பீஷ்மர், பாண்டவர்களுடன் அந்தப் பேரன்மார்களனைவரையும் அழைத்து, "இவர்கள் உமது சிஷ்யர்கள்" என்று சொல்லிப் பலவகையான தனங்களோடு சாஸ்திரப் பிரகாரம் துரோணருக்கு அர்ப்பணஞ் செய்தார். அப்போது, துரோணர், புத்திமான்களுட் சிறந்தவராகிய பீஷ்மரை நோக்கி, "ஆயுதங்கள் தெரிந்தவரும் சிறந்த அறிவுள்ளவரென்று எல்லாராலும் மதிக்கப்பெற்றவருமாகிய கிருபாசாரியரும் இருக்கிறார். அரசரே! நான் இருப்பதில் அந்தப் பிராமணர் மனவருத்தத்தை அடைவாராயின் நான் உங்களிடம் கொஞ்சம் தனத்தை யாசித்துப்பெற்றுக்கொண்டு ஸந்தோஷமடைந்து வந்தபடியே என் ஆச்சிரமத்திற்குச் செல்வேன்" என்று சொன்னார். இவ்வாறு சொன்னவுடன், யுத்தவீரரிற் சிறந்தவரான பீஷ்மர், பிராம்மணசிரேஷ்டரும் ஆசாரியர்களில் முதன்மையானவரும் ஆயுதம் தெரிந்தவர்களுள் மேலானவருமாகிய துரோணரை நோக்கி, "கிருபர் இருக்கட்டும். அவர், நான் எப்பொழுதும் பூஜிப்பதற்கும் போஷிப்பதற்கும் உரியவர். நீர் என்னுடைய பேரன்மார்களுக்குக் குருவாக இரும். உம்மைத்தான் ஆசாரியராக நான் நினைக்கிறேன். இந்தக் குமாரர்களை அங்கீகரித்துக்கொள்ளும். இவர்களை எப்போதும் வைத்துக்கொண்டு அஸ்திரங்கள் தெரிந்தவர்களாகச் செய்யக்கடவீர்" என்று சொன்னார். மனிதர்களிற் சிறந்தவரும் மஹாபராக்ரமசாலியுமான துரோணர் பீஷ்மரால் கௌரவிக்கப்பட்டபிறகு, கௌரவர்களின்

கிருஹத்தில் அர்க்கியம் பாத்யம் முதலிய உபசாரங்களை அடைந்து களைப்பாறினர். அந்தக் குருவானவர் களைப்பாறினபின், பீஷ்மர், தம்பேரன்மார்களாகிய குருவம்சபுத்திரர்களை அழைத்துக்கொண்டுவந்து பலவகைப்பொருள்களுடன் சிஷ்யர்களாகக்கொடுத்தார். பிரபுவாகிய பீஷ்மர், வேண்டிய பண்டங்களினுல் செம்மையாக நிரப்பப்பட்டதும் தனதானியங்கள் நிரம்பினதுமாகிய வீட்டை மிகுந்த ஸந்தோஷத்துடன் துரோணருக்குக் கொடுத்தார். சிறந்தவில்லாளியான அந்தத் துரோணர் மனமகிழ்ந்து பாண்டுபுத்திரர்களும் திருதராஷ்டிர புத்திரர்களுமாகிய அந்தக் கௌரவர்களைச் சிஷ்யர்களாக ஏற்றுக்கொண்டார். துரோணர் ஸந்தோஷமடைந்து அவர்களெல்லாரையும் அங்கீகரித்து யாருமில்லாமல் தாம் மட்டும் தனித்திருக்கையில் பாதங்களில் வந்தனஞ்செய்த அவர்களை நோக்கி, "குற்றமற்றவர்களே! நான் விரும்பிய காரியம் ஒன்று என்னுள்ளத்தில் இடைவிடாமலிருக்கிறது. நீங்கள் அஸ்திரங்களில் தேர்ந்தபின் எனக்கு அதனை நிறைவேற்றவேண்டும். அதைப்பற்றி உறுதி சொல்லுங்கள்" என்று சொன்னர். அதைக்கேட்டு அந்தக் கௌரவர்கள் ஒன்றும் பேசாமலிருந்தனர். அர்ச்சுனன் மட்டும் அவர் கேட்டதையெல்லாம் வாக்குத்தத்தம் செய்தான். அதனுல், துரோணர் அப்போதே அர்ச்சுனனைப் பலமுறை உச்சிமோந்து அன்புடன் தழுவிக்கொண்டு உடனே ஆனந்தக்கண்ணீர் சொரிந்தார். துரோணர் அசுவத்தாமாவை அழைத்து, "அர்ச்சுனனை உனக்குச் சிநேகிதனுக அறி. என்னுல் கொடுக்கப்பட்ட இவனை நீ வாங்கிக்கொள்" என்று சொன்னர். பாண்டுபுத்திரனுகிய அர்ச்சுனன், 'நல்லது, நல்லது' என்று சொல்லி அசுவத்தாமாவைக்

5

கட்டிக்கொண்டு துரோணரைப் பார்த்து, "பிராம்மண சிரேஷ்டரே! இன்று முதல் நியாயப்படி உமக்கு உட்பட்டவனாக இருக்கிறேன். நான் சிஷ்யன். பிராம்மணோத்தமரே! உமது அருளினால் ஜீவிக்கிறேன்" என்று சொல்லி அப்போதே அவர் பாதங்களைப் பிடித்துக்கொண்டான். பிறகு, வீரரான துரோணர் பாண்டவர்களுக்குத் தேவ சம்பந்தமும் மனித சம்பந்தமுமாகிய அனேகவிதமான அஸ்திரங்களைக் கற்பித்தார். யாதவர்களும் அந்தத்தேசத்தவரும் இன்னும் பலதேசத்தவருமாகிய அனேக ராஜகுமாரர்களும் அரசர்களும் வந்துசேர்ந்து அஸ்திரவித்தைக்காகப் பிராமண சிரேஷ்டரான துரோணரை அடைந்தார்கள். அப்போது, தேரோட்டுகிறவனுக்கும் ராதையென்பவளுக்கும் புத்திரனாகிய கர்ணன் துரோணரைக் குருவாக அடைந்தான். மிகவும் பெருமைக்காரனாகிய அந்தத் தேர்ப்பாகன் மகன் அர்ச்சுனன்மீது பொறாமையுற்றுத் துர்யோதனனிடம் சேர்ந்துகொண்டு பாண்டவர்களை அவமதித்தான். அதனால், அவன் தனுர்வேதம் கற்கவேண்டுமென்கிற ஆசையோடு துரோணரை அடைந்தான். பாண்டுவின் புத்திரனாகிய அர்ச்சுனன் அப்யாஸத்தினாலும் புஜபலத்தினாலும் விடாமுயற்சியினாலும் அஸ்திரவித்தையிலுள்ள ஆசையினாலும் அவர்களெல்லாரிலும் சிறப்புற்றவனானான். அர்ச்சுனன், அஸ்திரப்பிரயோகம் ஒன்றாயிருந்தும் லாகவமாகச் செய்வதிலும் செய்கைக்குத் தக்கபடி அங்கங்களை அமைத்துக்கொள்வதிலும் எல்லாச்சிஷ்யர்களிலும் மேலாக இருந்தான். துரோணர், உபதேசிக்குங் காலங்களில், இந்திர புத்திரனாகிய அர்ச்சுனனை ஒப்பற்றவனென்று நினைத்தார்; இவ்வாறு எல்லாக் குமாரர்களுக்கும் பாணங்களையும் அஸ்திரங்களையும் கற்பித்தார்.

சிறந்த புத்தியுள்ளவனும் அஸ்திரங்கள் தெரிந்தவர்களில் மேலானவனுமாகிய அந்த அர்ச்சுனன், விசேஷங்களைத் தெரிந்துகொள்ளும் தருணங்களில் அந்த ஆசாரிய புத்திரரைவிட்டுத் தனித்துப் பிரியவில்லை. அர்ச்சுனன் குருவைப் பூஜிப்பதில் மிகுந்த முயற்சியை எடுத்துக்கொண்டான்; அஸ்திரங்களிலும் அதிக ஊக்கம் வைத்தான்; துரோணருக்குப் பிரியமாகவுமிருந்தான். அர்ச்சுனன் பாணங்களைப்பற்றியும் அஸ்திரங்களைப்பற்றியும் எப்போதும் முயற்சியோடிருப்பதைக்கண்டு, துரோணர் சமையற்காரனை அழைத்து ரகஸ்யமாக, "நீ ஒருபோதும் அர்ச்சுனனுக்கு மறைவான இடத்தில் அன்னம் போடவேண்டாம். இப்படி நான் சொன்னதை நீ அர்ச்சுனனிடத்தில் சொல்லக்கூடாது" என்று சொன்னார். பிறகு, ஒரு காலத்தில் அர்ச்சுனன் புசித்துக்கொண்டிருக்கையில் காற்று மிகுதியாக அடித்தது. அதனால், அங்கே எரிந்துகொண்டிருந்த அந்தத்தீபம் அவிக்கப்பட்டது. அர்ச்சுனன் சாப்பிட்டுக்கொண்டேதான் இருந்தான். அந்தத் தேஜஸ்வியான அர்ச்சுனனுடைய கை வாயைத்தப்பி வேறிடம் செல்லவில்லை. சிறந்த கைகளையுடைய அந்தப் பாண்டுபுத்திரனாகிய அர்ச்சுனன் அஃது அப்யாஸத்தால் உண்டானதென்று நினைத்து அப்யாஸத்தைச் செய்யக்கருதி ராத்திரியிலும் விற்பயிற்சி செய்துகொண்டிருந்தான். அவனுடைய வில்லின்நாண் உள்ளங்கையில் உராய்ந்ததனாலுண்டான சத்தத்தைக் கேட்டுத் துரோணர் எழுந்துவந்து அவனைத் தழுவிக்கொண்டு, "இந்த உலகத்தில் உன்னைப் போன்ற வில்லாளி வேறொருவன் இல்லாமலிருக்கும்படி பயிற்சி செய்விக்கப்போகிறேன். இதனை உனக்கு உண்மையாகச் சொல்லுகிறேன்" என்று சொன்னார்.

பிறகு, துரோணர் அர்ச்சுனனை மறுபடியும் குதிரைச் சண்டையிலும் யானைச்சண்டையிலும் தேர்ச்சண்டையிலும் கால்நடை யுத்தத்திலும் பழக்கினார். அவர், கௌரவர்களுக்குக் கதாயுத்தத்திலும் கத்திச்சிலம்பத்திலும் தோமரங்கள் ஈட்டிகள் சக்தியாயுதங்கள் ஆகிய இவற்றின் சிலம்பத்திலும் பல ஆயுதங்கள் கலந்த சண்டையிலும் தேர்ச்சியுண்டாகும் வண்ணம் கற்பித்தார். துரோணருடைய அந்த ஸாமர்த்தியத்தைக் கேள்வியுற்றுத் தனுர்வேதத்தைக்கற்க ஆவலுடன் அரசர்களும் அரசகுமாரர்களும் ஆயிரக்கணக்காக வந்து சேர்ந்தனர். ஆயுததாரிகளிற் சிறந்தவரான துரோணர் அவர்களெல்லாருக்கும் சிக்ஷை சொல்லிவைத்தார். எப்போதும் சீறின மனமுள்ள துரியோதனனும் பீமனும், அப்போது, துரோணரிடம் கதையிலும் மாணாக்கர்களாயிருந்தனர். அசுவத்தாமா மந்திரத்தியான ரகஸ்யங்களெல்லாவற்றிலும் மேலாக இருந்தார். அப்படியே இரட்டையராகிய நகுல ஸஹதேவர்களிருவரும் மற்றவீரர்களைக்காட்டிலும் மேலான சிலம்பக்காரர்களாக இருந்தனர். யுதிஷ்டிரர் தேர்ச்சண்டையில் சிறந்தவரானார். அர்ச்சுனன் எல்லாவற்றிலும் புகழ்பெற்றுக் கடல் சூழ்ந்த உலகத்தில் தேராளிகளின் அதிபதிகளுக்கு அதிபதியாகியும், புத்தியிலும் யோகசக்தியிலும் பலத்திலும் உற்சாகத்திலும் எல்லா அஸ்திரங்களிலும் தேர்ச்சியடைந்தவனாகியும், அஸ்திர வித்தையிலும் குருபக்தியிலும் எல்லாரிலும் மேலாக இருந்தான். அஸ்திரோபதேசம் எல்லாருக்கும் ஒன்றாக இருந்தும், அந்த வீரனாகிய அர்ச்சுனன் ஒருவனே அவயவங்களின் அமைப்பினால் எல்லாக்குமாரர்களிலும் மேலான வீரனாக இருந்தான். பலத்தில் அதிகரித்த பீமஸேனன்

மேலும், வித்தையில் தேர்ந்த அர்ச்சுனன்மேலும் துராத்மாக்களாகிய திருதராஷ்டிர புத்திரர்கள் ஒன்றுசேர்ந்து பொறாமையுற்றனர். எல்லா வித்தைகளிலும் அஸ்திரங்களிலும் கற்றுணர்ந்த அவர்களெல்லாரையும் கூட்டிப் புருஷசிரேஷ்டராகிய துரோணர் லக்ஷ்யத்தை அடிக்கும் விஷயத்தில் பரீக்ஷை செய்யக்கருதி, குமாரர்களுக்குத் தெரியாமல் சிற்பிகளாற் செய்யப்பட்ட பாஸபக்ஷியைப் போன்ற ஒரு பதுமையை மரத்தின் நுனியிலேற்றி அதை அவர்களுக்குக் குறியாகக் காண்பித்தார். அவர், "நீங்களனைவரும் சீக்கிரமாக வில்லுகளெல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு அம்புகளைத்தொடுத்து இந்தப் பாஸம் என்னும் பக்ஷியைக் குறியிட்டு நில்லுங்கள். என் சொல் புறப்படுங்காலத்தில் இதன் சிரஸைத் தள்ளிவிட வேண்டும். ஒவ்வொருவனுக்கும் கட்டளையிடுவேன். புத்திரர்களே! அவ்வாறு செய்யுங்கள்" என்று சொன்னார்.

பிறகு, அங்கிரஸ வம்சத்தாரில் சிறந்தவராகிய துரோணர் முதலில் யுதிஷ்டிரரை நோக்கி, "பிறரால் வெல்ல முடியாத வீரனே! பாணத்தைத்தொடு; என்சொல்லின் முடிவில் அதைவிடு" என்றார். குருவின் வாக்கியத்தினால் தூண்டப்பட்ட வீரரான யுதிஷ்டிரர், உடனே, முதலில் வில்லையெடுத்துப் பாஸபக்ஷியைக் குறிவைத்து நின்றார். பிறகு, துரோணர், வில்லை வளைத்துக்கொண்டிருக்கும் அந்தக் கௌரவபுத்திரராகிய யுதிஷ்டிரரை நோக்கிச் சற்று நேரம் பொறுத்து, "ராஜகுமாரனே! மரத்தின் நுனியிலிருக்கும் பாஸபக்ஷியை நீ பார்க்கிறாயா?" என்று கேட்டார். யுதிஷ்டிரர், "பார்க்கிறேன்" என்று ஆசாரியருக்கு மறுமொழிசொன்னார். மறுபடியும், சற்றுநேரம்

பொறுத்து, துரோணர், "இந்த மரத்தையும் என்னையும் உன்சகோதரர்களையும் பார்க்கிறாயா?" என்று யுதிஷ்டிரரைக் கேட்டார். அதற்கும் அந்த யுதிஷ்டிரர், "இந்த மரத்தையும் உங்களையும் என்ஸஹோதரர்களையும் பாஸபக்ஷியையும் பார்க்கிறேன்" என்று பலமுறை சொன்னார். துரோணர், மனத்தில் அதிருப்தியுடன், "இந்த லக்ஷ்யத்தை உன்னால் அடிக்கமுடியாது" என்றிகழ்ந்து, அவரைப் போகும்படி சொன்னார். பெரும் புகழ்பெற்ற துரோணர், பிறகு, மற்றச் சிஷ்யர்களாகிய துரியோதனன் முதலான திருதராஷ்டிரபுத்திரர்களையும் பீமன் முதலியவர்களையும் அன்னியதேசத்து அரசர்களையும் பரீக்ஷிப்பதற்கு யுதிஷ்டிரரைக்கேட்ட முறையாகவே கேட்டார். எல்லாரும், "எல்லாவற்றையும் பார்க்கிறோம்" என்று சொன்னபோது, அவர்கள் அவரால் நிந்திக்கப்பட்டார்கள்.

பிறகு, துரோணர் சிரித்துக்கொண்டு அர்ச்சுனனைப் பார்த்து, "நீ இப்போது அடிக்கவேண்டும். இந்த லக்ஷியத்தைப் பார்; நான் சொல்லுகிறகாலத்தில் பாணம் விடவேண்டியதாயிருக்கும்; புத்திரனே! தனுஸை வளைத்துக் கொண்டு சற்றுநேரம் ஸரியாக நில்" என்று சொன்னார். இவ்வாறு சொல்லியதைக் கேட்ட ஸவ்யஸாசி வில்லை மண்டலமாக வளைத்துக்கொண்டு குருவின் சொல்லினால் தூண்டப்பட்டுப் பாஸபக்ஷியைக் குறிவைத்து நின்றான். சற்றுநேரம் பொறுத்துத் துரோணர் அவனையும் முன்போலவே, "அர்ச்சுனா! இங்கிருக்கும் இந்தப் பாஸபக்ஷியையும் மரத்தையும் என்னையும் பார்க்கிறாயா?" என்று கேட்டார். அவன், "பாஸம் ஒன்றைமட்டும் பார்க்கிறேன்; மரத்தையும் பார்க்கவில்லை; உங்களையும் பார்க்கவில்லை"

என்று துரோணருக்கு மறுமொழி கூறினன். பிறகு, பிறரால் வெல்லமுடியாதவராகிய துரோணர் மனத்தில் திருப்தியடைந்து சற்றுநேரம் பொறுத்துத் திரும்பவும் பாண்டவர்களுள் மஹாரதனுகிய அந்த அர்ச்சுனனை நோக்கி, "நீ இந்தப் பாஸபக்ஷியைப் பார்க்கிறுயாயின் அந்தச் சொல்லை மறுபடியும் சொல்" என்று கேட்டார். அவன், "பாஸத்தின் சிரஸைப் பார்க்கிறேன். உடலைப்பார்க்க வில்லை" என்று மறுமொழி கூறினன். அர்ச்சுனன் இவ்வாறு சொல்லத் துரோணர், மயிர்க்கூச்சமெடுத்தவராகி, அர்ச்சுனனை நோக்கி, "விடு" என்று சொன்னுர். அவன் உடனே அம்பை விட்டுவிட்டான். அப்போது, அந்தப் பாண்டவன் மரத்திலிருக்கும் அந்தப் பாஸபக்ஷியின் தலையைக் கூர்மையான அர்த்தசந்திர பாணத்தினல் அறுத்து வேகமாகக் கீழே தள்ளினன். அந்தச் செய்கை நிறைவேறினவுடன், துரோணர், அர்ச்சுனனைக் கட்டிக்கொண்டார்; அவன் யுத்தத்தில் துருபதனைச் சேனையோடு கூடத் தோற்கச்செய்யத் தக்கவனென்று நினைத்தார்.

அதன்பிறகு, சிலகாலத்திற்கெல்லாம் துரோணர் சிஷ்யர்களுடன்கூட ஸ்நானம் செய்யக் கங்கையை நோக்கிச் சென்றுர். அங்கே, ஜலத்தில் அமிழ்ந்த துரோணுசாரியரை ஜலத்தில் ஸஞ்சரிக்கும் பலமுள்ள ஒருமுதலை காலத்தினல் ஏவப்பட்டுக் கணைக்காலில் பிடித்தது. அவர் விடுவித்துக்கொள்ள வல்லவராயிருந்தும், "முதலேயைக் கொன்று என்னைச் சீக்கிரம் விடுவியுங்கள்" என்று சிஷ்யர்களெல்லாரையும் துரிதப்படுத்தி ஏவினுர். அவர்சொல் புறப்படுங்காலத்திலேயே, அர்ச்சுனன், தடுக்கமுடியாத கூர்மையான ஐந்து அம்புகளினல் நீருக்குள் மூழ்கியிருந்த முதலையை

அடித்தான். அப்போது, மற்றவர்கள் ஒன்றுந்தோன்ருமல் அங்குமிங்கும் ஓடினர். செய்கையில் திறமைவாய்ந்த அந்த அருச்சுனனைக்கண்டு துரோணர் எல்லாச்சிஷ்யர்களிலும் சிறந்தவனென்று நினைத்து மிகுந்த திருப்தியுள்ளவரானர். அர்ச்சுனனுடைய பாணங்களினுல் அனேகம் துண்டுகளாகச்செய்யப்பட்ட அந்த முதலே, மஹாத்மாவான துரோணருடைய கணைக்காலை விட்டுவிட்டு மரணமடைந்தது. சிறந்த பராக்கிரமமுள்ள துரோணர் எல்லாச் செய்கைகளையும் தெரிவிப்பதற்காகச் சிஷ்யர்களை வரவழைத்தார்; துரியோதனனையும் சித்திரஸேனனையும் துச்சாஸனனையும் விவிம்சதியையும் அர்ச்சுனனையும் அசுவத்தாமாவையும் அழைத்து மண்ணுல் ஒருகுழந்தை செய்வித்துச் சிஷ்யர்கள் பார்த்திருக்கையில் கங்கையில் போட்டார். கண்களைத் துணியினுல் கட்டிவிட்டு வில்லைக்கொடுத்தார். 'கண் கட்டினபடியே ஜலத்திலிருக்கிற இந்தக்குழந்தையை அடியுங்கள்' என்ருர். உடனே, ஸமர்த்தனை அர்ச்சுனன், ஜலத்தில் முழுகியிருந்த சிசுப்பதுமையைப் பதினைந்துபாணங்களினுல் அடித்தான். அந்தச்செய்கைகளெல்லாவற்றையும் பார்த்துத் துரோணர் எல்லாச்சிஷ்யர்களிலும் அர்ச்சுனனைச் சிறந்தவனுக நினைத்தார்; மிகுந்த ஸந்தோஷமடைந்தார். பிறகு, துரோணர், மஹாரதனும் மஹாத்மாவுமாகிய அர்ச்சுனனை நோக்கி, "சிறந்தகைகளையுடையவனே! சிறப்புள்ளதும் தாங்குவதற்கு மிக அஸாத்தியமுமாகிய இந்தப் பிரம்மசிரஸ் என்னும் அஸ்திரத்தைப் பிரயோக ஸம்ஹாரங்களோடும் பெற்றுக்கொள். நீ இதை எவ்வகையிலும் மனிதர்களின்மேல் பிரயோகிக்காதே; அற்பசக்தியுள்ளவன்மேல் பிரயோகித்தால் இஃது உலகத்தை எரித்துவிடும். குழந்தாய்! இந்தலோகங்களில் இந்த அஸ்தி

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY
TIRUVANMIYUR, MADRAS-41.



ம் நிகாற்றதென்று சொல்லப்படுகின்றது. இதனை நியமத்துடன் தரித்துக்கொள். நான் இனிச்சொல்லப்போகிற சால்லையும் கேள். வீரனே! யுத்தத்தில் மனிதரல்லாத தவர் முதலிய சத்துருக்கள் எவராயினும் உன்னை ருத்துவாராயின் அப்போது அவரை வதஞ்செய்வதற்கு ந்த அஸ்திரத்தைப் பிரயோகஞ்செய்" என்று சொன்றர். அர்ச்சுனன், "அப்படியே" என்று பிரதிஜ்ஞை செய்து கைகூப்பி அந்த மேலான அஸ்திரத்தைப் பெற்றுக்கொண்டான். குரு, மறுபடியும் அவனை நோக்கி, உலகத்தில் உன்னைப்போன்ற வில்லாளி மற்றொரு மனிதன் இரான்" என்று சொன்னர்.

துரோணர், திருதராஷ்டிர புத்திரர்களும் பாண்டு புத்திரர்களும் படைக்கலப்பயிற்சியில் தேர்ந்திருப்பதை அறிந்து, கிருபர், ஸோமதத்தன், புத்திமானன பாஹ்லீகன், பீஷ்மர், வியாஸர், விதுரர் இவர்களுடைய முன்னிலையில் திருதராஷ்டிர மஹாராஜனைப்பார்த்து, "அரசனே! குருசிரேஷ்டனே! உன்னுடைய குமாரர்களுக்கு வித்தை வந்திருக்கிறது. உன் அநுமதியின்மேல் அவர்கள் தங்கள் கல்வியைக் காண்பிக்கக்கடவர்" என்று சொன்னர். பிறகு, திருதராஷ்டிரமஹாராஜன், மனமகிழ்ந்து, "பரத்வாஜ புத்ரரே! பிராமணசிரேஷ்டரே! நீர் பெரியகாரியம் செய்திருக்கிறீர். நீர் எந்தக்காலத்தையும் எந்த இடத்தையும் என்ன என்ன வகையான செய்கையையும் நினைக்கிறீரோ அதையெல்லாம் அவ்வாருகச் செய்யும்படி நீங்களே எனக்குக் கட்டளையிடுங்கள். இப்போது எனக்குள்ள துக்கத்தினுல், அஸ்திர விஷயத்தில் பராக்ரமத்தைச் செய்யும் என்புத்திரர்களை

6

எவர்கள் காண்பார்களோ அந்தக் கண்ணைப்பெற்ற மனிதர்கள்மேல் நான் ஆசையுள்ளவனாக இருக்கிறேன். விதுரனே! பெரியவராகிய ஆசாரியர் எதைச்சொல்லுகிறாரோ அதை அப்படியே செய். தர்மத்தில் விருப்பமுள்ளவனே! இவ்வகையான பிரியம் இனி வருமென்று நான் நினைக்கவில்லை" என்று சொன்னான். பிறகு, சிறந்த புத்திமானாகிய துரோணாசாரியர் திருதராஷ்டிர மஹாராஜனிடத்திலும் விதுரரிடத்திலும் அனுமதிபெற்றுக்கொண்டு மேடுபள்ளமில்லாமலும் மரங்களில்லாமலும் புதர்களில்லாமலும் வடக்கே தாழ்ந்துமிருக்கிற அழகான ஓரிடத்தை அளக்கச் செய்தார். நல்ல நக்ஷத்திரத்தோடு கூடிய திதியில் அந்தப் பூமியில் பலியைச் செய்தார். அந்தப்பலிக்காகப் பட்டணமுழுதும் பறையடிக்கப்பட்டது. பெயர்பெற்ற சில்பிகள் சிலம்பம் செய்யுமிடத்தில் மிக்க விசாலமும் சாஸ்திரத்தில் சொன்னபடி ஸரியாக வகுக்கப்பட்டதுமான காட்சிச்சாலையைத் துரோணாசாரியர் கட்டளைப்படி செய்தனர். தேசத்திலுள்ள ஜனங்கள், அவ்விடத்தில் ஸ்திரீகளுக்காக எல்லா ஆயுதங்களோடும் கூடிய காவல்களையும், அகலமும் உயரமுமுள்ள மஞ்சங்களையும், மிகுந்த விலைபெற்ற பல்லக்குக்களையும் செய்வித்தனர். பிறகு, அந்தக் குறிப்பிட்டதினம் வந்தபோது, திருதராஷ்டிர மஹாராஜன், வியாஸரிடம் அனுமதிபெற்று, ஸபையாரோடும் அந்தப்புர ஸ்திரீகளோடும் மந்திரிகளோடும் பீஷ்மரையும் ஆசாரியர்களிற்சிறந்த கிருபரையும் முன்னிட்டுக்கொண்டும், பாஹ்லீகனையும் ஸோமதத்தனையும் பூரிசிரவஸையும் மற்றக்கௌரவர்களையும் ஸஹாயமாக அழைத்துக்கொண்டும் பிராமணர்களுடன்கூட நகரத்திற்கு வெளியில் சிலம்பஞ்செய்யுமிடம் சேர்ந்தான்; சுற்றி

லும் முத்துச்சரங்கள் தொங்கவிடப்பட்டதும் வைடூரியங்களினாலும் ரத்நங்களினாலும் பிரகாசிப்பதும் பொன்மயமும் அற்புதமுமான காட்சிச்சாலையை அடைந்தான்.

மிகுந்த பாக்கியமுள்ள காந்தாரியும் குந்தியும் மற்றுமுள்ள ராஜஸ்திரீகளனைவரும், தாதிகளோடும் விருத்தகளோடும் தேவஸ்திரீகள் மேருவின்மேல் ஏறுவதுபோல், ஸந்தோஷத்தோடு மஞ்சங்களின்மேல் ஏறினர். பிராம்மணர்கள் க்ஷத்திரியர்கள் முதலிய நான்கு வருணத்தார்களும் ராஜகுமாரர்களுடைய ஆயுதப்பயிற்சியைப் பார்க்கக்கருதிப் பட்டணத்திலிருந்து விரைவாக வந்தனர். பார்க்கவிரும்பின ஜனங்கள் ஒருநொடியில் அங்கே ஓரிடத்திற் சேர்ந்தனர். அப்போது, அந்த ஸபையானது, செவ்வையாக வாசிக்கப்பட்ட வாத்தியங்களாலும் ஜனங்களின் உத்ஸாகத்தினாலும் பெருங்கடல் கலங்கினது போலிருந்தது. பிறகு, வெண்மையான ஆடையையுடுத்தவரும் வெளுப்பான யஜ்ஞோபவீதம் தரித்தவரும் வெளுத்த தலைமயிரோடு வெளுப்பான மீசை தாடிகளையுடையவரும் வெளுத்த புஷ்பசந்தனங்களை அணிந்தவருமாகிய அந்தத் துரோணாசாரியர், மேகங்களால் விடுபட்ட ஆகாயத்தில் அங்காரகனுடன் சந்திரன் பிரவேசிப்பதுபோற் சிலம்பக்கூடத்தின் நடுவில் தம்புத்திரருடன்கூடப் பிரவேசித்தார். பலவான்களிற் சிறந்த துரோணர் வியாஸருடைய அனுமதியைப் பெற்றுக்கொண்டு சிலம்பக்கூடத்திற்குப் பூஜை செய்தார். மந்திரங்களைச் செவ்வையாக அறிந்த பிராம்மணர்களைக்கொண்டு மங்களகாரியங்களைச் செய்வித்தார். திருதராஷ்டிர மஹாராஜன் துரோணருக்கும் கிருபருக்கும் பொன்னையும் ரத்தினங்களையும் முத்துக்களையும் பல

வகை வஸ்திரங்களையும் தக்ஷிணையாகக் கொடுத்தான். சுகத்தைத் தரத்தக்கதும் புண்ணியமுமான புண்ணியாஹவாசனத்தைச் செய்த பிறகு, வேலைக்காரர்கள் பல வகைகளான ஆயுதக்கருவிகளை எடுத்துக்கொண்டு வந்தனர். அதன்பிறகு, மஹாரதர்களும் பரதசிரேஷ்டர்களுமாகிய ராஜகுமாரர்கள், விரல்களில் உடும்புத்தோலினால் செய்யப்பட்ட விரலுறைகளை அணிந்தும் கச்சைகளையும் தூணிகளையும் கட்டிக்கொண்டும் வில்லுகளை எடுத்துக்கொண்டும் பிரவேசித்தனர். அந்த ஆண்மையிற் சிறந்த வீரர்கள், அரங்கத்தின் நடுவிலிருந்து துரோணாசாரியருக்கு வந்தனஞ்செய்து, அவருக்கும் கிருபாசாரியருக்கும் முறைப்படி மரியாதை செய்தனர். அவர்களால் செய்யப்பட்ட ஆசீர்வசனங்களினால் கௌரவர்களெல்லாரும் மனத்தில் ஸந்தோஷமடைந்து திரும்பவும் வந்தனஞ் செய்து முன்னமே பூஜை செய்யப்பட்டிருந்த அஸ்திரங்களைச் செஞ்சந்தனத்தினாலும் பூஜைக்குரிய புஷ்பங்களாலும் தாங்களே பூஜித்தனர். செஞ்சந்தனம் பூசிக்கொண்டவர்களும் சிவந்தமாலைகள் தரித்தவர்களும் சிவந்தகொடிகள் பிடித்தவர்களும் சிவந்தகடைக்கண்களுடையவர்களும் மாற்றுயர்ந்த பொன்னாபரணங்களணிந்துகொண்டவர்களும் பற்பல ரூபங்களோடு கூடியவர்களுமாகிய அந்தக்கௌரவ வீரர்களனைவரும் துரோணரால் அனுமதி கொடுக்கப்பெற்று ஆயுதங்களை எடுத்துக்கொண்டனர். முதலில் விற்களை எடுத்து நாணேற்றிட்டு அம்புகளைத்தொடுத்து நாணொலியையும் உள்ளங்கையொலியையுஞ்செய்து, அதனால் ஜனங்களை மூர்ச்சிக்கச் செய்தனர். யுதிஷ்டிரர்முதலிய சிறந்த பராக்ரமமுள்ள அந்தராஜகுமாரர்கள், அங்கே மூத்தவன் முதலாக வரி

சைப்படி மிக வியக்கத்தக்க ஆயுதப்பாிற்சியைச் செய் தனர். அந்தஸபையில் சிலருடைய பூமாலைகளில் அம்புகள் விழுந்தன. சிலர் தலையிற் சூட்டிக்கொண்ட புஷ்பங்களில் பாணங்கள் விழுந்தன; சிலர் தங்கள் பெயரடையாள முள்ள பலவகைப் பாணங்களை லாகவமாகவிட்டுப் பெரியவைவயும் சிறியவைவயுமான குறிகளை அடித்தனர். சிலமனிதர்கள் பாணம்விழுமென்று பயத்தினால் தலைகுனிந் தனர். மற்றும் சிலமனிதர்கள் பயமற்று ஆச்சரியத் துடன் பார்த்திருந்தனர். அந்தக்குமாரர்கள் குதிரைகளி லேறிக்கொண்டு தங்கள் பெயர்அடையாளங்களினால் விளங்குகின்ற பலவகைப் பாணங்களை லாகவமாகவிட்டு லக்ஷியங்களை விரைவில் அடித்தனர். பாணங்களையும் வில்லு களையும் தரித்துக்கொண்டிருக்கும் அந்தக் குமாரர்களின் கூட்டம் கந்தர்வநகரம்போலிருந்ததைக்கண்டு அங்குள்ள ஜனங்கள் திகைத்திருந்தனர். அங்கே, லக்ஷக்கணக்கான மற்ற ஜனங்கள் ஆச்சரியத்தினால் மலர்ந்தகண்களோடு, 'நல்லது நல்லது' என்று விரைவாகக் கூவினர். மிகுந்த பலமுள்ள அந்தராஜகுமாரர்கள் தேர்கள்மேலும் யானைகள் மேலும் குதிரைகள்மேலும் ஏறி விற் போரிலும் கைச்சண் டையிலும் பல வழிகளைச் செய்து காட்டினர்; மறுபடியும் கத்திகேடகங்களைப் பிடித்து யுத்தஞ்செய்து கத்திச்சிலம் பத்தின் வழிகளையுஞ் செய்து உபதேசப்படி எல்லா இடங் களிலும் ஸஞ்சரித்தனர். அந்தக்குமாரர்களெல்லோருக்கும் கத்திகேடகங்களிலுள்ள லாகவத்தையும் அங்கஅமைப்பை யும் திருத்தத்தையும் நின்றநிலை தவறாமையையும் பிடித்தபிடி விடாமையையும் ஸமயத்தில் ப்ரயோகிப்பதையும் அங்குள்ள ஜனங்கள் பார்த்தனர். பிறகு, எப்போதும் உற்சாகமுள்ள துரியோதனனும் பீமஸேனனும் கைகளில் கதைகளை

எடுத்துக்கொண்டு ஒற்றைக்கொடுமுடியுள்ள இரண்டுமலைகள்போலக் கிளம்பினர். சிறந்த கைகளையுடையவர்களும் பராக்கிரமம் தவறாதவர்களுமாகிய அவ்விருவர்களும் கச்சை கட்டிக்கொண்டுபோயினர். மஹாபலசாலிகளான அவ்விருவரும் மண்டலஸஞ்சாரத்தை ஆரம்பித்து மதமுள்ள இரண்டு யானைகளைப்போல் வலமும் இடமுமாக அனேக மண்டலங்கள் சுற்றினர். திருதராஷ்டிரனுக்கு விதுரரும், காந்தாரிக்குக் குந்தியும் குமாரர்களின் அந்தச் செய்கையை யெல்லாம் தெரிவித்தனர்.

குருராஜனாகிய துரியோதனனும் பலவான்களிற் சிறந்த பீமஸேனனும் களத்திலிருக்கும்போது, அவர்களிடம் பக்ஷபாதத்தினால் சினேகம்வைத்த ஜனங்கள் இரண்டுவகையாகப்பிரிந்தனர். "குருராஜனே! ஜயம்பெறு" என்றும், "பீமனே! ஜயம்பெறு" என்றும் மனிதர்களுடைய பெருங்கூச்சல்கள் உடனே எழுந்தன. பிறகு, சிறந்தபுத்தியுள்ள துரோணர் கலங்கின கடலைப்போலிருந்த ஸபையைக்கண்டு தமது அன்புள்ள புத்திரராகிய அசுவத்தாமாவை நோக்கி, "இந்த இரண்டு மஹாவீரர்களையும் அடக்கு; இருவரும் பயிற்சியில் தேர்ந்தவர். பீமனுக்காகவும் துரியோதனனுக்காகவும் அரங்கத்திற்கு இந்தக் கலக்கம் உண்டாகக்கூடாது" என்று சொன்னார். பிறகு, அசுவத்தாமா விரைவாக எழுந்து, "பீமா! குருவின் கட்டளை" என்றும், "துரியோதனா! குருவின் கட்டளை" என்றும் சொல்லி, "உங்களுக்குக் குருவின் உபதேசத்தினால் உண்டான வேகத்தையும் ஸாகஸத்தையும் நீங்கள் இன்று காட்டியதுபோதும்" என்று தடுத்தார். பிறகு, ஓங்கினகதைகளோடுகூடிய அவ்விருவரும், பிரளயகாலத்



துக்காற்றினால் கொந்தளிக்கின்ற இரண்டு கட
கரைகளுக்கு அடங்குவதுபோல், குருபுத்ரா
தாமாவினால் அடக்கப்பட்டனர்.

அதன்பின், துரோணர் ஸபையின்
பெரிய மேகமுழக்கத்துக்கொப்பான வாத்தி
அடக்கி, "என் புத்திரனைவிட எனக்கு பி
எல்லா ஆயுதங்களிலும் நிபுணனும் உ
விஷ்ணுவுக்கொப்பானவனும் இந்திரபுத்திர
தப் பார்த்தனைப் பாருங்கள்" என்று சொன்
ஆசாரியர்வாக்கினால் ஆசீர்வாதம் செய்
யௌவனத்தையுடையவனுமான அர்ச்சுன
உறை அணிந்து தூணிகளில் பாணங்களை நி
வில்லைப்பிடித்துப் பொன்மயமான கவசத்
சூரியனோடும் வானவில்லோடும் மின்
ஸந்தியாகாலத்துச் சிவப்புமேகம்போல் எ
டான். பிறகு, ஸபை முழுமைக்குமே ஒ
டாயிற்று. வாத்தியங்களும் சங்கங்களும்
கப்பட்டன. பார்ப்பவர்கள், 'இவன் கு
இவன் அழகுள்ளவன்; இவன் பாண்ட
வன்; இவன் தேவேந்திரனுடைய புத்ர
வர்களைக் காப்பாற்றுகிறவன்; இவன் அ
வர்களிற் சிறந்தவன்; இவன் தர்மிஷ்டர்க
இவன் சீலமுள்ளவர் எல்லாரிலும் சிறந்த
கத்திற்கும் ஞானத்திற்கும் நிதியானவ
கச் சொன்னவார்த்தைகளை எல்லாரும்
யின் முகம் ஆனந்தக் கண்ணீரால் நனை
அந்தப்பெரிய ஜனத்திரளிலிருந்துண்டா

துக்காற்றினால் கொந்தளிக்கின்ற இரண்டு கடல்கள் பெருங் கரைகளுக்கு அடங்குவதுபோல், குருபுத்ரராகிய அசுவத் தாமாவினால் அடக்கப்பட்டனர்.

அதன்பின், துரோணர் ஸபையின் முன்னின்று பெரிய மேகமுழக்கத்துக்கொப்பான வாத்திய சப்தத்தை அடக்கி, "என் புத்திரனைவிட எனக்கு மிக்க நண்பனும் எல்லா ஆயுதங்களிலும் நிபுணனும் உபேந்திரனாகிய விஷ்ணுவுக்கொப்பானவனும் இந்திரபுத்திரனுமாகிய இந்தப் பார்த்தனைப் பாருங்கள்" என்று சொன்னார். உடனே, ஆசாரியர்வாக்கினால் ஆசீர்வாதம் செய்யப்பட்டவனும் யௌவனத்தையுடையவனுமான அர்ச்சுனன், விரலில் உறை அணிந்து தூணிகளில் பாணங்களை நிரப்பிக்கொண்டு வில்லைப்பிடித்துப் பொன்மயமான கவசத்தைத் தரித்து, சூரியனோடும் வானவில்லோடும் மின்னலோடுங்கூடிய ஸந்தியாகாலத்துச் சிவப்புமேகம்போல் எதிரில்காணப்பட் டான். பிறகு, ஸபை முழுமைக்குமே ஒரு மலர்ச்சி உண் டாயிற்று. வாத்தியங்களும் சங்கங்களும் எங்கும் முழக் கப்பட்டன. பார்ப்பவர்கள், 'இவன் குந்தி புத்திரன்; இவன் அழகுள்ளவன்; இவன் பாண்டவர்களில் நடுவாம வன்; இவன் தேவேந்திரனுடைய புத்ரன்; இவன் கௌர வர்களைக் காப்பாற்றுகிறவன்; இவன் அஸ்த்ரம் தெரிந்த வர்களிற் சிறந்தவன்; இவன் தர்மிஷ்டர்களிற் சிறந்தவன்; இவன் சீலமுள்ளவர் எல்லாரிலும் சிறந்தவன்; நல்லொழுக் கத்திற்கும் ஞானத்திற்கும் நிதியானவன்' என்று உரக் கச் சொன்னவார்த்தைகளை எல்லாரும் கேட்டனர். குந்தி யின் முகம் ஆனந்தக் கண்ணீரால் நனைக்கப்பட்டிருந்தது. அந்தப்பெரிய ஜனத்திரளிலிருந்துண்டாகிய சத்தத்தினால்

CamScanner

நிரப்பப்பட்ட காதுகளையுடைய திருதராஷ்டிர மஹாராஜன், மனமகிழ்ந்து விதுரரை நோக்கி, "விதுரனே! கலங்கின ஸமுத்திரத்தின் கோஷத்துக்கொப்பான இந்த மிகப் பெரிய சத்தம் ஏது? ஆகாசத்தைக் கிழிப்பதுபோல் ஸபையில் திடீரென்று உண்டாயிருக்கிறதே!" என்று கேட்டான். அதற்கு விதுரர், "மஹாராஜாவே! குந்தி புத்திரனும் பாண்டுபுத்திரனுமாகிய பல்குனன் கவசத்துடன் அரங்கத்தில் இறங்கியிருக்கிறான். அதற்காக இந்தப் பெருங்கோஷமுண்டாயிற்று" என்று சொன்னார். திருதராஷ்டிரன், "சிறந்த புத்தியுள்ளவனே! பாக்கியம் பெற்றேன்; குந்தியென்னும் அரணியிலுண்டான மூன்று பாண்டவர்களென்னும் மூன்று அக்னிகளால் சிறப்பிக்கப்பட்டேன்; ரக்ஷிக்கப்பட்டேன்" என்று சொன்னான். அந்த ஸபையிலுள்ள ஜனங்கள் பிரயாஸப்பட்டுவந்து ஸந்தோஷமாக இருக்கும்போது, அர்ச்சுனன் தன் அஸ்திர சாதுரியத்தை ஆசாரியருக்குக் காண்பித்தான். ஆக்னேயாஸ்திரத்தினால் தீயையும், வாருணாஸ்திரத்தினால் ஜலத்தையும், வாயு அஸ்த்ரத்தினால் காற்றையும், மேகாஸ்திரத்தினால் மேகங்களையும், பூமியஸ்திரத்தினால் பூமியையும், பர்வதாஸ்திரத்தினால் மலைகளையும் உண்டுபண்ணினான். அந்தர்த்தானமென்னும் அஸ்திரத்தினால் தானே மறைந்தான்; ஒருக்ஷணம் நெடியவனாகவும் மறுக்ஷணம் குறியவனாகவும் க்ஷணத்துக்கெல்லாம் தேர்த்தட்டிலும் மறுக்ஷணம் தேர்நடுவிலும் அடுத்தக்ஷணம் பூமியிலும் இருப்பவனாகவும் காணப்பட்டான். ஆசாரியருக்கு அன்பனாகிய அந்த அர்ச்சுனன் ஸௌஷ்டவமென்று சொல்லப்பட்ட அங்கங்களின் அமைப்புடன்கூடிப் பலவகைகளான பாணங்களினால் மெதுவும் பெரிதும் சிறிதுமான லக்ஷியங்



களை அடித்தான். சுழன்றுகொண்டிருக்கும் இரு
பன்றியின் வாயில் ஒரேகாலத்தில் ஐந்துபாணங்களை
பாணம்போலத் தடையில்லாமல் விடுத்தான். சிறந்
கிரமமுள்ள அர்ச்சுனன், கயிற்றில் தொங்கி ஆடிக்கொ
ருக்கும் கூர்மையான மாட்டுக்கொம்பில் இருபத்
பாணங்களை நாட்டினான். ஆயுதங்களில் ஸமர்த்
அர்ச்சுனன் கத்தியிலும் வில்லிலும் இப்படிப்பட்ட
பெருங்காரியங்களைச் செய்து, கதையிலும் ப
ஸஞ்சாரங்களைக் காண்பித்தான்.

இவ்வாறு அரசிளங் குமாரரின் ஆயுதப்பயி
அரங்கேற்றம் இனிது நிறைவேறியது; அனைவரும்
குமாரர்களை வாழ்த்தினர்; ஆசாரியரைக் கொ
புகழ்ந்தனர்; தத்தம் இடங்களுக்குச் சென்றனர்.

---

73409



ணை அடித்தான். சுழன்றுகொண்டிருக்கும் இரும்புப் பன்றியின் வாயில் ஒரேகாலத்தில் ஐந்துபாணங்களை ஒரு பாணம்போலத் தடையில்லாமல் விடுத்தான். சிறந்தபராக்கிரமமுள்ள அர்ச்சுனன், கயிற்றில் தொங்கி ஆடிக்கொண்டிருக்கும் கூர்மையான மாட்டுக்கொம்பில் இருபத்தொரு பாணங்களை நாட்டினான். ஆயுதங்களில் ஸமர்த்தனாகிய அர்ச்சுனன் கத்தியிலும் வில்லிலும் இப்படிப்பட்ட மிகப் பெருங்காரியங்களைச் செய்து, கதையிலும் மண்டலஸஞ்சாரங்களைக் காண்பித்தான்.

இவ்வாறு அரசிளங் குமாரரின் ஆயுதப்பயிற்சியின் அரங்கேற்றம் இனிது நிறைவேறியது; அனைவரும் அரசிளங் குமாரர்களை வாழ்த்தினர்; ஆசாரியரைக் கொண்டாடிப் புகழ்ந்தனர்; தத்தம் இடங்களுக்குச் சென்றனர்.

## III. துரோணர் குருதக்ஷிணை பெறுதல்.

பாண்டு புத்திரர்களும் திருதராஷ்டிர புத்திரர்களும் அஸ்திரங்களில் தேர்ந்ததைக்கண்டு, அந்தக் குருவான துரோணாசாரியர் சரியானகாலத்தில் குருதக்ஷிணையைப் பற்றி நினைத்தார். அஸ்திரங்களில் அடைந்த தேர்ச்சி எல்லாராலும் அங்கீகரிக்கப்பட்டு அவர்கள் அரங்கின்வாயிலுக்குவந்துசேர்ந்த பிறகு, அவர்களெல்லாரையும் நோக்கி, துரோணாசாரியர், "நீங்களெல்லாரும் சேர்ந்து எனக்கு ஓர் உயர்ந்த தக்ஷிணையைக் கொடுக்க விரும்புகிறேன்" என்று சொன்னார். இவ்வாறு சொல்லக்கேட்ட 'சிஷ்யர்களனைவரும், அங்கே துரோணரைப்பார்த்து, "பகவானே! நாங்கள் என்ன கொடுக்கக்கடவோம்? குரு எங்களுக்கு உடனே கட்டளையிடவேண்டும்" என்று கேட்டனர். அதன் பிறகு, துரோணாசாரியர், சிஷ்யர்களனைவரையும் அழைத்து, "நீங்கள் பாஞ்சால வேந்தனாகிய துருபதனைப் போர்முனையிற் பிடித்துக் கொண்டுவாருங்கள். உங்களுக்கு ஸுகமுண்டாகக்கடவது. அதுதான் உயர்ந்த தக்ஷிணையாகும்" என்று தக்ஷிணைக்குரிய பொருளைக் கட்டளையிட்டார். அவர்களெல்லாரும், "அப்படியே ஆகுக" என்று சொல்லிக் குருதக்ஷிணை கொடுப்பதற்காகத் துரோணருடன் சேர்ந்து ரதங்களிலேறி யுத்தஞ்செய்ய விரைவாகப் புறப்பட்டனர். பிறகு, அந்தப் புருஷசிரேஷ்டர்கள் பாஞ்சால தேசத்தைத் துன்பப்படுத்திக்கொண்டே சேர்ந்தனர். துர்யோதனன், கர்ணன், மிகுந்த பலமுள்ள யுயுத்ஸு, துச்சாஸனன், விகர்ணன், ஜலஸந்தன், ஸுலோசனன் ஆகிய இவர்களும் மிகுந்த பராக்கிரமமுள்ள மற்றும் அனேக ராஜகுமாரர்களும் அரசர்களும், 'நான் முன்னே ;



நான்முன்னே' என்று மஹாபராக்கிரமசாலியான அந்த
துருபதனுடைய நகரத்தை அழித்தனர். பிறகு, உயர்ந்த
ரதங்களில் ஏறின குமாரர்களனைவரும் ஸாரதிகளுடன்
நகரத்தில் பிரவேசித்து ராஜமார்க்கத்தைச் சேர்ந்தனர்

அந்தக்காலத்தில் பாஞ்சால தேசத்தரசனாகிய து
பதன், பெரிய சேனைவருதலைப்பற்றிக் கேட்டும் பார்த்து
தன் சகோதரர்களுடன்கூடத் தன் வீட்டிலிருந்து து
மாகப் புறப்பட்டான். அப்போது, துருபதனுடை
அந்தச் சகோதரர்களனைவரும் கவசமுதலியவற்றை
தரித்துக்கொண்டு சரமாரிகளைப் பொழிந்து கர்ச்சனை
செய்தனர். பிறகு, யாருக்கும் வெல்லமுடியாத துருபத
வெண்மையான ரதத்திலேறி யுத்தத்தில் கௌரவர்க
எதிர்த்து உக்கிரமான பாணங்களை வருஷித்தான். அ
சுனன், முன்னமே ராஜகுமாரர்களுடைய அதிக கர்
தைப்பற்றி ஆராய்ந்து, பிராமணோத்தமரான துரோ
சாரியரிடம், "இவர்கள் பராக்ரமம் முடிந்தபின் நம் ப
கிரமத்தைக் காண்பிப்போம் ; பாஞ்சால ராஜனைப் பே
தலையிற்பிடிக்க இவர்களால் முடியாது" என்று சொன்
குற்றமற்ற அந்த அர்ச்சுனன் இவ்வாறு சொல்லித்
சகோதரர்களுடன்கூட நகரத்துக்கு வெளியில் அ
குரோச தூரத்திலேயே நின்றான்.

துருபதன் கௌரவர்களைப் பார்த்துப் பெரிய ச
யினால் அவர்களுடைய சேனையை மயங்கச் செய்து
றிலும் ஓட்டினான். ரதத்திலேறி யுத்தத்திற்கு ஆரம்
வனும் யுத்தச்செய்கைகளை விரைவாகச் செய்கின்
மாகிய அந்தத் துருபதன் ஒருவனைப் பார்த்தே அங்

நான்முன்னே' என்று மஹாபராக்கிரமசாலியான அந்தத் துருபதனுடைய நகரத்தை அழித்தனர். பிறகு, உயர்ந்த ரதங்களில் ஏறின குமாரர்களனைவரும் ஸாரதிகளுடன் நகரத்தில் பிரவேசித்து ராஜமார்க்கத்தைச் சேர்ந்தனர்.

அந்தக்காலத்தில் பாஞ்சால தேசத்தரசனாகிய துருபதன், பெரிய சேனைவருதலைப்பற்றிக் கேட்டும் பார்த்தும், தன் சகோதரர்களுடன்கூடத் தன் வீட்டிலிருந்து துரிதமாகப் புறப்பட்டான். அப்போது, துருபதனுடைய அந்தச் சகோதரர்களனைவரும் கவசமுதலியவற்றைத் தரித்துக்கொண்டு சரமாரிகளைப் பொழிந்து கர்ச்சனம் செய்தனர். பிறகு, யாருக்கும் வெல்லமுடியாத துருபதன் வெண்மையான ரதத்திலேறி யுத்தத்தில் கௌரவர்களை எதிர்த்து உக்கிரமான பாணங்களை வருஷித்தான். அர்ச்சுனன், முன்னமே ராஜகுமாரர்களுடைய அதிக கர்வத்தைப்பற்றி ஆராய்ந்து, பிராமணோத்தமரான துரோணாசாரியரிடம், "இவர்கள் பராக்கிரமம் முடிந்தபின் நம் பராக்கிரமத்தைக் காண்பிப்போம்; பாஞ்சால ராஜனைப் போர்த்தலையிற்பிடிக்க இவர்களால் முடியாது" என்று சொன்னான். குற்றமற்ற அந்த அர்ச்சுனன் இவ்வாறு சொல்லித் தன் சகோதரர்களுடன்கூட நகரத்துக்கு வெளியில் அரைக்குரோச தூரத்திலேயே நின்றான்.

துருபதன் கௌரவர்களைப் பார்த்துப் பெரிய சரமாரியினால் அவர்களுடைய சேனையை மயங்கச் செய்து சுற்றிலும் ஓட்டினான். ரதத்திலேறி யுத்தத்திற்கு ஆரம்பித்தவனும் யுத்தச்செய்கைகளை விரைவாகச் செய்கின்றவனுமாகிய அந்தத் துருபதன் ஒருவனைப் பார்த்தே அங்கிருந்த

கௌரவர்கள் பயத்தினால் அனேகர்க விருப்பதைப்போல நினைத்தனர். துருபதனுடைய உக்கிரமான பாணங்கள் எல்லாத் திசைகளிலும் சஞ்சரித்தன. அப்போது, பாஞ்சாலர்களுடைய வீடுகளில் சங்கங்களும் பேரிகைகளும் மிருதங்கங்களும் ஆயிரக்கணக்காக வாசிக்கப்பட்டன. மஹாத்மாக்களாகிய பாஞ்சாலர்களுடைய சங்கநாதமும் வில்லின் நாண்கள் கைத்தலத்தில் உரைபடுவதனாலுண்டான பெரியசத்தமும் ஆகாயத்தை வியாபித்துக் கிளம்பின. துரியோதனன், விகர்ணன், ஸுபாஹு, தீர்க்கலோசனன், துச்சாஸனன் ஆகிய இவர்கள் கோபித்துச் சரமாரிகளைப் பொழிந்தனர். யுத்தத்தில் யாருக்கும் ஜயிக்க முடியாத சிறந்த வில்லாளியான அந்தத் துருபதன் அதிகமாக அடிக்கப்பட்டு, பின்பு அந்தச் சேனைகளை அந்த நிமிஷத்திலேயே ஊதிவிட்டான். அந்தத் துருபதன், சுற்றப்பட்ட எரிகொள்ளியைப் போலச் சேனையைச்சுற்றி ஸஞ்சரித்துக்கொண்டு துரியோதனனையும் விகர்ணனையும் மஹா பலசாலியான கர்ணனையும் வீரர்களான அனேக ராஜ குமாரர்களையும் பலவிதமான சேனைகளெல்லாவற்றையும் பாணங்களினால் நிரப்பினான். பிறகு, நகரத்து ஜனங்களனைவரும் மேகங்கள் மழைபொழிவதுபோலக் கௌரவர்களின் மேல் உலக்கைகளையும் தடிகளையும் பொழிந்தனர். காம்பில்ய நகரத்தவர், பெரிய யுத்தம் நடப்பதைக் கேட்டு உடனே கௌரவர்களையே எதிர்த்துச் சென்றனர். கௌரவர்கள் கதறினர்; ஓடினர். பாண்டவர்களைக்கூவிக்கொண்டு கதறின அவர்களுடைய மயிர்க்கூச்சமெடுக்கச் செய்யும் குரலைக் கேட்டவுடனே, பாண்டவர்கள் துரோணரை அபிவாதனஞ் செய்து ரதங்களில் ஏறினார்கள். அப்போது, அர்ச்சுனன், தன் தமையனாரான யுதிஷ்

டிரரை, "நீர் யுத்தஞ்செய்ய வேண்டாம்" என்று நிறுத்தி, உடனே மாத்ரியின் புத்திரர்களைத் தேரின் சக்ர ரக்ஷகர்களாகச்செய்தான். அப்போது, பீமஸேனன் கதையுடன் சேனைக்குமுன் போகிறவனானான். பிறகு, குற்றமற்ற அர்ஜுனன் சத்துருக்களின் சத்தத்தைக் கேட்டுத் தன் தேரினால் திசைகளில் சத்தமுண்டாக்கிக்கொண்டு தன் சகோதரர்களுடன்கூட விரைவாகச் சென்றான்.

பிறகு, கொந்தளிக்கிற கடலைப்போல ஒலிக்கின்ற பாஞ்சாலர்களின் பெருஞ்சேனையில், தண்டாயுதத்தைக் கையில்தரித்த யமனுக்கொப்பான சிறந்த கைகளையுடைய பீமஸேனன், ஸமுத்திரத்தில் முதலை பிரவேசிப்பது போலப் பிரவேசித்தான். பிறகு, சதுரங்க சேனையும் நிறைந்த அந்த யுத்தமென்னும் உற்சவத்தில் கதையைத் தரித்த பீமன் தனியாகவே யானைச் சேனையை எதிர்த்தான். யுத்தத்தில் நிபுணனும் புஜபலத்தில் ஒப்பற்றவனும் யமனைப்போன்ற உருவத்தைத் தரித்தவனுமாகிய பீமன் கதையினால் யானைச்சேனையை அடித்தான். மலைகளைப்போன்ற அந்த யானைகள் பீமஸேனனுடைய கதையினால் உருண்டை வடிவங்களான மத்தகங்கள் பெயர்க்கப்பட்டு மிகுதியாகிய இரத்தத்தைப் பெருக்கிக்கொண்டு, வஜ்ராயுதத்தினால் அடிபட்ட மலைகளைப்போலப் பூமியில் விழுந்தன. அர்ச்சுனனுக்குத் தமையனான பீமன், யானைகளையும் குதிரைகளையும் தேர்களையும் வீழ்த்தினான்; இடையன் வனத்தில் பசுக்களைத் தடியினால் அடிப்பது போலக் காலாட்களையும் தேராளிகளையும் அடித்தான். அவன் தேர்களையும் யானைகளையும் ஓட்டிக்கொண்டு சென்றான்.

துரோணாசாரியருடைய விருப்பத்தைச் செய்ய ஆரம்பித்த அந்தப் பாண்டவனாகிய அர்ச்சுனன், அப்போது சரமாரிகளைப் பொழிந்து குதிரைகளையும் தேர்களையும் யானைகளையும் கூட்டங் கூட்டமாக நாலுபக்கங்களிலும் வீழ்த்தி யுத்தத்தில் ஊழித்தீயைப்போல ஜ்வலித்துக் கொண்டு துருபதனிடம் வந்தான். அப்போது, அடிக்கப்பட்ட அந்தப் பாஞ்சால தேசத்தாரும் ஸ்ருஞ்சய தேசத்தாருமாகிய அனைவரும் பலவகை அம்புகளினால் அர்ச்சுனனை விரைவாக மறைத்து வாய்களினால் சிங்க நாதங்களைச் செய்து அர்ச்சுனனுடன் யுத்தம் செய்தனர். அந்த யுத்தம் பயங்கரமாகவும் பார்ப்பதற்கு மிக்க ஆச்சரியமாகவு மிருந்தது. சிங்க நாதத்தைக் கேட்டு, இந்திரகுமாரனான அர்ச்சுனன் கோபமுற்றான். பிறகு, அவன், வேகமாகப் பாஞ்சாலர்களை அதிகமான அம்புமழையினால் மறைத்துத் திசைமயங்கச்செய்து துரத்தினான். புகழ்பெற்ற அவன் கணைகளை இடைவிடாமல் தொடுத்துக்கொண்டும் விடுத்துக்கொண்டுமிருக்கும்போது இவ்விரண்டிற்கும் இடையிட்டகாலம் காணக்கூடாமலிருந்தது. அப்போது அந்தச் சண்டையில் திசைகளும் ஆகாயமும் பூமியும் ஒன்றும் காணப்படவில்லை. காண்டீவமென்னும் வில்லைத்தரித்துப் பலவானான அர்ச்சுனன் பாணங்களினால் இருளை உண்டாக்கினபோது பாஞ்சாலர்களும் கௌரவர்களும், 'நல்லது, நல்லது' என்று கூவின சத்தமும் பேரிகைகளின் முழக்கமும் சங்கங்களின் பெருமுழக்கமும் சிலாகிக்கும் சப்தத்தோடுகூடிய துருபதனுடைய சிங்கநாதமும் அங்கே உண்டாயின. பிறகு, தேவேந்திரன் சம்பரனை எதிர்த்ததுபோல ஸத்யஜித் என்பவனுடன் கூடத் துருபதன் அர்ச்சுனனை விரைவாக



எதிர்த்தான். அர்ச்சுனன் பெருஞ் சரமாரியா
ராஜனை மூடிவிட்டான். அப்போது, மஹா
யானைக்கூட்டத்துக்குத் தலைமையான யூதபதி
கப்போகையில் மற்ற யானைகளிடமுண்டா
போலப் பாஞ்சாலசேனையில் 'ஆ! ஆ!' எ
உண்டாயிற்று.

தனஞ்சயன் வருவதைக் கண்டு,
பராக்கிரமமுள்ள ஸத்யஜித் என்பவன்
காப்பாற்றுவதற்காக, அவனை எதிர்த்து
அந்த அர்ச்சுனனும் துருபதனும்,
மஹாபலியும்போல யுத்தஞ்செய்வதற்காக
சேனைகளைக் கலங்கச் செய்தனர். அப்
தன், ஸத்யஜித்தை உயிர்நிலைகளைப் பி
துப் பாணங்களை ஆழப்பாய்ச்சிப் பலமா
அது ஆச்சரியமாக இருந்தது. பிறகு, ஸ
றுக் கணக்கான பாணங்களினால் அர்ஜுன
பீடித்தான். மஹாரதனும் மிகுந்த வேக
அர்ச்சுனன், கணைமாரியினால் மூடப்பட்ட
நாணை உருவி வேகத்தைச் செய்தான்.
ஜித்தினுடைய வில்லை அறுத்துவிட்டுத்
எதிர்த்துச் சென்றான். அதன்பின் ஸ
விரைவாக மற்றொருவில்லை எடுத்துக்கெ
னைத் தேர்க்குதிரைகளோடும் ஸாரதியோ
கூட விரைவாக அடித்தான். யுத்தத்தி
அடிக்கப்பட்ட அர்ச்சுனன் அதைப்
பிறகு, அவனை அடிப்பதற்காகப் பாண
குதிரைகளையும் கொடியையும் விற்பிடி

எதிர்த்தான். அர்ச்சுனன் பெருஞ் சரமாரியால் பாஞ்சால ராஜனை மூடிவிட்டான். அப்போது, மஹா ஸிம்மமானது யானைக்கூட்டத்துக்குத் தலைமையான யூதபதியைப் பிடிக்கப்போகையில் மற்ற யானைகளிடமுண்டாகும் சத்தம் போலப் பாஞ்சாலசேனையில் 'ஆ! ஆ!' என்னும் ஒலி உண்டாயிற்று.

தனஞ்சயன் வருவதைக் கண்டு, உறுதியான பராக்கிரமமுள்ள ஸத்யஜித் என்பவன் துருபதனைக் காப்பாற்றுவதற்காக, அவனை எதிர்த்துப் போனான். அந்த அர்ச்சுனனும் துருபதனும், இந்திரனும் மஹாபலியும்போல யுத்தஞ்செய்வதற்காக எதிர்த்துச் சேனைகளைக் கலங்கச் செய்தனர். அப்போது, பார்த்தன், ஸத்யஜித்தை உயிர்நிலைகளைப் பிளக்கின்ற பத்துப் பாணங்களை ஆழப்பாய்ச்சிப் பலமாக அடித்தான். அது ஆச்சரியமாக இருந்தது. பிறகு, ஸத்யஜித்து நூற்றுக் கணக்கான பாணங்களினால் அர்ஜுனனை விரைவாகப் பிடித்தான். மஹாரதனும் மிகுந்த வேகமுள்ளவனுமாகிய அர்ச்சுனன், கணைமாரியினால் மூடப்பட்டபோது, வில்லின் நாணை உருவி வேகத்தைச் செய்தான். உடனே, ஸத்யஜித்தினுடைய வில்லை அறுத்துவிட்டுத் துருபதராஜனை எதிர்த்துச் சென்றான். அதன்பின் ஸத்யஜித் மிகவும் விரைவாக மற்றொருவில்லை எடுத்துக்கொண்டு அர்ச்சுனனைத் தேர்க்குதிரைகளோடும் ஸாரதியோடும் தேரோடும் கூட விரைவாக அடித்தான். யுத்தத்தில் ஸத்யஜித்தினால், அடிக்கப்பட்ட அர்ச்சுனன் அதைப் பொறுக்கவில்லை. பிறகு, அவனை அடிப்பதற்காகப் பாணங்களை விட்டான். குதிரைகளையும் கொடியையும் விற்பிடியையும் பின் காப்ப

வனும் ஸாரதியுமாகிய இருவரையும் அடித்தான். அவ்வாறு திரும்பத்திரும்ப விற்கள் பிளக்கப்பட்டும் குதிரைகள் துணிக்கப்பட்டும் போனபோது, அந்த ஸத்யஜித் யுத்தத்தைவிட்டுத் திரும்பிப்போனுன். யுத்தத்தில் ஸத்யஜித் திரும்பிப் போனதைக்கண்டு அர்ச்சுனன் துருபதனை மிகுந்த வேகத்துடன் எதிர்த்துப் போனுன். அப்போது ஜயிப்பவர்களுக்கெல்லாம் மேலான அர்ச்சுனன் பெரிய யுத்தஞ் செய்தான். பார்த்தன், துருபதனுடைய வில்லேவெட்டிக் கொடியையும் தரையில் வீழ்த்தினுன்; ஐந்து பாணங்களினுல் அவனுடைய குதிரைகளேயும் ஸாரதியையும் அடித்தான். அர்ச்சுனன் உடனே அந்த வில்லே வைத்துவிட்டுக் கேடகம்பிடித்துக் கத்தியை உருவிக்கொண்டு சிங்கநாதத்தைச் செய்தான். உடனே எழும்பித் துருபதனது தேரின் ஏர்க்காலில் குதித்தான். தனஞ்சயன் பயமில்லாமல் துருபதனுடைய தேரையடைந்து, கருடன் கடலேக்கலக்கி நாகத்தைப் பிடிப்பதுபோல், அவனேப் பிடித்தான். பிறகு, பாஞ்சால தேசத்தாரனைவரும் பத்துத் திசைகளிலும் ஓடினர். அந்தத் தனஞ்சயன் எல்லாச் சேனேகளுக்கும் தன் கைவன்மையைக் காண்பித்து ஸிம்ம கர்ச்சனேபோன்ற கர்ச்சனேயைச் செய்து வெளிப் புறப்பட்டான். அர்ஜுனன் வருவதைக் கண்டு, கௌரவ குமாரர்கள் சேர்ந்து மஹாத்மாவான அந்தத் துருபதனுடைய நகரத்தை அப்போதே அழிக்கத் தொடங்கினர். அப்போது அர்ஜுனன், "பீமனே! ராஜசிரேஷ்டனுகிய துருபதன் கௌரவ வீரர்களுக்குச் சிநேகிதன். அவனுடைய சேனேயைக் கொல்லாதே. குருதக்ஷிணை தானே கொடுக்க வேண்டும்" என்றுன். மிகுந்த பலமுள்ள பீமஸேனன், அர்ஜுனனுல் தடுக்கப்பட்டபோது, யுத்தம்

செய்ததில் திருப்தியில்லாமலேயே திரும்பினன். அவர்கள் போர்முனையில் யஜ்ஞஸேனனென்று சொல்லப்பட்ட துருபதனை மந்திரியுடன் பிடித்துத் துரோணரிடம் கொண்டு வந்தனர். கர்வபங்கம் செய்யப்பட்டும் தனத்தைப் போக்கப்பட்டும் பிடிக்கப்பட்ட அந்தத் துருபதனைப் பார்த்துத் துரோணர் பகைமையை மனத்தில் வைத்துப் பேசலானர்.

" என்றல் உன்னுடைய தேசம் துடைக்கப்பட்டது; உன் நகரமும் பிடிக்கப்பட்டது. உயிரோடு எதிரியின் வசத்திலகப்பட்டபிறகு, சிநேகிதனென்பதை முன்னிட்டு என்னை விரும்பலாமா?" என்று சொல்லி, மறுபடியும் கொஞ்சம் சிரித்துக்கொண்டு, அவனைப் பார்த்துச் சொல்லத்தொடங்கினர். "வீரனே! உயிருக்கு அபாயம் வருமென்று பயப்படாதே. நாங்கள் பொறுமையுள்ள பிராமணர்கள். க்ஷத்ரிய சிரேஷ்டனே! பால்யத்தில் என்னோடுகூட ஆச்ரமத்தில் விளையாடினதினல் சிநேகமும் அன்பும் விருத்திசெய்யப்பட்டன. ராஜனே! மறுபடியும் உன்னுடன் சிநேகத்தையே வேண்டுகிறேன். ராஜனே! உனக்கு ஒருவரம் தருகிறேன். அதாவது ராஜ்யத்தில் பாதியை அடை. யஜ்ஞஸேன! அரசனாக இராதவன் அரசனுக்கு சிநேகிதனாக இருக்கத்தகாதவனல்லவா? அதனாலேதான், உன்னுடைய ராஜ்யத்தைப் பற்றிப் பிரயத்தனஞ்செய்தேன். கங்கையின் தென்கரையில் உன் ராஜ்யம்; வடகரையில் என் ராஜ்யம். பாஞ்சால ராஜனே! விருப்பமிருந்தால் என்னை ஸ்னேகிதனென்று நீ அறியலாம்."

துருபதன், "பிராம்மணரே! பராக்ரமமுள்ள மஹாத்மாக்களிடம் இஃது ஆச்சரியமன்று. நான் உம்மிடத்தில் பிரீதி வைக்கிறேன். உம்முடைய தீர்க்கமான பிரீதியையும் விரும்புகிறேன்" என்றான். பாரதரே! அவனால் இவ்வாறு சொல்லப்பட்டபோது, துரோணர் அந்தத் துருபதனை விடுவித்தார்; அவனுக்கு மரியாதையையும்செய்து மனத்தில் அன்புடன் ராஜ்யத்திற் பாதியையும் கொடுத்தார். பிறகு, அந்தத்துருபதன் மனத்தளர்ச்சியடைந்து கங்கைக்கரையில் அனேக தேசங்களோடுகூடிய மாகந்தியென்னும் பட்டணத்தையும் காம்பில்யமென்னும் சிறந்த பட்டணத்தையும் சர்மண்வதிவரையிலுள்ள தக்ஷிண பாஞ்சால தேசத்தையும் ராஜ்யமாகச்செய்தான். இவ்வாறு துரோணரால் அவமதிக்கப்பட்டுப் பிறகு காப்பாற்றப்பட்ட துருபதன் தனது க்ஷத்ரிய பலத்தினால் அவரை வெல்வதை நினைக்கவில்லை. துருபதன் பிரம்மதேஜஸ் என்னும் பலம் தனக்கில்லாமையைத் தெரிந்துகொண்டு, புத்ரன் ஜனிக்க உபாயம்தேடிப் பூமியெல்லாம் ஸஞ்சரித்தான். துரோணர் அஹிச்சத்ரம் என்னும் தேசத்தையெடுத்துக்கொண்டார். அனேக தேசங்களடங்கிய அஹிச்சத்ராபுரி அர்ஜுனனால் யுத்தத்தில் ஜயிக்கப்பட்டுத் துரோணருக்கு கொடுக்கப்பட்டது. தாம் விரும்பியபடி குருதக்ஷிணையைப் பெற்ற துரோணர், அர்ஜுனனைக் கொண்டாடி மகிழ்ந்தார்.

---

## IV. பீமனும் பகனும்.

மஹாரதர்களாகிய குந்தி புத்திரர்கள் ரமணீயமான பலவகை வனங்களையும், நாடுகளையும், நதிகளையும், தடாகங்களையும் பார்த்துக்கொண்டு ஏகசக்ரநகரம் சென்று ஒரு பிராமணன் வீட்டில் வசித்தனர். அவரனைவரும் அப்போது பிக்ஷை எடுத்தனர். அவர்கள் ஜடையோடு கூடிய பிரம்மசாரிகளாகப் பிக்ஷையெடுத்துக்கொண்டிருக்கும்போது, குணங்களினால் நகரத்து ஜனங்களுக்குப் பார்ப்பதற்கு இனியவர்களாயிருந்தனர். நகரத்துஜனங்கள், "பார்ப்பதற்கு இனியவரும், பரிசுத்தரும், தேவகுமாரரைப் போன்றவரும், போக்கியரும், மென்மையான சரீரமுள்ளவருமாகிய இந்தத் தவப் பிராமணர்கள் பிக்ஷையெடுக்கத் தகாதவர்கள்; ராஜ்யத்துக்குத் தகுதியுள்ளவர்கள்" என்றும், "இந்த மிருதுவான சரீரமுள்ள ரிஷிகள் உண்மையில் பிராமணரல்லர்; ஏதோ காரணத்தினால் இந்தப் பூமியில் மாறுவேஷமாகச் சஞ்சரிக்கின்றனர்; எல்லா லக்ஷணங்களும் அமைந்த இவர்கள் ஒவ்வொருநாளும் பிக்ஷையெடுப்பதற்குத் தகுதியுள்ளவர்களல்லர்; காரியத்தைக் கருதித் திரிகின்றனர்" என்றும் ஊகித்துச் சொல்லிக்கொண்டனர். அவர்களைத் தங்களுக்கு உறவினர்கள் வந்ததாக நினைத்து நகரத்து ஜனங்கள் ஒவ்வொரு நாளும் உபசாரங்களோடு பிக்ஷாபாத்திரங்களைப் பக்ஷண வகைகளினாலும் போஜனங்களினாலும் நிரப்பினர்.

இவ்விதம் பாண்டவர்கள் மௌன விரதமெடுத்துக்கொண்டு பிக்ஷைகளை வாங்கினர். அந்தப் பாண்டவர்கள் போய்த் திரும்பிவர நேரமாகும்போது தாயார் அவர்களைப் பற்றி விசனப்பட்டுக்கொண்டு துக்கத்தினால் நீர் நிரம்பின

CS CamScanner

# IV. பீமனும் பகனும்.

மஹாரதர்களாகிய குந்தி புத்திரர்கள் ரமணீயமான பலவகை வனங்களையும், நாடுகளையும், நதிகளையும், தடாகங்களையும் பார்த்துக்கொண்டு ஏகசக்ரநகரம் சென்று ஒரு பிராமணன் வீட்டில் வஸித்தனர். அவரனைவரும் அப்போது பிக்ஷை எடுத்தனர். அவர்கள் ஜடையோடு கூடிய பிரம்மசாரிகளாகப் பிக்ஷை யெடுத்துக்கொண் டிருக்கும்போது, குணங்களினால் நகரத்து ஜனங்களுக்குப் பார்ப்பதற்கு இனியவர்களா யிருந்தனர். நகரத்துஜனங்கள், "பார்ப்பதற்கு இனியவரும், பரிசுத்தரும், தேவகுமாரரைப் போன்றவரும், யோக்கியரும், மென்மையான சரீரமுள்ளவருமாகிய இந்தத் தவப் பிராமணர்கள் பிக்ஷை யெடுக்கத் தகாதவர்கள்; ராஜ்யத்துக்குத் தகுதியுள்ளவர்கள்" என்றும், "இந்த மிருதுவான சரீரமுள்ள ரிஷிகள் உண்மையில் பிராமணரல்லர்; ஏதோ காரணத்தினால் இந்தப் பூமியில் மாறுவேஷமாகச் சஞ்சரிக்கின்றனர்; எல்லா லக்ஷணங்களும் அமைந்த இவர்கள் ஒவ்வொருநாளும் பிக்ஷையெடுப்பதற்குத் தகுதியுள்ளவர்களல்லர்; காரியத்தைக் கருதித் திரிகின்றனர்" என்றும் ஊகித்துச் சொல்லிக்கொண்டனர். அவர்களைத் தங்களுக்கு உறவினர்கள் வந்ததாக நினைத்து நகரத்து ஜனங்கள் ஒவ்வொரு நாளும் உபசாரங்களோடு பிக்ஷாபாத்திரங்களைப் பக்ஷண வகைகளினாலும் போஜனங்களினாலும் நிரப்பினர்.

இவ்விதம் பாண்டவர்கள் மௌன விரதமெடுத்துக்கொண்டு பிக்ஷைகளை வாங்கினர். அந்தப் பாண்டவர்கள் போய்த் திரும்பிவர நேரமாகும்போது தாயார் அவர்களைப் பற்றி விசனப்பட்டுக்கொண்டு துக்கத்தினால் நீர் நிரம்பின

கண்களோடு தரையைக் கீறிக்கொண்டிருந்தாள். அவர்கள் பிராமண கிருஹங்களில் தாயாரை நினைத்துக்கொண்டே பிக்ஷை யெடுத்துத் தாயாரிடத்திலுள்ள மரியாதையினால் கட்டுப்பட்டவர்களாக விரைவில் திரும்பிவந்தனர். அவர்கள் இரவும் பகலும் எடுக்கும் பிக்ஷைகளைத் தாயாராகிய குந்தியிடம் ஒப்புவித்தனர். ஒன்றுசேர்ந்த பிக்ஷான்னமெல்லாவற்றையும் தாயார் தனித்தனியே பகுத்துக்கொடுத்த பிறகு அவர்கள் தம் தம் பாகங்களை அவர்கள் இஷ்டப்படி, தனித்தனியே புஜித்தனர். வீரர்களாகிய பாண்டவர்கள் தாயாருடன்கூட முழுப்பிக்ஷான்னத்தில் ஒருபாதியைப் புஜித்தனர். மஹாபலசாலியான பீமன் மாத்திரம் மற்றொரு பாதியைப் புஜித்தான். முன்னே சிறந்த அன்னத்தைப் புஜித்தவனான பீமன் நிரம்பின போஜனஞ் செய்தவனாக இருக்கவில்லை. போஜன திருப்தியில்லாமையினா லுண்டான நிறமாறுதலையும் இளைப்பையும் அவன் அடைந்தான். ஜ்வலிக்கின்ற பெருந்தீக்கு ஒரு நெய்த்துளி யிருப்பதுபோல பிக்ஷைச் சோற்றின் அரைப்பாகம் அவனுக்கிருந்தது.

அந்த மஹாத்மாக்கள் அவ்வாறே அவ்விடத்தில் பல நாள் வஸித்தனர். பீமனும் பிராம்மண சிநேகிதர்களோடு விளையாடினபிறகு, ஒரு குயவனுடைய சிநேகத்தினால் மிகப்பெரிய ஒரு பாண்டத்தை அடைந்தான். அந்த மண் பாத்திரத்தை எடுத்துக்கொண்டுவந்த பீமனைக்கண்டு ஜனங்கள் நகைத்துப் பரிகாசம் செய்தனர்; பலவகையான பக்ஷணங்களையும் போஜனங்களையும் கொணர்ந்து அதனில் போட்டனர். இவ்வாறாகவே எப்போதும் புஜித்துக்கொண்டு வருகையில் ஒருநாள் பீமன் தாயாரிடம் ஏகாந்தத்தில், “அம்மா! முன்னே சிறந்த அன்னத்தினால் வளர்க்கப்பட்ட



நான் வயிறு நிரம்பாமலே இருக்கிறேன்” என
சொன்னான்.

பிறகு, ஒருகால் அந்தப் புருஷசிரேஷ்டர்கள் பி
குப் போயினர். பீமஸேனன்மட்டும் குந்தியுடன் சே
அங்கே இருந்தான். அப்போது பிராமணன் வசிக்கும்
தில் துக்கத்தினாலுண்டான மிகப்பயங்கரமான பேரிரை
கிளம்புவதைக் குந்தி செவியுற்றாள். அதிகமாகக் க
புலம்புகிற அவர்களைக்கண்டு அந்தக்குந்தி தாங்கவி
நல்லவளான குந்தி மனத்திலுண்டான துக்கத்தினால்
கப்பட்டவள் ஆகித் தயையுடன் பீமனை நோக்கிப் பி
மாறு சொல்லலானாள். “புத்திரனே! பிராமணன் வீ
திருதராஷ்டிரன்பிள்ளைக்குத் தெரியாமலும் கௌர
பெற்றும் விசனத்தைவிட்டும் மிகச் சுகமாக வசிக்கி
புத்திரனே! அதனால் நான் இந்தப் பிராமணனுக்குப்
யுபகாரம் எப்போது செய்வேனென்று சதாகாலமும்
துக்கொண்டிருக்கிறேன். குழந்தாய்! எவனிடத்தி
நன்றி கெடாமலிருக்கிறதோ அவன் மாத்திரந்தான் ம
இந்தப் பிராமணனுக்கு துயரம் வந்திருப்பது
இந்தச் சமயத்தில் உதவிசெய்தோமானால் புண்ணிய
கும்” என்றாள். பீமன் அதைக்கேட்டு, “இவனுக்கு
துன்பம் யாரால் உண்டாயிற்றென்று தெரிந்
பிறகு மிக அசாத்தியமாயினும் அதைச் செ
என்று சொன்னான்.

இவ்வாறு பேசிக்கொண்டிருக்கும்போதே
மறுபடியும் அந்தப் பிராமணனும் அவன் மனைவி
தனாலுண்டான கூச்சலைச் செவியுற்றனர். பிற

நான் வயிறு நிரம்பாமலே இருக்கிறேன்" என்று சொன்னான்.

பிறகு, ஒருகால் அந்தப் புருஷசிரேஷ்டர்கள் பிக்ஷைக்குப் போயினர். பீமஸேனன்மட்டும் குந்தியுடன் சேர்ந்து அங்கே இருந்தான். அப்போது பிராமணன் வசிக்குமிடத்தில் துக்கத்தினாலுண்டான மிகப்பயங்கரமான பேரிரைச்சல் கிளம்புவதைக் குந்தி செவியுற்றாள். அதிகமாகக் கதறிப் புலம்புகிற அவர்களைக்கண்டு அந்தக்குந்தி தாங்கவில்லை. நல்லவளான குந்தி மனத்திலுண்டான துக்கத்தினால் கலக்கப்பட்டவள் ஆகித் தயையுடன் பீமனை நோக்கிப் பின்வருமாறு சொல்லலானாள். "புத்திரனே! பிராமணன் வீட்டில் திருதராஷ்டிரன்பிள்ளைக்குத் தெரியாமலும் கௌரவிக்கப் பெற்றும் விசனத்தைவிட்டும் மிகச் சுகமாக வசிக்கிறோம்; புத்திரனே! அதனால் நான் இந்தப் பிராமணனுக்குப் பிரதியுபகாரம் எப்போது செய்வேனென்று சதாகாலமும் நினைத்துக்கொண்டிருக்கிறேன். குழந்தாய்! எவனிடத்தில் செய்ந்நன்றி கெடாமலிருக்கிறதோ அவன் மாத்திரந்தான் மனிதன். இந்தப் பிராமணனுக்கு துயரம் வந்திருப்பது நிச்சயம். இந்தச் சமயத்தில் உதவிசெய்தோமானால் புண்ணியமுண்டாகும்" என்றாள். பீமன் அதைக்கேட்டு, "இவனுக்கு என்ன துன்பம் யாரால் உண்டாயிற்றென்று தெரிந்துகொள். பிறகு மிக அசாத்தியமாயினும் அதைச் செய்வேன்" என்று சொன்னான்.

இவ்வாறு பேசிக்கொண்டிருக்கும்போதே அவர்கள் மறுபடியும் அந்தப் பிராமணனும் அவன் மனைவியும் அழுவதனாலுண்டான கூச்சலைச் செவியுற்றனர். பிறகு, குந்தி,

கட்டப்பட்ட கன்றையுடைய பசுவைப்போல் அந்த மஹாத்மாவான பிராமணனுடைய அந்தப்புரத்தில் துரிதமாக நுழைந்தாள். அப்போது அங்கே மனைவியோடும் பிள்ளையோடும் பெண்ணோடுங்கூட முகம்வேறுபட்டிருந்த அந்தப் பிராமணன் "ரசமில்லாததும் பயனற்றதும் துன்பத்திற்குக் காரணமானதும் பிறருக்குட்பட்டதும் மிக்க வெறுப்புக்கு இடமானதுமாகிய இவ்வுலக வாழ்க்கை எதற்கு? பிழைத்திருப்பதில் துயரமதிகம். பிழைத்திருப்பதால் தாபமதிகம். உயிர் வாழ்க்கையில் இருப்பவனுக்கு இரட்டைகள்; அதாவது, ஸுகதுக்கம், லாபநஷ்டம், ஜயாபஜயம், சீதோஷ்ணம் முதலியவைகள் வருவன தவறா. ஆத்மா ஒன்றுதான் தர்மார்த்த காமங்களை அனுபவிக்கிறது. இவைகளின் பிரிவும் முடிவில்லாப் பெருந்துயரமாகும். சிலர் வீட்டைச் சிலாக்கியமாகச் சொல்லுகின்றனர். அஃது எவ்வகையிலுமில்லை. அர்த்தத்தை அடைந்தால் எல்லா நரகங்களும் வருகின்றன. பொருளீட்டமுயல்வது பெருந் துயரம். பொருள் கிடைத்தபின் அதற்கு மேலான துயரம். பொருளில் ஆசை உண்டானவனுக்கு அது விலகினபோது பெருந் துயரம் உண்டாகிறது. எவனுக்குத் தான் விரும்பின திரவியலாபங்கள் எவ்வளவு உண்டாகின்றனவோ அவ்வளவு துன்பமென்னும் ஆணிகள் அவன் உள்ளத்தில் நாட்டப்படுகின்றன. கொஞ்சகால மிருக்கத்தக்கதும் மஹாபயமுள்ளதுமாகிய இந்த உயிர்வாழ்க்கையை யடைந்து மனைவியோடுஞ் சேர்ந்த எனக்கு வைராக்கியம் கிடைக்கவில்லை. இந்த ஆபத்திலிருந்து விடுபடும் உபாயம் எனக்குத் தெரியவில்லை. மனைவி மக்களுடன்கூடத் துன்பமில்லாத இடத்திற்கு நான் ஓடிப்போவேன். பெண்ணே! எங்கே க்ஷேமமுண்டோ அங்கே போவதற்கு நான் முன்னே முயற்சி செய்தேன்.



அஃது உனக்குத் தெரியும். ஆனால் நீ என் சொல்லைக் கேட்கவில்லை. அறிவு கெட்டவளே! என்னால் பலமுறை வேண்டப்பட்டும் 'இங்குப் பிறந்தேன்; இங்கு வளர்ந்தேன்; இங்கு என் தந்தையும் தாயுமிருக்கின்றனர்' என்று சொன்னாயல்லவா? கிழவனாகிய உன் பிதா வெகுநாளைக்கு முன்னே ஸ்வர்க்கம் சென்றான். உன் தாயும் அப்படியேயானாள். உறவினர்களும் முன்னேயிருந்தனர். அந்த இடத்தில் வசிப்பதில் என்ன ஆசை? எங்கே போஜனத்துக்குத் தடையிராதோ, எங்கே ஸ்திரீயின் பிறந்த வீடு கட்டுப்படுத்தாதோ அந்தத் தேசம் மிகத் தூரத்திலிருந்தபோதிலும் மனிதன் கருடனைப்போலவும் அன்னத்தைப்போலவும் செல்லவேண்டும். பந்துக்களை விரும்பி, நான் சொன்னதை நீ கேட்காம லிருந்ததனால், எனக்கு மிக்க துயரத்தை உண்டாக்குகின்ற அந்தப் புத்திரனென்னும் பந்துவின் மரணம் இதோ நேர்ந்திருக்கின்றது. அல்லது இஃது என் மரணமேதான். ஏனெனில் நான் ஜீவித்திருக்க எனக்கு உறவினனாகிய எவனையும் கைவிடச் சக்தியற்றவனாயிருக்கிறேன். எப்போதும் என்னுடன்கூடவே அறத்தைச் செய்பவளும், ஐம்புலன்களையும் ஜயித்தவளும், எனக்குத் தாய்போன்றவளும், என்னிடம் அன்புள்ளவளும் தேவர்களால் முக்கியமாக விதிக்கப்பட்ட சிறந்ததான ஆதரவானவளும், என் தாய் தந்தையரால் ஏற்படுத்தப்பட்டவளும், எப்போதும் இல்லறத்தில் பாகமுள்ளவளும், நல்ல குலத்திற் பிறந்தவளும், நல்லொழுக்கமுள்ளவளும், புத்ரஸந்தானமுள்ளவளும், கற்புள்ளவளும், இன்னாதன செய்யாதவளும், எப்போதும் ஒத்திருப்பவளுமான மனைவியாகிய உன்னை முறைப்படி வரித்து, மந்திரபூர்வமாக விவாஹம் செய்துகொண்டு இப்பொழுது என் உயிரைக் காப்பாற்றிக்கொள்ளு

MAHAMAHOPADHYAYA
SWAMINATHA IYER LIBRARY

அஃது உனக்குத் தெரியும். ஆனால் நீ என் சொல்லைக் கேட்கவில்லை. அறிவு கெட்டவளே! என்னால் பலமுறை வேண்டப்பட்டும் 'இங்குப் பிறந்தேன்; இங்கு வளர்ந்தேன்; இங்கு என் தந்தையும் தாயுமிருக்கின்றனர்' என்று சொன்னாயல்லவா? கிழவனாகிய உன் பிதா வெகுநாளைக்கு முன்னே ஸ்வர்க்கம் சென்றான். உன் தாயும் அப்படியே யானாள். உறவினர்களும் முன்னேயிருந்தனர். அந்த இடத்தில் வசிப்பதில் என்ன ஆசை? எங்கே போஜனத்துக்குத் தடையிராதோ, எங்கே ஸ்திரீயின் பிறந்த வீடு கட்டுப்படுத்தாதோ அந்தத் தேசம் மிகத் தூரத்திலிருந்தபோதிலும் மனிதன் கருடனைப்போலவும் அன்னத்தைப்போலவும் செல்லவேண்டும். பந்துக்களை விரும்பி, நான் சொன்னதை நீ கேட்காமலிருந்ததனால், எனக்கு மிக்க துயரத்தை உண்டாக்குகின்ற அந்தப் புத்திரனென்னும் பந்துவின் மரணம் இதோ நேர்ந்திருக்கின்றது. அல்லது இஃது என் மரணமேதான். ஏனெனில் நான் ஜீவித்திருக்க எனக்கு உறவினனாகிய எவனையும் கைவிடச் சக்தியற்றவனாயிருக்கிறேன். எப்போதும் என்னுடன்கூடவே அறத்தைச் செய்பவளும், ஐம்புலன்களையும் ஜயித்தவளும், எனக்குத் தாய்போன்றவளும், என்னிடம் அன்புள்ளவளும் தேவர்களால் முக்கியமாக விதிக்கப்பட்ட சிறந்ததான ஆதரவானவளும், என் தாய் தந்தையரால் ஏற்படுத்தப்பட்டவளும், எப்போதும் இல்லறத்தில் பாகமுள்ளவளும், நல்ல குலத்திற் பிறந்தவளும், நல்லொழுக்கமுள்ளவளும், புத்ரஸந்தானமுள்ளவளும், கற்புள்ளவளும், இன்னாதன செய்யாதவளும், எப்போதும் ஒத்திருப்பவளுமான மனைவியாகிய உன்னை முறைப்படி வரித்து, மந்திரபூர்வமாக விவாஹம் செய்துகொண்டு இப்பொழுது என் உயிரைக் காப்பாற்றிக்கொள்ளு

MAHAMAHOPADHYAYA
DR. U. V. SWAMINATHA IYER LIBRARY

CamScanner

வதற்காக, விடுவதற்கு நான் சமர்த்தனல்லேன். மேலும் பருவம் வராத சிறுமியாகிய எனது புதல்வியை நானே விட்டுவிட என்னால் எவ்வாறு முடியும்? எவளால் நானும் என் பிதிர்க்களும் பெயரனால் கிடைக்கத்தக்க உலகங்களை எதிர்பார்க்கிறோமோ, அந்தப் பெண்ணைப் பெற்றுவளர்த்து எவ்வாறு விடத்துணிவேன்? சில மனிதர்கள் தந்தைக்குப் புத்திரனிடம் அன்பு அதிகமென்று நினைக்கின்றனர். எனக்கு இருவரும் சமமென்பதே கருத்து. எவளிடத்தில் புண்ணிய லோகங்களும், சந்ததியும், சந்தோஷமும் எப்போதும் இருக்கின்றனவோ குற்றமில்லாமலிருக்கிற அந்தப்பெண் குழந்தையை நானெவ்வாறு விடத்துணிவேன்? என் புத்திரனை நான் எப்படிவிடுவேன்? எவனைப்பற்றி மிகுந்த ஸுகத்தையும் ஸ்வர்க்கத்திலுள்ள பலன்களையும் நான் எதிர்பார்க்கலாமோ, ஜனித்தவுடன் எவனுடைய முகத்தைக்கண்டு பிதிர்க்கள் ஸ்வர்க்கம் சென்றனரோ, இறந்தவுடன் எவனுடைய மஹிமையினால் நான் பிதிர்க்களின் கடனிலிருந்து விடுபட்டேனோ, எனக்குப்பிரியனும், குலத்தைக்கரையேற்றுகிறவனும் எனக்கு எஜமானனும், எனக்கு மூத்தகுமாரனுமான அந்தக் குழந்தையை நான் எப்படி விடுவேன்? எனக்குப் பிண்டதர்ப்பணங்கள் கொடுக்கும் நிதியாகிய அருமைப் புதல்வனை எவ்வாறு விடுவேன்? என்னையாவது, என் புதல்வனையாவது, உன்னையாவது, உன் பெண்ணையாவது விடுவது இதோ நேர்ந்திருக்கிறது; அது நாம் இங்கே வசித்ததின் பயன். பெண்ணே! என் சொல்லை நீ கேட்கவில்லை. அதன் பலனை அனுபவி. நானே சாவதற்கும் என் ஒரு புத்திரனையாவது, உன்னையாவது, பெண்ணையாவது, விடுவதற்கும் நான் சக்தியுள்ளவனல்லன். நான் ஜீவித்திருந்து, நான் தப்பித்துக் கொள்வதற்காகக் கொடியவனைப்போல் ஒரு



பந்துவையும் விடச் சக்தியுள்ளவனல்லன். நான் என் சரீரத்தைவிட்டு யமலோகம் சென்றால் என்னாலும் உன்னாலும் விடப்பட்ட இவர்கள் இவ்விடத்தில் ஜீவித்திருக்க முடியாதவர்கள். இவர்களில் யாரைவிடுவதும் கொடியதே; அறிஞரால் இகழப்பட்டதுமாம். நான் ஆத்ம த்யாகஞ் செய்தாலும் இவர்கள் நானில்லாமல் இறந்துபோவர். அதனால் நான் சங்கடமான ஆபத்தை அடைந்திருக்கிறேன். இதைத் தாண்ட முடியவில்லை. ஐயோ! சீ! நான் என் பந்துக்களுடன்கூட எந்தவழிச் செல்வேன்? எல்லாருடனுங்கூட இறந்து போவது சிறந்தது. நான் ஜீவித்திருப்பது தகுதியன்று" என்றான்.

பிராமணன் மனைவி சொல்லுகிறாள்:— "நீர் சாமான்ய மனிதனைப் போலப் பரிதாபப்படுவது ஒருபோதும் தகாது. வித்வானாகிய உமக்கு இது சரியாக இருக்கவில்லை. இவ்வுலகத்திலுள்ள மனிதரனைவரும் அவசியம் மரணமடைய வேண்டியவர்தாம். அவசியம் வரத்தக்க இந்தவிஷயத்தில் வருத்தமில்லை. மனைவியும், மைந்தனும், மகளும் மற்றனைத்தும் தன்னுடையனவென்று, அறிவின்மையால் நினைக்கப்படுகின்றன. நீர் நல்லறிவினால் துன்பத்தை விடும். நானே அங்குப் போவேன். தன் உயிரையும் விட்டுத் தன் கணவனுக்கு நன்மைசெய்வது தான் இவ்வுலகத்தில் பெண்களுக்குப் பழமையான முக்கிய தருமம். அப்படிச் செய்வதால் பரலோகத்திற்குச் செய்யவேண்டிய கருமமும் செய்ததாகிறது; உமக்கு இப்போது ஸௌக்கியத்தைச் செய்ததுமாகிறது; பரலோகத்திலும் அழியாத பயனுள்ளதாயிருக்கிறது; இவ்வுலகத்திலும் புகழை உண்டுபண்ணுகிறது.

பந்துவையும் விடச் சக்தியுள்ளவனல்லன். நான் என் சரீரத்தைவிட்டு யமலோகம் சென்றால் என்னாலும் உன்னாலும் விடப்பட்ட இவர்கள் இவ்விடத்தில் ஜீவித்திருக்க முடியாதவர்கள். இவர்களில் யாரைவிடுவதும் கொடியதே; அறிஞரால் இகழப்பட்டதுமாம். நான் ஆத்ம த்யாகஞ் செய்தாலும் இவர்கள் நானில்லாமல் இறந்துபோவர். அதனால் நான் சங்கடமான ஆபத்தை அடைந்திருக்கிறேன். இதைத் தாண்ட முடியவில்லை. ஐயோ! சீ! நான் என் பந்துக்களுடன்கூட எந்தவழிச் செல்வேன்? எல்லாருடனுங்கூட இறந்து போவது சிறந்தது. நான் ஜீவித்திருப்பது தகுதியன்று" என்றான்.

பிராமணன் மனைவி சொல்லுகிறாள் :— "நீர் சாமான்ய மனிதனைப் போலப் பரிதாபப்படுவது ஒருபோதும் தகாது. வித்வானாகிய உமக்கு இது சரியாக இருக்கவில்லை. இவ்வுலகத்திலுள்ள மனிதரனைவரும் அவசியம் மரணமடைய வேண்டியவர்தாம். அவசியம் வரத்தக்க இந்தவிஷயத்தில் வருத்தமில்லை. மனைவியும், மைந்தனும், மகளும் மற்ற அனைத்தும் தன்னுடையனவென்று, அறிவின்மையால் நினைக்கப்படுகின்றன. நீர் நல்லறிவினால் துன்பத்தை விடும். நானே அங்குப் போவேன். தன் உயிரையும் விட்டுத் தன் கணவனுக்கு நன்மைசெய்வது தான் இவ்வுலகத்தில் பெண்களுக்குப் பழமையான முக்கிய தருமம். அப்படிச் செய்வதால் பரலோகத்திற்குச் செய்யவேண்டிய கருமமும் செய்ததாகிறது; உமக்கு இப்போது ஸௌக்கியத்தைச் செய்ததுமாகிறது; பரலோகத்திலும் அழியாத பயனுள்ளதாயிருக்கிறது; இவ்வுலகத்திலும் புகழை உண்டுபண்ணுகிறது.

நான் உமக்குச்சொல்லப்போவதும் ஒரு பெரிய தருமந்தான். இதில் உமக்குப் பொருளும், அறமும் மிகுதியாகக் காணப்படுகின்றன. மனைவியிடம் விரும்பப்படுகிற பிரயோஜனமாகிய ஒரு புத்ரியையும் புத்ரனையும் நீர் என்னிடம் அடைந்திருக்கிறீர். உம்மால் நான் கடனில்லாதவளாகச் செய்யப்பட்டேன். பெண்ணையும் பிள்ளையையும் வளர்ப்பதற்கும் காப்பதற்கும் நீர் எவ்வாறு சக்தியுள்ளவரோ அவ்வாறு நான் அவர்களைக் காப்பாற்றத் திறமையுள்ளவளல்லேன். என்னுடைய பிராணன், தனம் எல்லாவற்றிற்கும் தலைவரே! நீங்களில்லாமல் நான் எவ்வாறு குழந்தைகளைக் காப்பேன்.

“நாதரே! துஷ்டஜனங்கள் மிகுந்த இவ்வுலகத்தில் பெண்ஜன்மம் கஷ்டமானது. கன்னிகையாயிருக்கும்போது தாய்தந்தையர் வசத்திலும், விவாகமானபின் கணவன் வசத்திலும், இவர்களில்லாதபோது புத்திரன் வசத்திலும் பெண்கள் இருக்கவேண்டும். உமது குலத்திற்கு ஏகபுத்திரனை, குற்றமில்லாத இந்தக் குழந்தையைத் தந்தை, பாட்டன் சென்ற வழியில் நடத்துவதற்கு என்னால் எவ்வாறு முடியும்? நாதனற்று எல்லாம் போய்விட்ட இந்தக் குழந்தைக்கு நாம் விரும்பின கல்வி முதலிய குணங்களைத் தர்மந்தெரிந்த நீர் கற்பிப்பதுபோல நான் எவ்வாறு செய்யத் திறமையுள்ளவளாவேன்? நாதனில்லாத உமது இந்தப் பெண் குழந்தையைத் தகாதவர்கள் விரும்புவர். அப்படி விரும்பப்பட்டவளை நான் கொடுக்க விரும்பாமலிருப்பேனாயின் நற்குணங்கள் நிரம்பின இவளை அவர்கள் பலாத்காரமாகக் கொண்டுபோவர். பிராம்மணரே! உமது இந்தப் புத்திரி அயோக்கியர்களிடம் அகப்பட்டது நமக்குத் தகாததாக இருப்பதைப் பார்த்தும், உலகத்திலுள்ள கர்வங்



கொண்ட மனிதர்களால் அவமதிக்கப்பெற்றும் என்னை அறியாமலே நான் இறந்துபோவேன்; இது நிச்சயம். என்னாலும் தங்களாலும் விடப்பட்ட இந்த நம் ஸந்ததிகளாகிய இருகுழந்தைகளும், ஜலம் வற்றினதினால் மீன்கள் அழிவனபோல அழிந்துபோவார்கள்; இதில் ஐயமில்லை. நீங்கள் விட்டுவிட்டால் இவ்வாறு அவசியம் மூவர் அழிவார்களென்பதில் ஸந்தேகமில்லை. ஆதலால், நீர் என்னை ராக்ஷஸனுக்கு இரையாக விட்டுவிடுவது உசிதம். ஓ! பிராம்மணரே! கணவனுக்கு முன் பரலோகமடைவது மக்களைப் பெற்ற பெண்டிருக்குப் பெரும்பாக்கியமென்று தர்ம சாஸ்திரந் தெரிந்தவர்கள் கூறுகின்றார்கள்.

“எவள் மஞ்சள், மை, புஷ்பம் முதலிய சுமங்கலி
லக்ஷணங்களோடு கூடியவளாயிருந்து கணவரின் பாதங்
களில் மனம் வைத்து, அவர் முன்னிலையில் மரணமடை
கிறாளோ அவள் பார்வதிலோகத்தை அடைகிறாள்; பார்வதிக்
குத் தோழியாயிருந்து அந்தப் பர்வதராஜ கன்னிகையுடன்
கூட மகிழ்கிறாள். அளவற்ற நன்மையைக் கொடுப்பவகிரா
கணவரை எவள்தான் பூஜிக்கமாட்டாள்?

“இந்தப் புத்திரனும் இந்தப் புத்திரியும் என் உறவி
ரும் என்னால் விடப்பட்டனர். என்னுயிரும் உமக்காக
தானிருக்கிறது. பலவகையான யாகம், தவம், நியம
கொடை இவையெல்லாவற்றையும் காட்டிலும் கணவர
விருப்பத்தையும் நன்மையையும் விடாமலிருப்பதுதா
பெண்ணுக்குச் சிறப்பானது. ஆதலால், மிகவும் சாஸ்
சம்மதமான இந்தத் தர்மத்தை நான் செய்யவிரும்புகிறே
இது உமக்கும் குலத்துக்கும் பிரியமும் அனுகூலமுமான

கொண்ட மனிதர்களால் அவமதிக்கப்பெற்றும் என்னை அறியாமலே நான் இறந்துபோவேன்; இது நிச்சயம். என்னாலும் தங்களாலும் விடப்பட்ட இந்த நம் ஸந்ததிகளாகிய இருகுழந்தைகளும், ஜலம் வற்றினதினால் மீன்கள் அழிவனபோல அழிந்துபோவார்கள்; இதில் ஐயமில்லை. நீங்கள் விட்டுவிட்டால் இவ்வாறு அவசியம் மூவர் அழிவார்களென்பதில் ஸந்தேகமில்லை. ஆதலால், நீர் என்னை ராக்ஷஸனுக்கு இரையாக விட்டுவிடுவது உசிதம். ஓ! பிராம்மணரே! கணவனுக்கு முன் பரலோகமடைவது மக்களைப் பெற்ற பெண்டிருக்குப் பெரும்பாக்கியமென்று தர்ம சாஸ்திரந் தெரிந்தவர்கள் கூறுகின்றார்கள்.

"எவள் மஞ்சள், மை, புஷ்பம் முதலிய சுமங்கலி லக்ஷணங்களோடு கூடியவளாயிருந்து கணவரின் பாதங்களில் மனம் வைத்து, அவர் முன்னிலையில் மரணமடைகிறாளோ அவள் பார்வதீலோகத்தை அடைகிறாள்; பார்வதிக்குத் தோழியாயிருந்து அந்தப் பர்வதராஜ கன்னிகையுடன் கூட மகிழ்கிறாள். அளவற்ற நன்மையைக் கொடுப்பவராகிய கணவரை எவள்தான் பூஜிக்கமாட்டாள்?

"இந்தப் புத்திரனும் இந்தப் புத்திரியும் என் உறவினரும் என்னால் விடப்பட்டனர். என்னுயிரும் உமக்காகத்தானிருக்கிறது. பலவகையான யாகம், தவம், நியமம், கொடை இவையெல்லாவற்றையும் காட்டிலும் கணவரது விருப்பத்தையும் நன்மையையும் விடாமலிருப்பதுதான் பெண்ணுக்குச் சிறப்பானது. ஆதலால், மிகவும் சாஸ்திர சம்மதமான இந்தத் தர்மத்தை நான் செய்யவிரும்புகிறேன். இது உமக்கும் குலத்துக்கும் பிரியமும் அனுகூலமுமானது.

“புத்திரர்களும், திரவியங்களும், அன்புள்ள சிநேகிதர்களும், மனைவியும் ஆபத்தர்மத்தில் விடுவதற்காக விரும்பப்படுகிறவர்களென்பது ஸாதுக்களுடைய ஸம்மதம். ஆபத்காலத்திற்காகத் தனத்தைக் காப்பாற்றிவைக்கவேண்டும். தனத்தினால் மனைவியைக் காப்பாற்றவேண்டும். தனத்தினாலும் மனைவியினாலும் தன்னை எப்போதும் காப்பாற்றிக் கொள்ளவேண்டும். பாரியை, புத்திரன், தனம், கிருகம் இவையெல்லாம் ஸம்பாதிக்கப்படவேண்டியவை யென்பது வித்வான்களுடைய நிச்சயம். குலமனைத்தும் ஒருதட்டு; குலத்தை விருத்திசெய்யும் தான் ஒருதட்டு; வித்வானே! இவ்விரண்டில் எது அதிகம்? குலத்தைவிடத் தான்தான் அதிகம். ஆதலால், நீர் உம்மைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டும். தானில்லாதபோது ஒருவனுக்கு இவ்வுலகத்தில் எதுவுமில்லை. ஆதலால், நீர் என்னால் காரியத்தைச் செய்துகொள்ளும்; உம்மால் உம்மைக் கரையேற்றிக்கொள்ளும்; எனக்கு விடைகொடும்; என் குழந்தைகளைக் காப்பாற்றும்.

“தர்மந்தெரிந்தவர்கள் ஸ்திரீகளைக் கொல்லக்கூடாதென்று சொல்லுகின்றனர். ராக்ஷஸர்களுக்கும் தர்மந்தெரியுமென்று சொல்லுகின்றனர். அவன் என்னைக் கொல்லாமலுமிருக்கலாம். ஆனால் அவன் புருஷர்களை வதஞ்செய்வதில் ஸந்தேகமில்லை; ஸ்திரீகளைக் கொல்லுவது ஸந்தேகம். ஆதலால், என்னையே நீர் அனுப்பத் தகும். விரும்பினவற்றை அடைந்தேன்; தர்மானுஷ்டானஞ் செய்தேன். உமக்குப் பணிவிடை செய்ததனால் எனக்குண்டான கீர்த்தியும் ஒப்பற்றது. பிரியமான மக்களையும் பெற்றேன். மரணம் என்னை வருத்தாது. புத்திரர்களைப் பெற்றவளும் முதிர்ந்தவளும் எப்போதும் உம்முடைய விருப்பத்தையே



விரும்புகிறவளுமா யிருக்கிறேன். இவற்றை யெல்லாம் ஆராய்ந்து நான் இந்த விஷயத்தில் ஆரம்பத்தைச் செய் கிறேன்.

“என்னை விட்டபிறகும் நீர் வேறொரு ஸ்திரீயை யடை தாலும் அடைவீர். அதனால் உமது தர்மம் மறுபடியு நிலைபெற்றதாகும். ஆராய்ந்து, நீர் இப்போது உம்மையு உமது குலத்தையும் இந்தக்குழந்தைகளையும் விரைவி காப்பாற்றக்கடவீர்.”

மனைவி இவ்வாறு சொல்லக்கேட்ட கணவன் அவளை பார்த்து மிகத்துயரமடைந்து மெல்லியகுரலோடு கண் விட்டழுதான். “அன்புள்ளவளே! நீ இவ்வாறு பேசாதே இங்கேயே இரு. ஞானமுள்ளவன் மனைவியை புதல்வர்களையும் ஒருபோதும் விடமாட்டான். புத்தியு புருஷன் இவ்வுலகத்தில் ஸ்திரீயை முக்கியமாக ரக்ஷ வேண்டும். எந்தக்காலத்திலும் விடத்தகாதவளாகிய அ விட்டு ஒரு மனிதன் ஜீவிப்பானாயின் அவன் அ பொருள், இன்பம், வீடுகளுள் ஒன்றையும் சரியாக யாதவனாவான்” என்று பிராமணன் சொன்னான்.

அளவுக்கு மிஞ்சித் துக்கப்படுகிற அவ்விருவர்களு சொல்லையும் கேட்டவுடனே, துக்கத்தினால் மாறு அங்கத்தோடுகூடிய அவர்களுடைய பெண் அவ்விருவ நோக்கிப் பேசத் தொடங்கினாள்:—

“ஏன் இவ்வாறு அதிக துக்கத்தினால் பீடிக்க அநாதைகளைப்போல் அழுகிறீர்கள்? என் சொ

விரும்புகிறவளுமா யிருக்கிறேன். இவற்றை யெல்லாம் ஆராய்ந்து நான் இந்த விஷயத்தில் ஆரம்பத்தைச் செய்கிறேன்.

"என்னை விட்டபிறகும் நீர் வேறொரு ஸ்திரீயை யடைந்தாலும் அடைவீர். அதனால் உமது தர்மம் மறுபடியும் நிலைபெற்றதாகும். ஆராய்ந்து, நீர் இப்போது உம்மையும் உமது குலத்தையும் இந்தக்குழந்தைகளையும் விரைவில் காப்பாற்றக்கடவீர்."

மனைவி இவ்வாறு சொல்லக்கேட்ட கணவன் அவளைப் பார்த்து மிகத்துயரமடைந்து மெல்லியகுரலோடு கண்ணீர் விட்டழுதான். "அன்புள்ளவளே! நீ இவ்வாறு பேசாதே; இங்கேயே இரு. ஞானமுள்ளவன் மனைவியையும் புதல்வர்களையும் ஒருபோதும் விடமாட்டான். புத்தியுள்ள புருஷன் இவ்வுலகத்தில் ஸ்திரீயை முக்கியமாக ரக்ஷிக்க வேண்டும். எந்தக்காலத்திலும் விடத்தகாதவளாகிய அவளை விட்டு ஒரு மனிதன் ஜீவிப்பானாயின் அவன் அறம், பொருள், இன்பம், வீடுகளுள் ஒன்றையும் சரியாக அறியாதவனாவான்" என்று பிராமணன் சொன்னான்.

அளவுக்கு மிஞ்சித் துக்கப்படுகிற அவ்விருவர்களுடைய சொல்லையும் கேட்டவுடனே, துக்கத்தினால் மாறுபட்ட அங்கத்தோடுகூடிய அவர்களுடைய பெண் அவ்விருவரையும் நோக்கிப் பேசத் தொடங்கினாள்:—

"ஏன் இவ்வாறு அதிக துக்கத்தினால் பீடிக்கப்பட்டு அநாதைகளைப்போல் அழுகிறீர்கள்? என் சொல்லும்

கேட்கப்படவேண்டும். கேட்டபின் வேண்டியதைச் செய்ய லாம். தர்மப்பிரகாரம் என்னை நீங்கள் விடவேண்டும். இதில் சந்தேகமில்லை. விடத்தக்கவளான என்னை விட்டு விட்டு என் ஒருத்தியால் எல்லாவற்றையும் காப்பாற்றிக் கொள்ளுங்கள். தன்னை ஆபத்திலிருந்து தாண்டுவிக்கு மென்பதற்காகத்தான் சந்ததி விரும்பப்படுகிறது. கஷ்டகாலம் நேர்ந்துள்ள இப்போது தெப்பத்தினால் ஆற்றைத் தாண்டுவதுபோல் என்னால் இந்த ஆபத்தைத் தாண்டுங்கள். நான் உங்களை இவ்விடத்திலாவது துக்கத்திலிருந்து தாண்டுவிக்க வேண்டும்; பரலோகத்திலாவது தாண்டுவிக்கவேண்டும்; எவ்வகையிலும் தாண்டுவிக்கிற புத்திரனைத்தான் புத்திரனென்று தெரிந்தவர்கள் சொல்லுகிறார்கள். நானே பிதாவின் உயிர்போகாமல் காப்பாற்றுவேன். எனது சகோதரன் குழந்தை. நீர் பரலோகம்சென்றால் அவன் வெகுசீக்கிரத்திலேயே இறந்துபோவானென்பது நிச்சயம். தந்தையும் ஸ்வர்க்கம் சென்று என் தம்பியும் நாசமடைந்தால் நம்முடைய பிதிர்க்களுக்குப் பிண்டம் விட்டுப்போம். அஃது அவர்களுக்கு வெறுப்பை உண்டாக்கும். துக்கப்பட்டு வழக்கமில்லாத நான் தாயாலும் தந்தையாலும் சகோதரனாலும் விடப்பட்டவளாகத் துக்கத்துக்குமேல் பெருந் துக்கத்தை அடைந்து இறப்பேனென்பது நிச்சயம். நீர், மனைவியாதியில்லாமல் விடுபட்டீராயின் தாயாரும், குழந்தையான என் சகோதரனும், குலத்தின் புத்ர ஸந்தானமும், பிதிர்க்களின் பிண்டமும், நிச்சயமாக நிலைத்து நிற்கும். ஆதலால், நீர் உம்மைத் துக்கத்திலிருந்து விடுவித்துக் கொள்ளும். என்னையும் தர்மத்திற் பிரவர்த்திக்கச் செய்யும். சக்தியற்றவளும் சிறு பெண்ணுமாகிய நான் நீரில்லாமல் அநாதையாய் எங்கேயோ ஓரிடத்திற்குச் சென்று எப்



போதும் விசனமுள்ளவளா யிருப்பேன். அப்படியில்லாம
இந்தக் குலத்துக்கு விமோசனம் செய்வேனாயின் செயற்கரி
கருமம் செய்ததனால் பயன் பெற்றவளாவேன். அவ்வாறன்
என்னை விட்டு நீர் அங்கே போவீராயின், நான் பிடிக்
பட்டவளாவேன். என்னையும் கவனியும். சிறந்த சாது
ஆதலால், எங்களுக்காகவும் தர்மத்திற்காகவும் ஸந்த
ாகவும் உம்மைக் காப்பாற்றிக் கொள்ளும்; விடத்
என்னை விட்டுவிடும். அவசியம் செய்யவேண்டிய காரியத்
உமக்கு இந்தக் காலம் தாண்டிப்போகலாகாது. நீர் ஸ்வர்
போய்விட்டால் நாங்கள் அயலாரிடம் சோற்றை யாசித்
கொண்டு நாயைப்போல ஓடுவோம். அதற்கு மேற்ப
துயரம் யாது? நீர் தீங்கில்லாமல் சுற்றத்தாருடன் இ
கஷ்டத்திலிருந்து விடுபட்டால் நான் இறக்கா
போலவே பரலோகத்தில் சுகமாக வசித்துக்
ிருப்பேன்.

"இவ்வுலகத்தில் கொடுப்பதிலேதான் தேவ
பிதிர்க்களும் இருக்கிறார்களென்று நமக்குக் 
உம்மால் கொடுக்கப்பட்ட ஜலதர்ப்பணத்தினால் 
க்கமே உண்டாகும். பிதாவே! இவ்வாறு இ
டையும் பார்த்து உமக்கும், அன்னைக்கும், உமது
னுக்கும் எது ஹிதமோ அதைச்செய்யும். 
தகப்பனுக்கும் குணமுள்ள புத்திரர்கள்
புத்திரனுக்கு மட்டும்பெற்றவர்கள் மறுபடியும் ஒரு
கிடைக்கமாட்டார்கள்."

இவ்வாறு அந்தப் பெண்ணின் அனேக
புலம்பலைக்கேட்டுத் தந்தை, தாய், அந்தப்பெண் இ

போதும் விசனமுள்ளவளாயிருப்பேன். அப்படியில்லாமல் இந்தக் குலத்துக்கு விமோசனம் செய்வேனுயின் செயற்கரிய கருமம் செய்ததனுல் பயன் பெற்றவளாவேன். அவ்வாறன்றி என்னை விட்டு நீர் அங்கே போவீராயின், நான் பீடிக்கப் பட்டவளாவேன். என்னையும் கவனியும். சிறந்த சாதுவே! ஆதலால், எங்களுக்காகவும் தர்மத்திற்காகவும் ஸந்ததிக் காகவும் உம்மைக் காப்பாற்றிக் கொள்ளும்; விடத்தக்க என்னை விட்டுவிடும். அவசியம் செய்யவேண்டிய காரியத்தில் உமக்கு இந்தக் கிலம் தாண்டிப்போகலாகாது. நீர் ஸ்வர்க்கம் போய்விட்டால் நாங்கள் அயலாரிடம் சோற்றை யாசித்துக் கொண்டு நாயைப்போல ஓடுவோம். அதற்கு மேற்பட்ட துயரம் யாது? நீர் தீங்கில்லாமல் சுற்றத்தாருடன் இந்தக் கஷ்டத்திலிருந்து விடுபட்டால் நான் இறக்காதவள் போலவே பரலோகத்தில் சுகமாக வசித்துக்கொண் டிருப்பேன்.

"இவ்வுலகத்தில் கொடுப்பதிலேதான் தேவர்களும் பிதிர்க்களும் இருக்கிறார்களென்று நமக்குக் கேள்வி. உம்மால் கொடுக்கப்பட்ட ஜலதர்ப்பணத்தினுல் எனக்கு சுகமே உண்டாகும். பிதாவே! இவ்வாறு இவ்விரண் டையும் பார்த்து உமக்கும், அன்னைக்கும், உமது புத்திர னுக்கும் எது ஹிதமோ அதைச்செய்யும். தாய்க்கும் தகப்பனுக்கும் குணமுள்ள புத்திரர்கள் பிறப்பர். புத்திரனுக்கு மட்டும்பெற்றவர்கள் மறுபடியும் ஒருபோதும் கிடைக்கமாட்டார்கள்."

இவ்வாறு அந்தப் பெண்ணின் அனேக விதமான புலம்பலைக்கேட்டுத் தந்தை, தாய், அந்தப்பெண் இம்மூவரும்

அழுதனர். அப்போது அவர்களெல்லாரும் அழுவதைக் கண்டு உடனே அங்கிருந்த சிறுபுதல்வன் மலர்ந்த கண்களுடன் மதுரமான மழலைச் சொற்களினால், "அப்பா! அழாதே. அம்மா! அழாதே. அக்காள்! அழாதே" என்று சொல்லி அவர்களெல்லாரையும் பார்த்துச் சிரித்துக் கொண்டு ஒவ்வொருவர் ஸமீபத்திலும் போனான். பிறகு அந்தக் குழந்தை சந்தோஷத்துடன் ஒரு துரும்பையெடுத்து "மனிதனைத் தின்கிற ராக்ஷஸனை நான் இதனால் கொல்வேன்" என்று மறுபடியும் சொல்லினன். துக்கத்தினால் அவ்வாறு பீடிக்கப்பட்டிருந்தும் குழந்தையின் அந்த மழலைச்சொற் கேட்ட பிறகு, அவர்களுக்கு மிக்க மகிழ்ச்சி உண்டாயிற்று. குந்தி இது ஸமயமென்றறிந்து அவர்கள் ஸமீபம் சென்று இறந்துபோனவரை அமிர்தத்தால் பிழைப்பு மூட்டுவது போல அவர்களைப் பிழைப்பு மூட்டுகிறவளாகப் பின் வருமாறு சொல்லலுற்றாள்:—

"இந்தத் துக்கம் என்ன காரணத்தினாலுண்டானது என்று சரியாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். தெரிந்து கொண்டபிறகு அதனைப் போக்க முடியுமானால் போக்குவேன்."

அதைக் கேட்டு அந்தப்பிராமணர் குந்தியை நோக்கி, "தபோதனையே! நீ சொல்லுவது சாதுக்களுக்குப் பொருந்தியதுதான். ஆனால், இந்தத் துயரத்தை விலக்க மனிதரால் முடியாது. ஆகிலும் இந்தத் துக்கத்தின் உற்பத்தியைச் சரியாகச் சொல்லுகிறேன். முடியுமானாலும் முடியாமற் போமானாலும் உள்ள விஷயத்தைக் கேள். இதற்கு இரண்டு குரோச தூரத்தில் யமுனையின் உற்பத்தியில் ஒரு

குகை யிருக்கிறது. அதில் கொடியவனும், கொல்லுவதில் விருப்பமுள்ளவனும், மனிதர்களைத் தின்பவனும், ராக்ஷஸ குல நீசனுமாகிய பகன் என்று பெயருள்ள ஒரு துஷ்டன் வசிக்கிறான். மிகுந்த பலமுள்ள அவன் இந்தத் தேசத்திற்கும் நகரத்திற்கும் தலைவன். துர்ப்புத்தியுள்ள அந்த ராக்ஷஸன் மனிதர் மாமிசத்தினாலேயே வளர்ந்தவன். அவன் வியாபகமுள்ளவன்; நினைத்த ரூபமெடுப்பவன்; மஹா பலசாலி. அவனால் இந்த நகரம் பிடிக்கப்படுவது இது பதின்மூன்றாவது வருஷம். மனிதரைத் தின்னும் அந்தக் கொடிய பாவியினால் பக்ஷிக்கப்பட்ட இந்த நாதனற்ற நகரம், ரக்ஷிக்கின்ற பிரபுவை அடையாமலிருக்கிறது. அந்தத் துஷ்டன் அந்தக் குகையில் வசித்துக்கொண்டு பெண்கள் இளைஞர்கள், கிழவர்கள், வாலிபர்கள் முதலிய எல்லா ஜனங்களையும் எப்போதும் வருத்தி வருகிறான். இங்கே பிராமணர்களினால் அந்த ராக்ஷஸன் மந்திரங்களினாலும், ஹோமங்களினாலும், போஜனங்களினாலும் துதிக்கவும் பூஜிக்கவும் பெற்றான். அந்த ராக்ஷஸன் எல்லாரையும் இவ்வாறு கொன்று கொண்டிருந்தபோது, பிராமணர்களனைவரும் ஒரு நியமம் செய்யும்படி அவனைக் கேட்டுக்கொண்டனர். அவர்கள் அவனை நோக்கி, “ராக்ஷஸனே! நீ நினைத்தபடி கொல்லாதே; நாங்கள் உனக்கு வேண்டிய மாம்ஸங்களையும் அன்னங்களையும் எப்போதும் முறையாகக் கொடுத்து வருவோம். மாம்ஸத்தோடும், எள்ளுப்பொடியோடும், நெய்யோடும் கறிகாய்களோடுங் கூடிய அன்னத்தையும், கள்சாராயங்களையும், காய்ச்சினவையும் காய்ச்சாதவையுமான பானங்கள் நிரம்பின குடங்களையும், காட்டிலுள்ள எருமை, பன்றி, கரடிகளின் மாம்ஸங்களையும் பல நெய்க்குடங்களையும், பல தயிர்க் குடங்களையும்,

10

புதிதாகச் சமைக்கப்பட்டு எள்ளுப்பொடி கலந்த சோறுகளை யும், வீட்டுக்கொரு மனிதனையும், இரண்டு கறுப்புக்காளை மாடுகளையும், ராக்ஷஸ பாகமாக ஒவ்வொரு வாரமும் நாங்கள் ஏற்படுத்துவதை நீ கோபிக்காமல் பெறுவாயாக. எங்க ளுடைய இந்த உடன்படிக்கையில் நீ நிற்கவேண்டும்" என்று அந்தணர்கள் அவனை வேண்டினர். அந்த ராக்ஷஸன் அவர்கள் சொன்னதை அங்கீகரித்தான். அவனுக்கு அந்தப் பாகத்தைக் குறிப்பிட்டபிறகு அந்தப் பலவானான ராக்ஷஸன் உடன்படிக்கையில் நின்றுகொண்டு, மற்றச் சைனியங் களிடத்திலிருந்தும் காட்டு மிருகங்களிடத்திலிருந்தும் எங்களைக் காப்பாற்றி வருகிறான். ஆபத்தை யடைந்து நாங்கள் நிரம்பத் தவிக்கிறோம். குலத்தை யழிப்பதாகிய அந்த வாரம் இதோ எங்களுக்கு வந்திருக்கிறது. போஜனத் தையும் ஒரு மனிதனையும் சம்பளமாக நான் கொடுக்க வேண்டும். எங்கேயாவது ஒரு மனிதனை விலைக்கு வாங்கு வதற்கு எனக்குப் பொருளில்லை. வேண்டியவர்களைக் கொடுக்க ஒருபோதும் என்னால் முடியாது. அந்த ராக்ஷஸ னிடமிருந்து விடுவித்துக்கொள்ள வேறு மார்க்கம் எனக்குத் தெரியவில்லை. அப்படிப்பட்ட நான் மிகவும் அஸாத்தியமான துயரக்கடலில் மூழ்கியிருக்கிறேன். இப்போது இந்த உறவினரோடு கூடவே அந்த ராக்ஷஸனிடம் செல்வேன். அப்போது எங்களெல்லாரையுமே சேர்த்து அந்தப்பாவி உண்ணட்டும். அம்மா! குற்றமில்லாதவளே! இந்தத் துயரத்தின் காரணத்தை நீ கேட்டதனால் உனக்குச் சொன்னேன்" என்றார்.

குந்தி, "இந்தப் பயத்திற்காக நீர் எவ்வகையிலும் துன்பப்படவேண்டாம். இப்போது அந்த ராக்ஷஸனிடத்

திலிருந்து நீர் தப்பிக்கொள்வதற்கு உபாயத்தை நான் கண்டிருக்கிறேன். நீரும் உமது மக்களும் அவனிடம் போவதை நான் விரும்பவில்லை. உமக்கு ஒரே புத்திரன்; அவனும் குழந்தை; பெண்ணும் ஒருத்தி; அவள் பரிதாபப் படத்தக்கவள். இவர்களும் உமது மனைவியும் நீரும் போவதற்கு நான் ஸம்மதிக்கவில்லை. அந்தணரே! எனக்கு ஐந்து குமாரர்களிருக்கின்றனர். அவர்களில் ஒருவன் அந்தக் கொடிய ராக்ஷஸனுக்கு இரையை எடுத்துக்கொண்டு உமக்காகச் செல்வன்" என்று சொன்னாள். அவர், "நான் என் உயிரை விரும்பிச் சொந்தப் பிரயோஜனத்திற்காக எனக்கு அதிதியான அந்தணனுடைய உயிரைப் போக்குகிற இந்தக் காரியத்தை எவ்வகையிலும் செய்யேன். ஆனால், ஒரு பிறனுக்காகத் தன்னையாவது தன் புத்திரனையாவது விடுவதென்பது, உயர்ந்த குலத்திற் பிறவாமலும் தார்மிஷ்டராயில்லாமலு மிருக்கிற ஸ்திரீகளிடம் இருப்பதில்லை. அயலார் என்னை வதஞ்செய்வதால் எனக்கு ஒரு பாபமுமில்லை. பிராம்மண வதஞ்செய்யும்படி நான் எண்ணம் வைத்தேனாயின் அதற்குக் கழுவாய் எனக்குத் தெரியவில்லை. அது கொடியது; இழிவானது; வீட்டுக்கு வந்தவனையும் அடைக்கலம் வேண்டுபவனையும் யாசிப்பவனையும் கொல்வது கொடியது; அறிஞரால் இகழப்பட்டது. இகழப்பட்ட கொடிய செய்கையை எவ்வகையிலும் செய்யலாகாதென்று ஆபத்கால தர்மமறிந்த முன்னோரான மஹாத்மாக்கள் அறிந்திருக்கின்றனர். இப்போது என் மனைவியுடன் கூட நானே இறப்பது எனக்கு மிகச் சிலாக்கியமாகும். ஒருபோதும் பிராமண வதத்துக்கு நான் இணங்கேன்" என்று சொல்லினர்.

குந்தி, "ஐயரே! அந்தணர்கள் காப்பாற்றப்பட வேண்டியவர்களென்னும் இந்த எண்ணம் எனக்கும் உறுதியாயுள்ளது. நூறு புத்திரர்களிருப்பினும் எனக்குப் புத்திரன் விரும்பப்படாதவனல்லன். ஆனால், அந்த ராக்ஷஸன் என் புத்திரனைக் கொல்வதற்கு வல்லவனல்லன். என் புதல்வன் சூரன்; மந்திரஸித்திபெற்றவன்; மஹிமையுள்ளவன். அந்த இரையை முற்றிலும் ராக்ஷஸனுக்குக் கொண்டுபோவான்; தன்னையும் விடுவித்துக்கொள்வான் என்பது எனது திண்ணமான எண்ணம். பலசாலிகளான அனேக ராக்ஷஸர்கள் இந்த வீரனோடு ஸந்தித்துக் கொல்லப்பட்டிருப்பதை நான் கண்டிருக்கிறேன். அந்தணரே! ஆனால், இது யாரிடத்திலும் எவ்வகையிலும் சொல்லத் தகாதது. ஏனெனில், இந்த வித்தையை வேண்டுபவர்கள் ஆசையினால் என் புத்திரர்களை வருத்தப்படுத்துவார்கள். என்னுடைய எந்தப் புத்திரன் குருவின் அனுமதி பெறாமல் பிறருக்கு வித்தையைச் சொல்வானோ அவன் அந்த வித்தையினால் முன்போலக் காரியம் செய்யமாட்டான் என்பது பெரியோர்கள் அபிப்பிராயம்" என்று சொன்னாள்.

குந்தியினால் இவ்வாறு சொல்லப்பட்ட அந்தப் பிராமணர் மனைவியுடன்கூட மகிழ்ந்து அமிர்தத்துக்கொப்பான அவளுடைய சொல்லைக் கொண்டாடினார். பிறகு, குந்தியும் பிராமணரும் சேர்ந்து அந்தப் பீமனைப் பார்த்து, "செய்" என்று சொன்னார்கள். அவனும் "அவ்வாறே ஆகட்டும்" என்று சொன்னான்.

பீமஸேனன் செய்வேனென்று உறுதி கூறிய பிறகு, அந்தப் பாண்டவர்களனைவரும் பிக்ஷைகளை வாங்கிக்

கொண்டு அவ்விடம் வந்து சேர்ந்தனர். பிறகு அவ்வாறு மலர்ந்த முகமுள்ள பீமஸேனனைக் கண்டு, தர்மபுத்திரர் எடுத்த காரியத்தை முடிப்பவனாகிய அவன் ஸந்தோஷமாயிருக்கிறானென் றறிந்தார். பெரியவரான அந்த யுதிஷ்டிரர், பீமன் யுத்தம் செய்யக் கருதியிருப்பதாக அறிந்து, அவன் ஸந்தோஷத்திற்குக் காரணம் யாதென்று மனத்தில் ஆராய்ந்தார். பாண்டுபுத்திரரான யுதிஷ்டிரர் முகக்குறிப்பினாலேயே அதனையறிந்துகொண்டு தான் தனித்து உட்கார்ந்து கொண்டு, ரகஸ்யமாகத் தாயாரை நோக்கி, "பயப்படத்தக்க பராக்கிரமமுள்ள இந்தப் பீமன் என்ன செய்கை செய்யக் கருதுகிறான்? உன் அனுமதியின்மேல் செய்யக் கருதுகிறானா? அல்லது தானாகவே செய்யக்கருதுகிறானா?" என்று வினவினார்.

குந்தி, "இந்த வீரன் என் சொல்லினாலேதான் பிராமணருக்காகவும், இந்த நகரத்திற்கே விமோசனத்திற்காகவும் ஒரு பெரிய காரியம் செய்யப் போகிறான். மைந்தனே! பகனுக்காக உயர்ந்ததாக ஸித்தஞ்செய்யப்பட்ட மிகுதியான இரையை ஒருநாளாவது பூர்ணமாகப் பீமன் புஜிக்கட்டும்" என்று சொன்னாள்.

யுதிஷ்டிரர் "இஃதென்ன! செய்தற்கரிய கொடிய ஸாஹஸத்தை நீ செய்திருக்கிறாய்? பிள்ளையை விட்டுவிடுவதைப் பெரியோர்கள் சிலாக்கியமாகச் சொல்லவில்லையே? பிறர் பிள்ளைக்காக உன் பிள்ளையை எவ்வாறு விடக் கருதுகிறாய்? புத்திரனை விடுவதனால் நீ உலகத்திற்கும் சாஸ்திரத்திற்கும் மாறான காரியத்தைச் செய்தவளாகிறாய். எவனுடைய புயவலிமையை ஆதாரமாகக்கொண்டு நாமெல்லா

ரும் ஸுகமாகத் தூங்குகிறோமோ, ஈனர்களால் எடுத்துக் கொள்ளப்பட்ட ராஜ்யத்தைத் திரும்பவும் எவனால் பெறுவதற்கு எதிர்பார்க்கிறோமோ, அளவற்ற சக்தியுள்ள எவனுடைய பராக்கிரமத்தை நினைத்துத் துரியோதனன் துயரத்தினால் இரவுகளெல்லாம் சகுனியுடன்கூடத் தூங்காமலிருக்கிறானோ, எந்த வீரனுடைய பராக்கிரமத்தினால் நாம் அரக்கு மாளிகையிலிருந்தும் இன்னு மனேகம் தீங்குகளிலிருந்தும் விடுபட்டோமோ, எவனால் புரோசனனும் கொல்லப்பட்டானோ, எவனுடைய சக்தியை நம்பித் திருதராஷ்டிர புத்திரர்களைக் கொன்று தனம் நிறைந்த இப்புவனியை நாம் அடைந்ததாக நினைக்கிறோமோ, அவனை விடுவதற்கு என்ன ஆலோசனைசெய்தாய்? துயரங்களினால் மனம் நொந்து உன் புத்தி அழிந்துபோகாம லிருக்கிறதா?" என்று சொல்ல, குந்தி, "யுதிஷ்டிரா! விருகோதரனுக்காக நீ பரிதாபப்பட வேண்டாம். நான் புத்திக்குறைவினால் இந்த ஆரம்பம் செய்யவில்லை. சோகப்பட்டு மனம் குன்றினதினால் என் புத்தி கெட்டுவிடவில்லை. இந்தப் பிராம்மண க்ருஹத்தில் திருதராஷ்டிர புத்திரர்களுக்குத் தெரியாமல் துக்கத்தை விட்டு மரியாதையோடு சுகமாக வஸித்துக்கொண்டிருக்கிறோம். அதற்கு இந்தப் பிரதியுபகாரம் என்னால் கண்டறியப்பட்டது. செய்ந்நன்றி யாரிடத்தில் குன்றாதோ அவன் மாத்திரமே மனிதன்; பிறர் இவனுக்கு எவ்வளவு செய்வரோ அதற்குப் பலமடங்கு அதிகமாக இவன் பிறருக்குச் செய்யவேண்டும். பிராம்மணனுக்காகச் செய்யும் தருமம் பெரிது. பீமஸேனனிடத்திலும் இந்த ஸாமர்த்தியமிருப்பதை நான் அறிந்திருக்கிறேன். அப்போது அரக்கு மாளிகையிலும், ஹிடிம்பவதத்திலும், பீமனுடைய மிகுந்த பராக்கிரமத்தைக் கண்ட பிறகு எனக்கு அவனிடத்தில்

நம்பிக்கையுண்டாயிற்று. யானையைப் போன்ற நீங்கள் வாரணாவதத்திலிருந்து எவனால் தூக்கிக்கொண்டு வரப்பட்டீர்களோ அந்தப் பீமனுடைய கைவன்மை பெரிது; பதினாயிரம் யானைக்கொப்பானது. பலத்தில் விருகோதரனுக்கு ஈடானவன் மற்றொருவனில்லை. எல்லாரிலும் சிறந்த வஜ்ர பாணியாகிய இந்திரனையும் பீமன் யுத்தத்தில் தானே வென்று விடுவன். முன்னமே இவன் பிறந்தவுடன் என் இடுப்பி லிருந்து மலையில் வீழ்ந்தான். இவன் தேகத்தின் பாரத் தினால் இவனுடைய அவயவங்கள்பட்ட கல் பொடியாகச் செய்யப்பட்டது. பீமனுடைய அந்தப் பலத்தை நான் புத்தியினாலறிந்து, பிராமணருக்குப் பிரதியுபகாரமும் செய்யவேண்டியபோது அதற்காக இந்த ஆலோசனையைச் செய்தேன். இது பொருளை விரும்பியாவது, புத்திக்குறை வினாலாவது, ஸரியாகத்தெரிந்து கொள்ளாமலாவது என்னால் நிச்சயிக்கப்படவில்லை. விவேகத்தை முன்னிட்டே தர்மத் திற்காக இந்த ஆரம்பம் என்னால் செய்யப்பட்டது. நாம் குடியிருந்ததற்குப் பிரதியுபகாரம் செய்வதும் அயலாரை ஆபத்தினின்று காப்பதாகிய பெரிய தர்மத்தைச் செய்வது மாகிய இரண்டு பிரயோஜனங்கள் நிறைவேறினவாகும். அதனால் இவ்வாறு செய்யக் கருதினேன்" என்றாள்.

யுதிஷ்டிரர், "தாயே! நீ விவேகத்தை முன்னிட்டு, துன்பமுற்ற பிராமணர் விஷயத்தில் தயையினால் இவ்வாறு செய்தது நியாயமே. நீ பிறர் விஷயத்தில் தயையுள்ளவளாக இருப்பதனால் இந்தப் பீமன் எவ்வகையிலும் அந்த ராக்ஷஸனைக் கொன்று திரும்பி வருவது திண்ணம். ஆனால், இதை நகரத்தில் வசிக்கும் மனிதர்கள் இவ்வாறு அறியாம லிருக்கவேண்டுமென்று நாம் இந்தப் பிராமணருக்குச்

சொல்லவேண்டும். ஜாக்கிரதையோடு அவரை நம்முடைய சொல்லுக்கு உடன்படுத்த வேண்டும்" என்று சொன்னார்.

இவ்விதம் யுதிஷ்டிரரோடு ஆலோசனை செய்தபிறகு, குந்தி உள்ளே சென்று புத்திரர்களெல்லாரிடமும் பிராமண காரியத்தைப்பற்றி ஆலோசித்தாள். பிறகு, இரவு விடிந்த போது மிக்க வலிமையமைந்த பீமஸேனன், பிராமணரிடம் சென்று, "பிராமணரே! என்னுடைய அன்பராகிய உம்மை உம்முடைய மக்களுடன் ஆபத்திலிருந்து விடுவிப்பேன். அந்த ராக்ஷஸனுக்கு அஞ்சவேண்டாம். நீர் என்னைப் பலி யாகக் கொடும். இந்த வீட்டில் நான் ஒருதரம் திருப்தி யாகச் சாப்பிடுவதற்குப் பிரயத்தனப்படும். பிறகு, அந்தப் பயங்கரமான ராக்ஷஸனுக்கு நான் என்னைக் கொடுப்பேன்; துரிதப்படுங்கள்; ஏன் தாமதிக்கின்றீர்கள்? குற்றமற்றவர் களே! தாமதம் செய்யாதீர்கள். இப்போது என் உயிரைக் கொடுத்து உங்களை ரக்ஷிப்பதாக மனத்தில் நிச்சயம் செய்கி றேன்" என்ற சொல்லைச் சொன்னான்.

பீமனால் இவ்வாறு உரைக்கப்பட்ட அந்தப் பிராமணர் தம் பந்துக்களுக்கு அந்த விஷயத்தைச் சொல்லிச் செவ்வை யாகச் சேகரிக்கப்பட்ட போஜனத்தைக் கொடுத்தார். பிறகு, அந்நகரவாஸிகள் நெய்யோடும் காய்கறிகளோடும் பலவகைப் பருப்புக்களோடும் மாம்ஸத்தோடும் சேர்ந்த அன்னத்தைப் பீமனுக்குக் கொணர்ந்தனர். அப்போது பீமஸேனன் பலவகையான மாமிசங்களையும் உயர்ந்த பக்ஷணங்களையும் பலவகைச் சித்ரான்னங்களையும் உண்ட பிறகு, பதக்குப் பிடிக்கும்படியான அனேகம் குடம் தயி ரைக் குடித்தான். அவன் உண்டபோது நகரத்து ஜனங்



கள், நிரம்பின மனத்தோடு செம்மையாகச் சேகரி
பதார்த்தங்களில் தத்தம் பாகங்களைப் பூர்ணமாகக் கொ
வந்தனர். பிறகு, அந்த விருகோதரன் நகரத்து ஜனங்
ளால் சூழப்பட்டு அந்தக் காலைவேளையில் காய்கறிக
தயிருங்கலந்த அன்னம் நிரம்பிய வண்டியின்மே
வாத்திய முழக்கங்களோடு புறப்பட்டான். "சிறு பி
யும் அழகில் ஒப்பற்றவனும் பலசாலியுமாகிய இவன்
வயிற்றுக்காகத்தானே தன்னையே ராக்ஷஸனுக்கு இரை
கொடுக்கப் போகிறான்" என்று இவ்வாறான சொற்
துதி செய்யப்பட்ட அந்தப் பீமன், உடம்பெல்லாம்
பான இரண்டு எருதுகள் பூட்டிய வண்டியை ஓட்
பிறகு, அவன் நாற்புறமும் மனிதர்களாற் சூழ
மிகச் சந்தோஷமுற்று வாத்தியங்களின் முழக்க
அவ்வரக்கனை நோக்கிச் சென்றான். ஜனக்கூட்டம்,
பயத்தினால் அஞ்சி, அங்கேயே நின்றது. அவன்
திசையை நோக்கி நெடுந்தூரம் சென்று ஓர் இடத்தி
பெரிய மரத்தைக் கண்டான். அந்த மரம், எலு
லும், கொழுப்புக்களாலும் ரத்தமுள்ளவையும்
வற்றினவையுமான கைகளாலும், தொடைகளாலு
களாலும், சுற்றிலும் வியாபிக்கப்பட்டிருந்தது.
பருந்துகள் இவைகளின் கூட்டங்களினால் மறை
தும், நரிக்கூட்டங்களால் காக்கப்பட்டதும் க
நாற்றமுள்ளதும், பார்க்க வழங்காததும், இடுக
கொடியதுமாகிய அந்தப் பெரிய மரத்தினிடம்
அந்த வீரன் சிந்திக்கலானான்: "பலவகை உண
பெரிய அன்னக் குவியலாலும் நிரப்பப்பட்ட
புக்கள் நிரம்பினதுமாகிய இந்த வண்டியை வ

கள், நிரம்பின மனத்தோடு செம்மையாகச் சேகரித்த பதார்த்தங்களில் தத்தம் பாகங்களைப் பூர்ணமாகக் கொண்டு வந்தனர். பிறகு, அந்த விருகோதரன் நகரத்து ஜனங்களினால் சூழப்பட்டு அந்தக் காலைவேளையில் காய்கறிகளும் தயிருங்கலந்த அன்னம் நிரம்பிய வண்டியின்மேலேறி வாத்திய முழக்கங்களோடு புறப்பட்டான். "சிறு பிள்ளையும் அழகில் ஒப்பற்றவனும் பலசாலியுமாகிய இவன் தன் வயிற்றுக்காகத்தானே தன்னையே ராக்ஷஸனுக்கு இரையாகக் கொடுக்கப் போகிறான்" என்று இவ்வாறான சொற்களால் துதி செய்யப்பட்ட அந்தப் பீமன், உடம்பெல்லாம் கறுப்பான இரண்டு எருதுகள் பூட்டிய வண்டியை ஓட்டினன். பிறகு, அவன் நாற்புறமும் மனிதர்களாற் சூழப்பட்டு மிகச் சந்தோஷமுற்று வாத்தியங்களின் முழக்கத்தோடு அவ்வரக்கனை நோக்கிச் சென்றான். ஜனக்கூட்டம், ராக்ஷஸ பயத்தினால் அஞ்சி, அங்கேயே நின்றது. அவன் தென் திசையை நோக்கி நெடுந்தூரம் சென்று ஓர் இடத்தில் ஒரு பெரிய மரத்தைக் கண்டான். அந்த மரம், எலும்புகளாலும், கொழுப்புக்களாலும் ரத்தமுள்ளவையும் ரத்தம் வற்றினவையுமான கைகளாலும், தொடைகளாலும், கால்களாலும், சுற்றிலும் வியாபிக்கப்பட்டிருந்தது. கழுகுகள் பருந்துகள் இவைகளின் கூட்டங்களினால் மறைக்கப்பட்டதும், நரிக்கூட்டங்களால் காக்கப்பட்டதும் கடுமையான நாற்றமுள்ளதும், பார்க்க வழங்காததும், இடுகாடுபோலக் கொடியதுமாகிய அந்தப் பெரிய மரத்தினிடம் சென்று அந்த வீரன் சிந்திக்கலானான்: "பலவகை உணவுகளாலும் பெரிய அன்னக் குவியலாலும் நிரப்பப்பட்டதும், பருப்புக்கள் நிரம்பினதுமாகிய இந்த வண்டியை வலிமைமிக்க

பகனென்னும் பெயருள்ள அரக்கன் பார்ப்பதற்குமுன் இவ்விடத்திலேயே நான் புஜித்துவிடுவேன். மறுபடி இஃது எனக்குக் கிடைப்பது அரிது. நான் ராக்ஷஸனோடு யுத்தஞ் செய்யும்போது எல்லாம் இறைந்து போய்விடும்; மேலும் பகனைக்கொன்ற பிறகு, பிணம் தொட்டதனால் உண்ணத் தகாததாகிவிடும்" என்று பயங்கரமான செய்கையுள்ளவனும் உயர்ந்த வீரனுமான பீமஸேனன் இவ்வாறு ஆராய்ந்து ஜனமில்லாத இடத்தில் உட்கார்ந்து அந்த உயர்ந்த உணவை உண்டான். அப்போது, நகரத்தார் நூற்புறங்களிலும் மரங்களிலேறி அவனைப் பார்த்தனர். "ராக்ஷஸனல்லாத வன் இந்தப் பெரிய பலியை இவ்வாறு உண்ணமாட்டான். பகனே இந்தப் பிராமண உருவத்தோடு புஜிக்கிறான்" என்று ஜனங்கள் பேசிக்கொண்டனர்.

மிகுந்த பலமுள்ள பீமன் அந்த அன்னத்தை உட்கொண்ட பிறகு, பகனைப் பரிகாசம் செய்தான். பிறகு, பலசாலியாகிய பாண்டவன் அந்த ராக்ஷஸனிருக்கும் வனத்தைச் சேர்ந்து அந்த அன்னத்தைக் காண்பித்து, அவனைப் பெயரிட்டழைத்தான். அப்போது அந்தப் பீமனுடைய பேச்சினால் கோபமுற்று அவ்வரக்கன் மிகுந்த ஆக்கிரகத்தோடு பீமனிருந்த இடத்திற்கு வந்தான். பெரிய தேகமுள்ளவனும், சிவந்த கண்களுள்ளவனும், விகாரரூபமுள்ளவனும், மீசைதாடிகளும் தலைமயிர்களும் சிவந்தவனும், காதுவரையில் திறக்கப்பட்ட வாயுள்ளவனும், முளைகள்போன்ற காதுகளையுடையவனும், மிகப் பயங்கரனுமான அந்த ராக்ஷஸன், மிக்க வேகத்தினால் பூமியைப் பிளப்பவன்போலப் புருவங்களை மூன்று நெறிப்பாக நெறித்துக்கொண்டும் உதட்டைக் கடித்துக்கொண்டும், அன்னத்தைப் புஜிக்கும் பீமனைக்

கண்டு கோபித்துக் கண்களையுருட்டி விழித்து, "எனக்காகச் சேகரிக்கப்பட்ட இந்த அன்னத்தை என்கண் முன்னே புஜிக்கிறானே! யமன் வீட்டுக்குப் போகக்கருதிய இம்மதி கெட்டவன் யார்?" என்று சொன்னான். பீமஸேனன் அதைக் கேட்டுச் சிரித்துக்கொண்டே அந்த ராக்ஷஸனைக் கவனிக்காமல் பின்புறமாகத் திரும்பிக்கொண்டு புஜித்துக் கொண்டேயிருந்தான். அந்த ராக்ஷஸன் கடுமையான இரைச்சலிட்டு இரண்டு கைகளையும் ஓங்கிப் பீமஸேனனைக் கொல்ல ஓடி வந்தான். அப்படியிருந்தும் பகைவீரர்களைக் கொல்லுகிறவனும் பாண்டுபுத்திரனுமான விருகோதரன், அந்த ராக்ஷஸனை அவமதிப்புடன் பார்த்துக்கொண்டு, அன்னத்தைப் புஜித்துக்கொண்டேதான் இருந்தான். அந்த ராக்ஷஸன் கோபம் நிரம்பினவனாகப் பின்னே நின்று இரண்டு கைகளாலும் குந்திபுத்திரனான விருகோதரனை முதுகில் அறைந்தான். அவ்வாறு பலவானான ராக்ஷஸனால் இரண்டு கைகளாலும் உளைய அடிக்கப்பட்ட அந்தப் பீமன் ராக்ஷஸனைத் திரும்பிப் பார்க்கவேயில்லை; புசித்துக்கொண்டே தானிருந்தான். பிறகு, பலவானான அந்த ராக்ஷஸன் இன்னும் அதிக கோபங்கொண்டு மரத்தையெடுத்துப் பீமஸேனனை அடிக்க மறுபடியும் எதிர்த்தோடி வந்தான். வீரனான பீமன், கோபத்தோடு ராக்ஷஸனால் எறியப்பட்ட அம்மரத்தை இடக்கையினால் தடுத்து வலக்கையினால் புஜித்துக்கொண்டே இருந்தான். பீமஸேனன், மலைபோன்ற அந்த முழுமரத்தையும் ராக்ஷஸனுடைய கையுடன் கூடப்பிடித்துச் சிரித்துக் கொண்டே வண்டியிலிருந்த அன்னத்தைப் புஜித்த பிறகு, ராக்ஷஸனை விட்டுவிட்டு, நூற்றுக்கணக்கான குடங்களிலுள்ள தயிரையும் நெய்யையும் குடித்துவிட்டு, கையலம்பிக் கொண்டு உற்சாகத்துடன் இரண்டாவது மலைபோல்நின்றான்.

பெரிய மரத்தைச் சுழற்றிக்கொண்டு வருகிறவனும் பார்ப்பதற்குப் பயங்கரனுமான ராக்ஷஸனைக் கண்டு வீரனை பீமஸேனன் யுத்தத்திற்காக எழுந்து ஸிம்மகர்ச்சனஞ் செய்தான். பிறகு, கைகளுடைய வேகத்தையும் தோள் தட்டுதலையும் கர்ச்சனையின் பேரொலியையும் செய்து மிகுந்த கோபத்துடன் பீமஸேனன் ராக்ஷஸனை அழைத்தான். இடிமுழக்கம் போன்ற குரலினல் ராக்ஷஸனைப் பயமுறுத்துகிறவன் போல அவன் பேசலுற்றான்:—"இராக்ஷஸர்களில் இழிவானவனே! இரண்டு கால்களும் நாலுகால்களு முள்ளவற்றின் மாம்ஸங்களாலும் மிகுந்த அன்னங்களினலும் அனேக நாளாக உன் சரீரம் வளர்க்கப் பட்டிருக்கிறது. என் கையினிடம் வந்தபின் மறுபடி நீ இரை யெடுக்கப்போகிறதில்லை. இப்போது என் கைகளினல் பிசையப்பட்டு யமன் வீடு செல்வாய்; இந்த நகரத்திற்கு முள்ளைப்போன்ற உன்னை எடுத்துவிட்ட பிறகு வேத்திரகீய நகரத்தில் வஸிப்பவர்கள் அச்சமற்றுத் தூங்குவர். இப்போது யுத்தத்தில் என்னல் கொல்லப்பட்ட உன் தேகத்தைக் கழுகுகளும் நரிகளும் காக்கைகளும் தின்னட்டும்; தரையில் அக்கு வேருக இழுக்கட்டும்."

இவ்வாறு சொல்லிப் பின் மிகுந்த கோபத்துடன் பகனைக் கொல்வதற்கு அவன் ஓடினன். அந்தப்பகனும் மிகுந்த வேகத்தினல் பூமியைப் பிளப்பவன் போலப் பீமஸேனனை எதிர்த்தோடினன். பலவானன அந்த ராக்ஷஸன் இன்னுமதிகமாகக் கோபமுற்றுப் புருவங்களை மூன்று நெறிப்பாக நெறித்து உதட்டைக் கடித்து ஒரு மரத்தை யெடுத்துப் பீமனை அடிப்பதற்காக விரைவாக ஓடிவந்தான். கோபங்கொண்ட ராக்ஷஸனல் எறியப்பட்ட மரத்தைப் பீம

ஸேனன் சிரித்துக்கொண்டு இடக்கையினல் விளையாட்டாகப் பிடித்தான். பிறகு, அந்தப் பலவானுன பகனும் மறுபடியும் பலவகை மரங்களையெடுத்துப் பீமஸேனன் மேல் போட்டான். எல்லா மரங்களையும் பீமஸேனன் தன் கை விரலினல் தள்ளிவிட்டான். மரச்சோலைகளை யழிப்பதாகிய அந்த விருக்ஷ யுத்தம் பகனுக்கும் பீமனுக்கும் அப்போது மிகக் கொடியதாகவும் பெரியதாகவும் நடந்தது. பகன் தன் பெயரைப் புகழ்ந்துசொல்லிக் கடுமையான வேகத்தோடு பீமஸேனனை எதிர்த்து யுத்தம் செய்தான். அவர்களுடைய மிகுந்த வேகத்தினல் பூமி நடுங்கிற்று. அவர்கள் மிகுந்த அளவுள்ள மரங்களை நொடியில் பொடியாகச் செய்தனர். பகன் விரைவாக ஓடிவந்து கைகளினல் பீமனை எடுத்து எறிந்தான். எறியப்பட்ட பீமஸேனனும் சிரித்துக் கொண்டே மறுபடியும் எழுந்தான். பீமஸேனன் பகனைத் தழுவித் தரையில் அடித்தான். பீமன் விழுந்த பகனை விட்டுவிட்டு, "ராக்ஷஸா! களைப்பாறு" என்றுசொல்லி மறுபடியும் தோள்தட்டி, "எழுந்திரு" என்று சொன்னன். பிறகு விகாரரூபமுள்ள பகன் கோபத்துடன் எழுந்து மிகப் பெரிய உருவமெடுத்துக்கொண்டு உடனே விருகோதரனைப் பயமுறுத்திக்கொண்டு நின்றன். பீமஸேனனும் பார்க்கப் பயங்கரமான ராக்ஷஸனைப் பார்த்து நகைத்தான். பீமன் பின்னின்று கைகளினல் ராக்ஷஸனைப் பிடித்து முழங்கால்களினல் அமுக்கிப் பிறகு கீழே வீழ்த்தினன். திரும்பவும் கோபமுற்ற பீமன் கோபத்தையே உயிராகவுடைய அவ்வரக்கனைவிட்டுத் தன் இடுப்பைக் கொஞ்சம் தூக்கி அந்த ராக்ஷஸனுடைய புஜங்களைப் பிடித்தான். பலவானுன பீமஸேனன் விரைவாக அவன் இரண்டு புஜங்களையும் பிடித்துத் தூக்கி உதறி அவனைக் கீழே தள்ளினன். அச்சப்படத்

தக்க பராக்கிரமமுள்ள பீமன் கோபித்துக் கீழே விழுந்த அவனை மார்பில் இடக்காலால் உதைத்தான். வாய் திறந்து கொண்டும் நாக்குத் தொங்கிக்கொண்டும் பயங்கரமாயிருந்த அந்தக் கொடிய ராக்ஷஸன் எதிர்த்து வந்து பீமனைத் தலையில் அடித்தான். பயங்கரமான பராக்கிரமமுள்ள அந்தப் பீமன் மிகுந்த பலவானான ராக்ஷஸனால் இவ்வாறு அடிக்கப்பட்டு மிகுந்த கோபாவேசங்கொண்டான். அவன் ராக்ஷஸனை இடுப்பைப் பிடித்துத் தூக்கி நிறுத்தினான். அந்த ராக்ஷஸனும் பீமனும் மதம் பிடித்த பெரிய யானைகளைப் போல ஒருவரை யொருவர் பிடித்து இழுத்தனர்.

அப்போது பீமராக்ஷஸர்களுடைய கையடியின் சப்தங்களினால் வேத்திரகீய நகரமுழுதும் நடுக்கமுற்றது. அவ்விருவருடைய பெரிய வேகத்தினாலும் அங்கே பூகம்பம் உண்டாயிற்று. ஒருவரை யொருவர் வதஞ்செய்யக் கருதிச் சந்தித்த அந்த வீரர்கள் மலைகளாலும் கொடுமுடிகளாலும் மலைகளினின்றும் சரிந்த பாறைகளாலும் ஒருவரை யொருவர் அடித்து அவற்றைச் சூர்ணமாகச் செய்தனர். யுத்தத்தில் மிகுந்த மதங்கொண்ட அவ்விருவரும் பூமியை நீளத்திலும் அகலத்திலும் இரண்டு யோசனை தூரம் எங்கும் மரங்களும் கற்களும் புற்களும் புதர்களும் கொடிகளுமில்லாமல் ஆமை முதுகைப் போன்றதாகச் செய்தனர். ராக்ஷஸனும் கௌரவராஜனும் இவ்வாறு சற்றுநேரம் யுத்தம் செய்த பிறகு கௌரவராஜன் ராக்ஷஸனை அழிப்பதற்காக எண்ணங்கொண்டு பற்களால் கடகடவென்று சப்தஞ்செய்து உதட்டைக்கடித்துக் கண்களை விசாலமாகத் திறந்து உருட்டி விழித்து ராக்ஷஸனைக் குறுக்காகப் பார்த்தான். பிறகு, மிகுந்த பலமுள்ள பீமஸேனன் அந்த ராக்ஷஸனைத் தழுவிப்



பிடித்தான்; அவனைக் கைகளாற்கட்டி முழங்கால்களினா
விலாப்புறங்களிலும் வயிற்றிலும் முதுகிலும் மார்பிலும்
உதைத்தான். பகன் தொடைகளும் கைகளும் மார்பு
பிளந்து, தேகக்கட்டுவிட்டு அதிக வியர்வையும் பெருமூச்
முற்று, உயிரும் கண்களும் வெளிக்கிளம்பிப் பிர
மாண்டம் வெடித்துப் போகச்செய்யும்படி கத்தி, மூச்சு
குறைந்து, தரையில் விழுந்து, தடியினால் அடிபட்
பாம்புபோலத் துடித்துக் கொண்டிருந்தான். அவனை
பீமன் சுற்றிலும் இழுத்தான். அவ்விதம் ஆண்மையி
சிறந்தவனான பீமஸேனன் ராக்ஷஸனுக்குப் பலம் கு
வதைக்கண்டு அவனைப் பூமியில் தேய்த்து முழங்க
களினால் இடித்தான். பிறகு, பீமன் அவனுடை
முதுகை முழங்காலினால் பலமாக அமுக்கிக்கொண்டு
வலக்கையினால் கழுத்தைப் பிடித்தான். இடக்கையி
இடுப்பு வஸ்திரத்தைப் பிடித்துக்கொண்டு அவனுடை
முதுகை முழங்காலில் ஏற்றிப் பேரொலியுண்டாகு
முறித்தான். அரசரே! அப்போது பீமனால் முறி
பட்ட அந்தக் கொடிய ராக்ஷஸனுடைய வாயிலி
இரத்தம் பெருகிற்று.

பிறகு, பெரிய மலைபோன்ற அந்தப் பகன்,
புறங்களும் உடலும் முறிந்து, பயங்கரமான
செய்து உயிர்போய் விழுந்தான். ராக்ஷஸனுடைய
இனால் ஜனங்கள் பயந்து வீட்டிலிருந்து வெளிப்ப
பிறகு, பீமனால் கழுத்து முறிக்கப்பட்டுப் பிரஜ்ஞை
இறந்துபோன அந்த ராக்ஷஸன் பலவிதமான வி
செய்கையுடன் நகரத்தின் கோபுர வாயிலில் இழுத்
பட்டான். அவனை வாயிலில் போட்டுவிட்டு அந்த

டித்தான்; அவனைக் கைகளாற்கட்டி முழங்கால்களினால் விலாப்புறங்களிலும் வயிற்றிலும் முதுகிலும் மார்பிலும் உதைத்தான். பகன் தொடைகளும் கைகளும் மார்பும் நொந்து, தேகக்கட்டுவிட்டு அதிக வியர்வையும் பெருமூச்சு முற்று, உயிரும் கண்களும் வெளிக்கிளம்பிப் பிரம் மாண்டம் வெடித்துப் போகச்செய்யும்படி கத்தி, மூச்சுக் குறைந்து, தரையில் விழுந்து, தடியினால் அடிபட்ட பாம்புபோலத் துடித்துக் கொண்டிருந்தான். அவனைப் பீமன் சுற்றிலும் இழுத்தான். அவ்விதம் ஆண்மையிற் சிறந்தவனான பீமஸேனன் ராக்ஷஸனுக்குப் பலம் குறை வதைக்கண்டு அவனைப் பூமியில் தேய்த்து முழங்கால் களினால் இடித்தான். பிறகு, பீமன் அவனுடைய முதுகை முழங்காலினால் பலமாக அமுக்கிக்கொண்டு தன் வலக்கையினால் கழுத்தைப் பிடித்தான். இடக்கையினால் இடுப்பு வஸ்திரத்தைப் பிடித்துக்கொண்டு அவனுடைய முதுகை முழங்காலில் ஏற்றிப் பேரொலியுண்டாகும்படி முறித்தான். அரசரே! அப்போது பீமனால் முறிக்கப் பட்ட அந்தக் கொடிய ராக்ஷஸனுடைய வாயிலிருந்து இரத்தம் பெருகிற்று.

பிறகு, பெரிய மலைபோன்ற அந்தப் பகன், விலாப் புறங்களும் உடலும் முறிந்து, பயங்கரமான சத்தம் செய்து உயிர்போய் விழுந்தான். ராக்ஷஸனுடைய சப்தத் தினால் ஜனங்கள் பயந்து வீட்டிலிருந்து வெளிப்பட்டனர். பிறகு, பீமனால் கழுத்து முறிக்கப்பட்டுப் பிரஜ்ஞையற்று இறந்துபோன அந்த ராக்ஷஸன் பலவிதமான விளையாட்டுச் செய்கையுடன் நகரத்தின் கோபுர வாயிலில் இழுத்து விடப் பட்டான். அவனை வாயிலில் போட்டுவிட்டு அந்தப் பீமன்

நகரத்துக்குள் வந்தான். பாலர்களும் விருத்தர்களுமாகிய அந்த மனிதர்கள் ராக்ஷஸனே நிச்சயமாக மறுபடியும் நமது நகரத்திற்குள் வருகிறனென்று பயந்து ஓடினர். பகனைக் கொன்ற பிறகு பீமன் அங்கே அந்தணர் வீட்டுக்குச் சென்று, இரண்டு காளைமாடுகளையும் வண்டியையும் அவரிடம் ஒப்புவித்தான். 'பேசாமல் வீட்டுக்குள் போம்,' என்று அவரைப் பார்த்துச் சொல்லிவிட்டு பீமன் சென்று, தாயார் சகோதரர்களிடம் யுத்தம் நடந்த விதத்தையெல்லாம் சொன்னுன்.

விடியற்காலத்தில் அந்த நகரத்திலிருந்து வெளியிற் போன மனிதர்கள், அடிக்கப்பட்டு ரத்தத்தினுல் நனைந்து கிடந்த ராக்ஷஸனைக் கண்டனர். மலையைப்போல் விழுந்திருக்கும் பயங்கரமான அந்த ராக்ஷஸனைக் கண்டு அந்த நகரத்து ஜனங்கள் மயிர்க்கூச்சமெடுத்தவராயினர். உடனே, அவர்கள் ஏகசக்கரநகரத்துக்குட் சென்று ஆங்கிருப்பவர்களுக்குச் சமாசாரம் தெரிவித்தனர். பிறகு, நகரத்திலுள்ள ஜனங்கள் ஆயிரக்கணக்காகப் பெண்டுகளும் கிழவர்களும் குழந்தைகளும் பகனைப் பார்க்க அங்கே வந்தனர். பிறகு, மனிதர் செய்யமுடியாத அந்தச் செய்கையைக்கண்டு அவரனைவரும் வியப்புற்று, முன்னே பயத்தினுல் தாங்கள் வேண்டிக்கொண்டிருந்த தேவதைகளுக்குப் பூஜைகள் செய்தனர். பிறகு அன்றையதினம் பகனுடைய இரைக்கு யாருடைய முறையென்று எண்ணிப் பார்த்தனர். தெரிந்த பிறகு அவர்களனைவரும் அந்தப் பிராமணரிடம் வந்து கேட்டனர்.

இவ்வாறு பலவிதமாகக் கேட்கப்பட்ட அந்தப்

ப்ராமணர், அப்போது பாண்டவர்களைப்பற்றி வெளியிடாமல் நகரத்து ஜனங்களனைவருக்கும் பின்வருமாறு சொல்லனர்:—

“பகனுடைய இரைக்காக நியமிக்கப்பட்டுச் சுற்றத்தாருடன் அழுதுகொண்டிருந்த என்னை மந்திரசித்தி பெற்றவரும் உயர்ந்த மனமுள்ளவருமாகிய ஒரு பிராமணர் கண்டார். அந்தப் பிராமணர் முதலில் இந்த நகரத்தின் துயரத்தைப்பற்றி என்னைக் கேட்டு என்னை நம்பச் செய்தார். சிரித்துக்கொண்டு ‘அந்தத் துராத்மாவுக்கு இந்த அன்னத்தை நான் கொண்டுபோய்ச் சேர்ப்பேன். எனக்காகப் பயப்படவேண்டாம்’ என்று சொன்னார். அவர் அந்த அன்னத்தை எடுத்துக்கொண்டு பகனுடைய வனத்தை நோக்கிச் சென்றார். உலகங்களுக்கு அனுகூலமான இந்தக் காரியம் அவரால் செய்யப்பட்டிருக்க வேண்டுமென்பது நிச்சயம்” என்று சொன்னார். அதைக் கேட்ட யாவரும் மிகுந்த வியப்பும் மகிழ்ச்சியுமுற்றவர்களாகித் தங்கள் தெய்வங்களுக்குப் பூஜை செய்தனர். பிறகு, கிராமங்களிலுள்ளவர் அந்த மிகுந்த ஆச்சரியத்தைப் பார்ப்பதற்கு நகரவாயிலை அடைந்தனர்.

---

## V. அரசரோடு பழகுதல்.

" அளையுறை பாம்பு மரசு நெருப்பு
முழையுறை சீயமு மென்றிவை நான்கு
மிளைய வெளிய பயின்றனவென் றெண்ணி
யிகழி னிழுக்கந் தரும்."

" நகையொடு கொட்டாவி காற்றுப்புத் தும்மல்
இவையும் பெரியார்முற் செய்யாரே செய்யின்
அசையாது நிற்கும் பழி."

ஒருவனுக்கு அரசரோடு பழகவேண்டிய அவசியம் நேருமானால் அவன் உள்ளேவரலாமென்று அனுமதி பெற்றுக்கொண்டே அரசனைப் பார்க்கவேண்டும். அரசர்களுடைய பொருள்களில் ஆசைவைக்கலாகாது. தன்னைக் கேளாமலிருக்கையில் அரசனுக்கு ஒருபொழுதும் நீதி சொல்லக்கூடாது. பேசாமலிருந்துகொண்டே அவனை உபாசிக்கவேண்டும். தகுந்த சமயத்தில் அவனைப் புகழவேண்டும். பொய்சொல்லுகின்ற ஜனங்களிடத்தில் அரசர்கள் அசூயைப்படுவார்கள். அவ்வாறே, பொய்சொல்லுகின்ற மந்திரியை அரசர்கள் அவமதிப்பார்கள். மிகவும் சிறியவையாயினும் காரியங்களை அரசனிடத்தில் தெரிவித்தே செய்யவேண்டும். இவ்வாறு அரசனிடத்தில் பழகுபவனுக்கு ஒருபொழுதும் குறை நேரிடாது. உலகத்தில் பிராணிகளை உணவு முதலியவற்றால் போஷிக்கின்றவனும் ஆபத்தினின்று காப்பாற்றுகின்றவனும் எல்லா ஆயுதங்களாலும் நிறைந்தவனுமான அரசன் மனித வடிவங்கொண்ட ஒரு பெரு நெருப்பு. அரசனை அடுத்திருப்பவன் தன்னை எவ்விதத்திலும் தோஷம் அணுகாதபடி



நடந்துகொள்ளவேண்டும். புத்திசாலியான ஒருவன், க்ஷத்திரியனையும் ஸர்ப்பத்தையும், அசக்தர்களாயிருந்தாலும் ஒருபொழுதும் அலக்ஷியஞ் செய்யக்கூடாது. இவர்கள் அவமதிக்கப்பட்டால் மனிதனை எரிப்பர். ஆதலால், கற்றறிந்தவர்கள் எப்பொழுதும் அரசனை முயற்சியுடன் பூஜிக்கவேண்டும். அரசனால் ஒப்புக்கொள்ளப்பட்ட மனிதன் வரம்புகடந்து செல்லக்கூடாது. உலகத்தில் அவனவனுக்குரிய மரியாதையைத்தான் வியவகாரமென்று பண்டிதர்கள் அறிந்திருக்கிறார்கள். அரசர்கள், புத்திரனையும் பேரனையும் சகோதரனையும் வரம்புகடந்து நடப்பவனைப் புகழமாட்டார்கள். அரசனால் ஒருவித அதிகாரங் கொடுக்கப்பட்டவன் மிக்கசெல்வத்தை அடைந்திருந்தாலும் தனக்குரிய நிலைமையை ஆலோசித்துப் பிறவிக்குருடனைப் போலத் தன்னைக் கருதவேண்டும். அரசனிடத்தில் பழகுபவன் தைரியசாலியாக எப்பொழுதும் வாயிலைப் பார்த்துக்கொண்டு அரசர்களிடத்தில் நம்பிக்கையில்லாதவனாயிருக்கவேண்டும். அரசர்களிடத்தில் நம்பிக்கை வைக்கக்கூடாது. எந்த ஆசனத்தில் பிறன்
பிரியம் வைக்கமாட்டானோ அந்த ஆசனத்தையே விரும்
வேண்டும். ராஜமாளிகையில் வசிக்கின்ற மனிதன் எந்
ஆசனத்தில் உட்கார்ந்தால் மிக்க பலவானான ஒரு
னுடைய மனம் வருந்தாதோ அந்த ஆசனத்தை விரும்
வேண்டும். ராஜமாளிகையில் வசிப்பவன் எந்த இடத்
எவ்வாறு உட்கார்ந்திருந்தால் இவன் துஷ்டகாரியம் செ
றவனென்று மற்றவன் சந்தேகிப்பானோ அந்த இ
தில் அவ்வாறு ஒருபோதும் உட்காரக்கூடாது.
குரிய இடத்தில் இஷ்டப்படி இருக்கலாம்; அல்
அரசனுடைய சமீபத்தில் நிற்கலாம்; பிறனுடைய

நடந்துகொள்ளவேண்டும். புத்திசாலியான ஒருவன், க்ஷத்திரியனையும் ஸர்ப்பத்தையும், அசக்தர்களா யிருந்தாலும் ஒருபொழுதும் அலக்ஷியஞ் செய்யக்கூடாது. இவர்கள் அவமதிக்கப்பட்டால் மனிதனை எரிப்பர். ஆதலால், கற்றறிந்தவர்கள் எப்பொழுதும் அரசனை முயற்சியுடன் பூஜிக்க வேண்டும். அரசனால் ஒப்புக்கொள்ளப்பட்ட மனிதன் வரம்புகடந்து செல்லக்கூடாது. உலகத்தில் அவனவனுக்குரிய மரியாதையைத்தான் வியவகாரமென்று பண்டிதர்கள் அறிந்திருக்கிறார்கள். அரசர்கள், புத்திரனையும் பேரனையும் சகோதரனையும் வரம்புகடந்து நடப்பவனைப் புகழமாட்டார்கள். அரசனால் ஒருவித அதிகாரங் கொடுக்கப்பட்டவன் மிக்கசெல்வத்தை அடைந்திருந்தாலும் தனக்குரிய நிலைமையை ஆலோசித்துப் பிறவிக் குருடனைப் போலத் தன்னைக் கருதவேண்டும். அரசனிடத்தில் பழகுபவன் தைரியசாலியாக எப்பொழுதும் வாயிலைப் பார்த்துக்கொண்டு அரசர்களிடத்தில் நம்பிக்கையில்லாதவனாயிருக்கவேண்டும். அரசர்களிடத்தில் நம்பிக்கை வைக்கக்கூடாது. எந்த ஆசனத்தில் பிறன் பிரியம் வைக்கமாட்டானோ அந்த ஆசனத்தையே விரும்ப வேண்டும். ராஜமாளிகையில் வசிக்கின்ற மனிதன் எந்த ஆசனத்தில் உட்கார்ந்தால் மிக்க பலவானான ஒருவனுடைய மனம் வருந்தாதோ அந்த ஆசனத்தை விரும்ப வேண்டும். ராஜமாளிகையில் வசிப்பவன் எந்த இடத்தில் எவ்வாறு உட்கார்ந்திருந்தால் இவன் துஷ்டகார்யம் செய்கிறவனென்று மற்றவன் சந்தேகிப்பனோ அந்த இடத்தில் அவ்வாறு ஒருபோதும் உட்காரக்கூடாது. தனக்குரிய இடத்தில் இஷ்டப்படி இருக்கலாம்; அல்லது, அரசனுடைய சமீபத்தில் நிற்கலாம்; பிறனுடைய ஆச

னத்தை ஒருபொழுதும் விரும்பவே கூடாது. வேறொரு வனுடைய ஆசனத்தில் உட்கார்ந்தால் அவனை அவனுடைய வேலைக்காரர்கள் சபையில் இழுத்துவிடுவார்கள். அவன் சத்துருக்களால் பரிகசிக்கப்படுவான். வேலைக்காரன் தனத்துக்காக அரசனை அடைந்திருத்தலால் எப்பொழுதும் அரசனுக்கு முன்னிலையிலிருப்பது கூடாதென்று நீதிமான்கள் எண்ணுகிறார்கள். கற்றறிந்தவன், அரசனுடைய வலப் பக்கத்தையோ இடப் பக்கத்தையோ அடைந்து விநயமுள்ளவனாக நிற்கவேண்டும். அரசனுக்கு முன்புறத்திலாவது பின்புறத்திலாவது நிற்கக்கூடாது. பின்புறத்திலுள்ள இடமானது அரசனைக் காப்பாற்றும் ஆயுதபாணிகளுக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. மனிதர்களை வசப்படுத்துவதின் பொருட்டுத் தாய் வம்சத்திலாவது தகப்பன் வம்சத்திலாவதுள்ள பெரியோர்களுடைய நாமதேயத்தையும் நன்னடக்கையையும் எப்பொழுதும் சொல்லவேண்டும். அரசனால் பூஜிக்கப்பட்டும் எந்த மனிதன் அவ்வரசனுக்குப் பிரதிபூஜை செய்யவில்லையோ அந்த மனிதனை, அரசன், ஆசாரியன் சோம்பேறிகளான சிஷ்யர்களைக் கௌரவியாதது போல், ஒருபொழுதும் கௌரவப்படுத்தமாட்டான். ராஜமாளிகையில் வசிப்பவன், 'நான் அரசனுடைய அன்புக்குப் பாத்திரமாயிருக்கிறேன்' என்று அரசனுடைய வாகனத்திலாவது கட்டிலிலாவது ஆசனத்திலாவது ரதத்திலாவது ஏறக் கூடாது. எந்த மனிதன், வீட்டினின்று வெளிப்பட்டுச் செய்யவேண்டிய காரியத்தை நினைத்துக்கொண்டு, அபிவிருத்தியில் உறுதியான எண்ணமுள்ளவனும் சோம்பலற்றவனும் மனத்தை அடக்கினவனுமாகி, பசி தாகங்களால் வருத்தப்பட்டாலும், துயரப்பட்டாலும், கஷ்டத்தினால்

சுகத்தையடையவேண்டுமென்று விரும்புவனே அவன் ராஜமாளிகையில் வசிக்கவேண்டும். அரசனுல் மற்றவர்கள் ஏவப்படும்போது, 'நான் செய்வேன்' என்று தைரியத்துடன் எந்த மனிதன் முற்படுவானே அந்த மனிதனே அரசர்களிடம் பயனைப் பெறுவான். எந்த மனிதன் வெயிலிலோ குளிரிலோ பகலிலோ இரவிலோ ஏவப்பட்டால் ஆலோசியாமல் காரியங்களைச் செய்வானே அவன் அரசர்களிடம் காரியசித்தியை அடைகிருன். ராஜமாளிகையில் இருக்கும் சமர்த்தனை மந்திரியை ஒருபொழுதும் அவமதிக்கக்கூடாது. கௌரவிக்கப்பட்டாலும் சந்தோஷிக்கக்கூடாது. அவமதிக்கப்பட்டாலும் மனவருத்தமடையக்கூடாது. எவன் ருசுபுத்தியுள்ளவனும் மிருதுசுபாவமுள்ளவனும் உண்மை பேசுபவனுமாயிருக்கிருனே அவன் அரசர்களிடம் காரியசித்தியைப்பெறுகிருன். ராஜமாளிகையில் வசிப்பவன் லாபத்திஞல் சந்தோஷமடையக்கூடாது. சுகதுக்கங்களில் சரியான நிறைபாரமுள்ள தராசுபோல சமனுயிருக்கவேண்டும். ராஜமாளிகையில் வசிப்பவன் அதிக ஆசையில்லாதவனும் தைரியமுள்ளவனும் நிழல்போல எப்பொழுதும் அரசனை அனுசரிப்பவனும் சமர்த்தனும் அதிகமான ஈகையுடையவனும் பண்டிதனுமாயிருக்கவேண்டும். ராஜமாளிகையில் வசிப்பவன் இதிஹாஸங்களையும் புராணங்களையுமறிந்தவனும் நல்ல கதைகளைச் சொல்வதில் திறமையுள்ளவனும் மிக்க கொடையுள்ளவனும் சத்தியவாக்குள்ளவனுமாயிருக்கவேண்டும். ரகஸ்யத்தில் சொல்லப்பட்ட அரசனுடைய வார்த்தையை மனிதர்களிடம் வெளிப்படுத்தக்கூடாது. அரசர்கள், எவனிடத்தில் அருமையைப் பாராட்டுகிருர்களோ அவனைப்பற்றிப்பேசக்கூடாது. அர

சர்களுடைய காரியங்களில் ஏவப்பட்டவன் சிறிதேனும் குடிகளிடமிருந்து பரிதானத்தை வாங்கக் கூடாது; வாங்குகின்றவன் சிறைச்சாலையையோ, அல்லது மரணத்தையோ அடைவான். 'சமமாகச் சேவகத்துக்கு வந்திருக்கின்ற நான், மற்றொருவன் எங்கள் இருவர்களுள் என்னைக்காட்டிலும் குறைந்த மற்றவனை அரசன் போஷிக்கிறான்; பார்!' என்று அறிவுள்ளவன் மயக்கமடையக் கூடாது. ஒவ்வொரு காரியத்திலும் அரசர்கள் மிகச் சிறந்த அறிவுள்ளவனைவிட்டுவிட்டு அதிகமாகக் கீழ் நிலைமையிலிருப்பவனை ஏற்படுத்துவார்கள். அரசர்களுடைய தன்மை அப்படிப்பட்டது. ராஜமாளிகையில் வசிக்கின்ற கற்றறிந்தவனான மனிதன் அரசர்களின் மனைவிகளிடம் எவ்விதத்தாலும் நேசம் பாராட்டக் கூடாது. அந்த ஸ்திரீகளைக் காக்கும் வேலையையும் தான் ஏற்றுக் கொள்ளக்கூடாது. அரசன் தன் ஸ்திரீகளோடு சேர்ந்து நிற்கின்ற வேலைக்காரனைக் கண்ணால் பார்க்கும்பொழுது அரசனுடைய புத்தியானது கலங்கும். ராஜமாளிகையிலிருக்கின்ற சந்தோஷத்துக்கேதுவான சில வஸ்துக்கள் விஷயங்களில் தான் அதிகமாக சந்தோஷம் பாராட்டக் கூடாது. அந்த வஸ்துக்களையே அரசனிடத்தில் புகழ வேண்டும். புத்திக் குறைவுள்ள மனிதன் சந்தோஷத்தினால் தன் இஷ்டப்படி கெட்டகாரியத்தைச் செய்துவிடுவான். ஆதலால், இவனுடைய நடக்கையை அரசன் கவனித்துப் பார்ப்பான். அந்தப்புரத்தை அடைந்து கபட வேஷமின்றியிருக்கின்ற இந்த வேலைக்காரனை எல்லாரும் நிச்சயமாக அலக்ஷியம் செய்வார்கள். ஆதலால், தன்னைக் கம்பீரசுபாவமுள்ளவனாகச் செய்துகொண்டும் சந்தோஷத்தை உள்ளடக்கிக்கொண்டும் அரசனுடைய

அந்தப்புரத்தில் நாள்தோறும் நடக்கும் விருத்தாந்தத்தை வெளியிடாமல் இருக்கவேண்டும். மிகச்சிறந்த மந்திராலோசனையானது வெளிப்பட்டால் சுகத்தைக் கெடுப்பதுபோலவே அந்தப்புரத்திலுள்ள விருத்தாந்தமானது வெளியிலுள்ளவர்களால் கேட்கப்பட்டால் சுகத்தைக் கெடுத்துவிடும். அந்தரங்கர்களும் வெளியிலுள்ளவர்களுமான அரசனை அண்டிப்பிழைக்கும் வேலைக்காரர்கள் இரண்டுவகையினராவார்கள். வெளியிலுள்ளவனுவது உள்ளிலுள்ளவனுவது ஒருபொழுதும் ஸ்திரீகளை நினைக்கக்கூடாது. அரசனே அந்த வேலைக்காரர்களுக்கு அதிகமான பயத்தை உண்டுபண்ணுவான். அரசனல்லாத கற்றறிந்த ஒருவன், தன்னை அரசனுக்கு நண்பனென்றெண்ணிக்கொண்டு அரசன் அணியத்தக்க உத்தமரத்தினங்களை அரசனைப் போலத் தானும் உபயோகிக்கக்கூடாது. அரசனுக்குப் பிரியமான ரத்தினங்களை அரசனைப்போல அனுபவிக்கின்ற அரசனல்லாத மனிதனை அரசன் உயிரோடு வைப்பதற்குப் பொறுக்கமாட்டான். ஆதலால், நன்மையை விரும்புகின்ற மனிதன் வெளிப்படையாயில்லாதபடி சுகங்களை அனுபவிக்கவேண்டும். அரசனுனவன் தனக்குச் சமமான போகத்துடன்கூடின வேலைக்காரனைத் தன் கோபத்துக்குள்ளாக்குவான். அரசனுடைய புத்திரனேடு எவ்வித காரணத்தினுலும் நேசம் பாராட்டக்கூடாது. அரசனுல் அவமதிக்கப்பட்டவனையும் பயனற்றவனையும் பகைவனையும் தூரத்தில் விலக்கவேண்டும். இந்த நான்கு விதமான மனுஷ்ய நிலைமையை அனுசரிக்கின்ற ராஜசேவகனிடத்தில் அரசனுடைய அன்புக்குக் காரணமானது இரண்டாகத் தூண்டிக்கப்படுகிறது. இவர்களைக்காட்டிலும் வேருனவர்களும் இதற்குமாருன நிலைமையை அனுஷ்டிக்கிறவர்களு

மான மனிதர்களோடு சேர்க்கையை அடையவேண்டும். விரோதத்தை எவ்விதத்திலும் அடையக்கூடாது. ராஜ பந்துக்களோடும் பலமுள்ளவர்களான மனிதர்களோடும் சேர்க்கையை நல்லதாக எண்ணவேண்டும். எவ் விதத்திலும் விரோதத்தைத் தேடிக்கொள்ளக்கூடாது. முற்கூறப்பட்ட இரண்டுவிதமான நிலைமைகளுக்கும் விரோதமாக நடக்கும் பலக்குறைவுள்ள ஒரு மனிதனுக்கு முதலில் ராஜப்பிரீதிக்கு எது மூலமோ அது துணிக்கப் படும்; இரண்டாவது பயமும் நேரும். கர்வமுள்ளவர் களுடைய வேஷத்தையும் கபடமுள்ளவர்களுடைய வேஷத்தையும் அரசனுடைய வேஷத்தையும் வெளிப் படையாகத் தரிப்பவன் விருத்தி அடையமாட்டான். ராஜவேஷந்தவிர மற்ற இரண்டு வேஷங்களையும் தரிப் பவன் பந்துக்களால் பரிகாஸஞ் செய்யப்படுவான். ஆண்மையில்லாதவர்களோடும் ஸ்திரீகளோடும் ஸ்திரீ களைப் பார்க்கின்ற சுபாவமுள்ள புருஷர்களோடும் ஓரிடத்திலும் ஒருபொழுதும் சம்பாஷணஞ் செய்யக் கூடாது. இம்மூவர்களோடும் பேசுகின்ற அறிவற்ற மனிதன், தன்னுடைய சுகத்தை இழக்கிறான். காரண மில்லாமல் காரணமிருப்பதுபோல் அரசனிடமிருந்து சம்மானத்தைப் பெறுகிறவர்களோடும் சிற்றரசர்களுடைய தூதர்களோடும் ஒருபொழுதும் சேர்க்கை பெறலாகாது. ராஜமாளிகையில் வசிக்கின்ற புத்திசாலியான மனிதன் அரசனால் உத்தரவளிக்கப்படாமல் மற்றொருவனுடைய இடத்தை அடையக்கூடாது. அரசர்கள் முன்னிலையில் தற்புகழ்ச்சி செய்யக்கூடாது. அப்படிப் புகழ்வதானது தரித்திரர்களுக்கும் அதிகமான அப்பிரியத்துக்குக் காரண மாகும். அவ்வாறே, தும்மல் முதலியவற்றையும் காறி



எச்சிலுமிழ்வதையும் மெதுவாகச் செய்யவேண்டும். பரி
காசவார்த்தைகளில் ஒருபொழுதும் சிரிக்கக்கூடாது
அப்படிச் செய்வதானது அறிவீனனுடைய செய்கையென்று
எண்ணப்படுகிறது. அரசனுடைய பிரீதியினலுண்டா
சிரிப்பை மெதுவாக வெளியில் காட்டவேண்டும். ஒ
காலத்தும் உதடுகளை அசைக்கக்கூடாது. கைகளையு
ஆட்டக்கூடாது. அரசனுடைய வார்த்தையை ஆக்ஷேபி
க்க கூடாது. குறுக்காகப் பார்க்கவும் கூடாது. நன்றாக
கண்களால் பார்க்கவேண்டும். அரசனுக்கருகில் பு
வத்தை நெறிக்கலாகாது. கட்டைவிரல்களால் பூமியை
கிறலாகாது. ஒருபொழுதும் நன்றாகக் கொட்டாவி விட
கூடாது. அந்த அரசனுடைய முன்னிலையில் பிரியர்கள
ஹிதர்களும் புகழப்பட்டாலும் இகழப்பட்டாலும் தா
புகழவுங்கூடாது; அசூயை பாராட்டவுங்கூடாது. பிரி
களையும் ஹிதர்களையும் பார்க்கும்பொழுதும் அ
ளுடைய வாக்கியங்களைக் கேட்கும்பொழுதும் அமிரு
போல அவர்களை வர்ணிக்கவேண்டும். அரசனுக்
பிரதிகூலகாரியங்களைச் செய்பவன் அரசனுக்குப் புத்திர
லும் பிராதாவானாலும் சமானனானாலும் சுகமு
வனாகான். புத்திசாலியானவன் ஜாக்கிரதையுடன் அர
பூர்ணமான நல்ல ஒழுக்கத்தாலும் முயற்சியினாலும் ப
விதமான சுத்தியினாலும் ஆனந்தப்படுத்தவே
நீராடுவதும் தூய ஆடையுடுப்பதும் சரீர சம்பந்
சுத்தியென்று சொல்லப்படுகின்றன. இழிவான
களில் பற்றுதலற்றிருப்பது இரண்டாவது சுத்தி
சொல்லப்படுகிறது. புத்தியுள்ளவன், பக்தியுள்
உண்மை பேசுகிறவனும் இந்திரியங்களை அடக்கி

ஏச்சிலுமிழ்வதையும் மெதுவாகச் செய்யவேண்டும். பரிகாசவார்த்தைகளில் ஒருபொழுதும் சிரிக்கக்கூடாது. அப்படிச் செய்வதானது அறிவீனனுடைய செய்கையென்று எண்ணப்படுகிறது. அரசனுடைய பிரீதியினாலுண்டான சிரிப்பை மெதுவாக வெளியில் காட்டவேண்டும். ஒருகாலத்தும் உதடுகளை அசைக்கக்கூடாது. கைகளையும் ஆட்டக்கூடாது. அரசனுடைய வார்த்தையை ஆக்ஷேபிக்கக் கூடாது. குறுக்காகப் பார்க்கவும் கூடாது. நன்றாகக் கண்களால் பார்க்கவேண்டும். அரசனுக்கருகில் புருவத்தை நெறிக்கலாகாது. கட்டைவிரல்களால் பூமியைக் கீறலாகாது. ஒருபொழுதும் நன்றாகக் கொட்டாவி விடக் கூடாது. அந்த அரசனுடைய முன்னிலையில் பிரியர்களும் ஹிதர்களும் புகழப்பட்டாலும் இகழப்பட்டாலும் தான் புகழவுங்கூடாது; அருமை பாராட்டவுங்கூடாது. பிரியர்களையும் ஹிதர்களையும் பார்க்கும்பொழுதும் அவர்களுடைய வாக்கியங்களைக் கேட்கும்பொழுதும் அமிருதம் போல அவர்களை வர்ணிக்கவேண்டும். அரசனுக்குப் பிரதிகூலகாரியங்களைச் செய்பவன் அரசனுக்குப் புத்திரனையும் பிராதாவானாலும் சமானனையும் சுகமுடையவனாகான். புத்திசாலியானவன் ஜாக்கிரதையுடன் அரசனைப் பூர்ணமான நல்ல ஒழுக்கத்தாலும் முயற்சியினாலும் பற்பல விதமான சுத்தியினாலும் ஆனந்தப்படுத்தவேண்டும். நீராடுவதும் தூய ஆடையுடுப்பதும் சரீர சம்பந்தமான சுத்தியென்று சொல்லப்படுகின்றன. இழிவான விஷயங்களில் பற்றுதலற்றிருப்பது இரண்டாவது சுத்தியென்று சொல்லப்படுகிறது. புத்தியுள்ளவன், பக்தியுள்ளவனும் உண்மை பேசுகிறவனும் இந்திரியங்களை அடக்கினவனும்

மேதாவியும் தைரியமுள்ளவனுமாக அரசனை அடைய வேண்டும். நன்றியறிவுள்ளவனும் கற்றறிந்தவனும் அற்பத் தன்மையில்லாதவனும் உறுதியான அன்புள்ளவனும் இந்திரியங்களை அடக்கினவனும் விருத்தியடைகின்றவனும் நல்ல நிலைமையிலிருக்கின்றவனுமான அரசனை அடைய வேண்டும்.

---

# VI. தன்னலம் பேணல்.

ஒரு பிராம்மணனுக்குக் கஷ்டப்பட்டுக் கிடைத்த
ண்ட கண்ணுள்ளவனுமான ஒரு புத்திரன் பா
ருக்கும்பொழுதே பாலக்கிரஹங்களால் பீடிக்க
ரணமடைந்தான். அவனைச் சேர்ந்தவர்கள் குலத்திற்
ளைப் பொருளும் போன்றவனும் யௌவனத்தை
தவனும் மரித்தவனுமான அந்தப் பாலகனை எ
ண்டும் துக்கத்தாலும் சோகத்தாலும் பீடிக்க
அழுதுகொண்டும் மயானத்திற்கு எதிராகவந்து நின்
தவர்கள், அப்பாலகன் முன்சொல்லிய சொற்களை
வும் திரும்பவும் நினைத்துச் சோகப்படுகிறவர்களு
க்கமுள்ளவர்களுமாகி ஒருவரை ஒருவர் கட்டிக்
அழுதார்கள். அவர்கள் அப்பாலகனைப் பூதலத்தில்
விட்டுத் திரும்பிச் செல்லத் துணியாமல் கதறினார்க
ளின் அழுகைக் குரலால் ஒரு கழுகு அவ்விடத்
"பிரேதவடிவமான இக்குழந்தையைக் காலனிடத்
விட்டுச் செல்லுங்கள் ; தாமசிக்கவேண்டாம். இவ்
லனால் கொண்டுவரப்பட்ட பல ஆயிரம் புரு
லவாயிரம் ஸ்திரீகளையும் தள்ளிவிட்டுப்
போகிறார்கள். உலகம் யாவும் சுகதுக்கங்களால்
பட்டிருப்பதை நன்றாகப் பாருங்கள். சேர்க்கை
றையே காணப்படுகின்றன. மரித்தவர்களை
கொண்டு எவர்கள் செல்லுகிறார்களோ, எவர்கள்
தொடர்ந்து செல்லுகிறார்களோ, அந்த மனித
னுள்ள ஆயுள் அளவுப்படியே செல்லுகிறார்க
ளாலும் நரிகளாலும் நிறைந்ததும் அதிகமா
ளதும் கோரமும் எல்லாப்பிராணிகளுக்கு

## VI. தன்னலம் பேணல்.

ஒரு பிராம்மணனுக்குக் கஷ்டப்பட்டுக் கிடைத்தவனும்
ட கண்ணுள்ளவனுமான ஒரு புத்திரன் பாலகனா
க்கும்பொழுதே பாலக்கிரஹங்களால் பிடிக்கப்பட்டு
மடைந்தான். அவனைச் சேர்ந்தவர்கள் குலத்திற்குள்ள
லாப் பொருளும் போன்றவனும் யௌவனத்தை அடை
தவனும் மரித்தவனுமான அந்தப் பாலகனை எடுத்துக்
ண்டும் துக்கத்தாலும் சோகத்தாலும் பிடிக்கப்பட்டு
ழுதுகொண்டும் மயானத்திற்கு எதிராகவந்து நின்றார்கள்.
ர்கள், அப்பாலகன் முன்சொல்லிய சொற்களைத் திரும்
ம் திரும்பவும் நினைத்துச் சோகப்படுகிறவர்களும் மிக்க
க்கமுள்ளவர்களுமாகி ஒருவரை ஒருவர் கட்டிக்கொண்டு
ழுதார்கள். அவர்கள் அப்பாலகனைப் பூதலத்தில் போட்டு
ட்டுத் திரும்பிச் செல்லத் துணியாமல் கதறினார்கள். அவர்
ன் அழுகைக் குரலால் ஒரு கழுகு அவ்விடத்தில் வந்து
பிரேதவடிவமான இக்குழந்தையைக் காலனிடத்தில் விட்டு
ட்டுச் செல்லுங்கள்; தாமசிக்கவேண்டாம். இவ்விடத்தில்
லனால் கொண்டுவரப்பட்ட பல ஆயிரம் புருஷர்களையும்
லவாயிரம் ஸ்திரீகளையும் தள்ளிவிட்டுப் பந்துக்கள்
பாகிறார்கள். உலகம் யாவும் சுகதுக்கங்களால் தொடரப்
ட்டிருப்பதை நன்றாகப் பாருங்கள். சேர்க்கையும் பிரிவும்
றையே காணப்படுகின்றன. மரித்தவர்களை எடுத்துக்
காண்டு எவர்கள் செல்லுகிறார்களோ, எவர்கள் அவர்களைத்
தொடர்ந்து செல்லுகிறார்களோ, அந்த மனிதர்களும் தமக்
குள்ள ஆயுள் அளவுப்படியே செல்லுகிறார்கள். கழுகு
களாலும் நரிகளாலும் நிறைந்ததும் அதிகமான எலும்புக
ளுள்ளதும் கோரமும் எல்லாப்பிராணிகளுக்கும் பயத்தை

உண்டுபண்ணுவதுமான இந்த மயானத்தில் நிற்பதில் என்ன பயன்? நண்பனாலும் பகைவனாலும் மரணத்தை அடைந்த ஒருவன் மறுபடி ஜீவிப்பதில்லை. பிராணிகளின் கதி இவ்விதமானது. மானிட லோகத்தில் பிறந்தயாவுமே மரிக்கவேண்டும். யமனால் செய்யப்பட்ட வழியிற் சென்று மரித்தவனை எவன் ஜீவிக்கச்செய்வான்? திக்குக்களின் கடைசியிற் சென்ற சூரியன் அஸ்தமயத்தை அடைவதற்குள்ளாகவே, புத்திரனிடமுள்ள சினேகத்தைத் தள்ளிவிட்டு, உங்கள் இடம் போய்ச் சேரலாம்" என்று சொல்லிற்று. அந்த உறவினர்கள் கழுகின் வசனத்தைக்கேட்டு அப்பொழுது பூதலத்தில் புத்திரனைப் போட்டுவிட்டு மிகவும் அழுதுகொண்டு திரும்பிச் சென்றார்கள்; மரித்தவனென்றே நிச்சயம் செய்துகொண்டு அந்தப் பாலகனைப் பார்ப்பதில் ஆசையற்றவர்களாக அழுதுகொண்டு அங்குமிங்கும் செல்லத் தொடங்கினார்கள்; அவன் சீவிப்பதில் ஆசையற்றவர்களாய்ச் சூழ்ந்துகொண்டு நின்றார்கள்.

அப்பொழுது, காக்கையின் இறகுக்கொப்பான நிறமுள்ள ஒரு நரி வந்தது; போகும் மனிதர்களை நோக்கி, "மனிதர்கள் தயையில்லாதவர்களன்றோ? மூடர்களே! இதோ சூரியனிருக்கிறான்; பயப்படவேண்டாம்; அன்பு வையுங்கள். அதிக அழகுள்ள பாலகன் ஒரு முகூர்த்தத்தில் ஜீவிக்கலாம்; புத்திரனிடம் சினேகமில்லாதவர்களாகி மயானத்தில் பூமியில் தர்ப்பங்களைப் பரப்பிப் புத்திரனைப் போட்டுவிட்டு ஏன் தயையின்றிச் செல்லுகிறீர்கள்? எவனுடைய வார்த்தையினால் சந்தோஷமடைவீர்களோ அப்படிப்பட்ட இனிமையாகப் பேசும் பாலனான இந்தப் புத்திரனிடத்தில் உங்களுக்கு சினேகமில்லையே?



பசுக்களுக்கும் பறவைகளுக்குங்கூடப் புத்திரர்களிடம் சினேகம் எவ்விதமிருக்கிறதென்று நீங்கள் பார்க்கவில்லையே? மிருகங்கள் பக்ஷிகள் புழுக்கள் என்னும் அந்தப் பிராணிகளுக்கு அவற்றின் புத்திரர்களை ரக்ஷித்துக்கொண்டிருப்பதில் யாதொரு பயனும் வருவதில்லை. அந்தப் பிராணிகளுக்குப் புத்திரர்களிடம் சினேகத்தினால் இந்த உலகத்திலும் மேலுலகத்திலும் யாதொரு குணமும் காணப்படவில்லை. அவைகளும் தம் பிள்ளைகளை நன்றாகப் போஷிக்கின்றன. பிரியமான புத்திரர்களைப் பாராமலிருக்கும்பொழுது எவர்களுக்குச் சோகமில்லையோ அவர்கள், புத்திரர்களைப் போஷிப்பதில் மிகவும் பிரீதியுள்ள தாய்தந்தையராகமாட்டார்கள். எவர்களுக்கு ஒருவரைப் பாராமலிருக்கும்பொழுது சோகமில்லையோ அவர்களுக்கு அவருடன் சினேகமேது? குலத்தை விருத்திசெய்யும் இந்தப் புத்திரனைத் தள்ளி விட்டு எங்கே போகப்போகிறீர்கள்? வெகுநேரம் கண்ணீரை விடுங்கள்; வெகுநேரம் சினேகத்துடன் பாருங்கள். இப்படிப்பட்ட பிரிய வஸ்துக்களை விடுவது பெரிய கஷ்டம். குறையை அடைந்தவனுக்கும் அபவாதமுள்ளவனுக்கும் மயானத்தைக் குறித்துச் சென்றவனுக்கும் பந்துக்கள் அநுகூலமாயிருப்பதுபோல மற்றவன் இருக்கமாட்டான். யாவருக்கும் உயிர் விருப்பமானது. யாவரும் சினேகத்தையும் அடைவார்கள். கீழான பசு முதலிய பிறப்பிலிருப்பவைகளுக்கும் சினேகம் எவ்விதமிருக்கிறதென்று பாருங்கள். புதிதாகக் கல்யாணஞ் செய்துகொண்டு ஸ்நானத்தாலும் மாலைகளாலும் அலங்கரிக்கப்பட்டவன் போன்றவனும் தாமரைமலர்போலச்சலிக்கும் நீண்ட கண்ணுள்ளவனுமான இவனை விட்டு விட்டு எப்படிப் போகிறீர்கள்?" என்று சொல்லிற்று. இவ்விதம் சோக

பசுக்களுக்கும் பறவைகளுக்குங்கூடப் புத்திரர்களிடம் சினேகம் எவ்விதமிருக்கிறதென்று நீங்கள் பார்க்க வில்லையே? மிருகங்கள் பக்ஷிகள் புழுக்கள் என்னும் அந்தப் பிராணிகளுக்கு அவற்றின் புத்திரர்களை ரக்ஷித்துக்கொண் டிருப்பதில் யாதொரு பயனும் வருவதில்லை. அந்தப் பிராணி களுக்குப் புத்திரர்களிடம் சினேகத்தினல் இந்த உலகத் திலும் மேலுலகத்திலும் யாதொரு குணமும் காணப்பட வில்லை. அவைகளும் தம் பிள்ளைகளை நன்ருகப் போஷிக் கின்றன. பிரியமான புத்திரர்களைப் பாராமலிருக்கும் பொழுது எவர்களுக்குச் சோகமில்லையோ அவர்கள், புத் திரர்களைப் போஷிப்பதில் மிகவும் பிரீதியுள்ள தாய்தந்தை யராகமாட்டார்கள். எவர்களுக்கு ஒருவரைப் பாராம லிருக்கும்பொழுது சோகமில்லையோ அவர்களுக்கு அவ ருடன் சினேகமேது? குலத்தை விருத்திசெய்யும் இந்தப் புத்திரனைத் தள்ளி விட்டு எங்கே போகப்போகிறீர்கள்? வெகுநேரம் கண்ணீரை விடுங்கள்; வெகுநேரம் சினேகத் துடன் பாருங்கள். இப்படிப்பட்ட பிரிய வஸ்துக்களை விடு வது பெரிய கஷ்டம். குறையை அடைந்தவனுக்கும் அப வாதமுள்ளவனுக்கும் மயானத்தைக் குறித்துச் சென்ற வனுக்கும் பந்துக்கள் அனுகூலமாயிருப்பதுபோல மற்ற வன் இருக்கமாட்டான். யாவருக்கும் உயிர் விருப்பமானது. யாவரும் சினேகத்தையும் அடைவார்கள். கீழான பசு முதலிய பிறப்பிலிருப்பவைகளுக்கும் சினேகம் எவ்வித மிருக்கிறதென்று பாருங்கள். புதிதாகக் கல்யாணஞ் செய்து கொண்டு ஸ்நானத்தாலும் மாலைகளாலும் அலங்கரிக்கப் பட்டவன் போன்றவனும் தாமரைமலர்போலச்சலிக்கும் நீண்ட கண்ணுள்ளவனுமான இவனை விட்டு விட்டு எப்படிப் போகிறீர்கள்?" என்று சொல்லிற்று. இவ்விதம் சோகத்

துடன் அழுதுகொண்டு சொல்லும் நரியின் வசனத்தைக் கேட்டு, அந்தமனிதர்கள் யாவரும் அப்பொழுது குழந்தை யிருக்குமிடத்திற்குத் திரும்பினார்கள்.

கழுகு, "அந்தோ! கஷ்டம்! மந்தபுத்தியுள்ள மானிடர்களே! குரூரமானதும் அற்பபுத்தியுள்ளதும் இழிந்ததுமான நரியின் சொல்லைக்கேட்டு ஏன் திரும்புகிறீர்கள்? ஐந்து பூதங்களாலும் விடப்பட்டதும் காய்ந்த கட்டைத்தன்மையை அடைந்ததும் இயக்கமற்றதுமான இந்தக் குழந்தையைப்பற்றி ஏன் சோகப்படுகிறீர்கள்? உங்களைப்பற்றி ஏன் சோகப்படவில்லை? எதைச்செய்து பாவத்திலிருந்து விடுபடுவீர்களோ அவ்விதத் தீவிரமான தவத்தைச் செய்யுங்கள். தவத்தால் எல்லாம் அடையப் படும். அழுகை எதைச்செய்யும்? அனிஷ்டங்களும் பாக்கியங்களும் சரீரத்துடன்கூட உண்டாகின்றன. அந்தக் காரணத்தால் இந்தக் குழந்தை முடிவில்லாத சோகத்தைக் கொடுத்துவிட்டுச் செல்லுகிறது. பொருளும் பசுக்களும் பொன்னும் மணிகளும் ரத்தினங்களும் சந்தானமும் தவத்தை மூலமாகக்கொண்டவை. தவமானது யோகத்தாலடையப்படும். தாம் செய்திருக்கிறபடி, பிராணிகளிடம் சுகமும் துக்கமும் அடைகின்றன. பிராணியானது துக்கங்களையும் சுகங்களையும் பற்றிக்கொண்டே உண்டாகிறது. தந்தையின் கர்மத்தால் புத்திரனும் புத்திரனின் கர்மத்தால் தந்தையுமிருப்பதில்லை. மனிதர்கள் புண்ணிய பாபங்களால் கட்டப்பட்டு வேறுவழியாகச் செல்லுகிறார்கள். முயற்சியுடன் தர்மத்தைச் செய்யுங்கள்; அவ்விதமே அதர்மத்திலிருந்து விலகுங்கள்; காலந்தவறாமல் தேவர்களிடத்திலும் பிராம்மணர்களிடத்திலும் இருங்கள்; சோகத்தையும் தீனத்



தனத்தையும் விடுங்கள்; புத்திரனிடமுள்ள சினேகத்திலிருந்து விலகுங்கள்; இந்த அழுகையை விடுங்கள்; வேகமாக அதிலிருந்து திரும்புங்கள். சுபமான கர்மத்தையும் அவ்விதமே மிக்க குரூரமான கர்மத்தையும் எவன் செய்கிறானோ அவனே அவற்றின் பயனை அனுபவிக்கவேண்டும். பந்துக்களுக்கு இதில் என்ன சம்பந்தம்? இவ்விடத்தில் பிரியமாயிருக்கும் பந்துவைத் தள்ளிவிட்டுப் பந்துக்களாயிருப்பவர்கள் நிற்பதில்லை; சினேகத்தைத் தள்ளிவிட்டுக் கண்ணீர்நிரம்பிக் கலங்கிய கண்ணுள்ளவர்களாய்ச் செல்லுவார்கள். அறிவிற் சிறந்தவனோ மூர்க்கனோ பொருளுள்ளவனோ பொருளற்றவனோ சுபாசுபங்களுடன் கூடின யாவருமே காலத்தின் வசத்தை அடைகிறார்கள். சோகப்பட்டு என்ன செய்யப்போகிறீர்கள்? மரித்ததைப்பற்றி ஏன் சோகப்படுகிறீர்கள்? தர்மப்படி ஸமமானபார்வையுள்ள காலன் யாவருக்கும் பிரபுவன்றோ? மிருத்யுவானது யௌவனத்திலிருப்பவர்களையும் சிறுவர்களையும் வயது சென்றவர்களையும் கர்ப்பத்திலிருப்பவர்களையும் யாவர்களையும் பிடிக்கிறது. இவ்வுலகம் இப்படியிருக்கிறது!" என்றது.

நரி "அந்தோ! புத்திரனிடமுள்ள சினேகத்தால் துன்பமடைந்து மிகவும் சோகப்படும் உங்களுடைய சினேகமானது, அற்பபுத்தியுள்ள இங்கிருக்கும் கழுகால் நன்றாகக் கூறப்பட்டவைகளும் காரணத்தை விளங்கச்செய்பவைகளும் நன்கொள்கைக்கு ஒத்தவைகளுமான வசனங்களால் அற்பமாகச் செய்யப்பட்டது. இது முழுமையுந் தெரிந்துகொண்டு, சீக்கிரம் ஆலோசனையையாவது செய்யுங்கள். விடத்தகாத சினேகத்தை விட்டுவிட்டு ஜலமுள்ளவிடத்திற்குப் போகிறீர்களே. கஷ்டம்! புத்திரனை விட்டுப்பிரிந்து,

தனத்தையும் விடுங்கள்; புத்திரனிடமுள்ள ஸ்நேகத்தி லிருந்து விலகுங்கள்; இந்த அழுகையை விடுங்கள்; வேக மாக அதிலிருந்து திரும்புங்கள். சுபமான கர்மத்தையும் அவ்விதமே மிக்க குரூரமான கர்மத்தையும் எவன் செய் கிறானோ அவனே அவற்றின் பயனை அநுபவிக்கவேண்டும். பந்துக்களுக்கு இதில் என்ன சம்பந்தம்? இவ்விடத்தில் பிரியமாயிருக்கும் பந்துவைத் தள்ளிவிட்டுப் பந்துக்களா யிருப்பவர்கள் நிற்பதில்லை; ஸ்நேகத்தைத் தள்ளிவிட்டுக் கண்ணீர்நிரம்பிக் கலங்கிய கண்ணுள்ளவர்களாய்ச் செல்லு வார்கள். அறிவிற் சிறந்தவனோ மூர்க்கனோ பொருளுள்ள வனோ பொருளற்றவனோ சுபாசுபங்களுடன் கூடின யாவருமே காலத்தின் வசத்தை அடைகிறார்கள். சோகப் பட்டு என்ன செய்யப்போகிறீர்கள்? மரித்ததைப்பற்றி ஏன் சோகப்படுகிறீர்கள்? தர்மப்படி ஸமமானபார்வை யுள்ள காலன் யாவருக்கும் பிரபுவன்றோ? மிருத்யுவானது யௌவனத்திலிருப்பவர்களையும் சிறுவர்களையும் வயது சென்றவர்களையும் கர்ப்பத்திலிருப்பவர்களையும் யாவர்களையும் பிடிக்கிறது. இவ்வுலகம் இப்படியிருக்கிறது!" என்றது

நரி "அந்தோ! புத்திரனிடமுள்ள ஸ்நேகத்தால் துன்பமடைந்து மிகவும் சோகப்படும் உங்களுடைய ஸ்நேக மானது, அற்பபுத்தியுள்ள இங்கிருக்கும் கழுகால் நன்றாகக் கூறப்பட்டவைகளும் காரணத்தை விளங்கச்செய்பவைகளும் தன்கொள்கைக்கு ஒத்தவைகளுமான வசனங்களால் அற்ப மாகச் செய்யப்பட்டது. இது முழுமையுந் தெரிந்து கொண்டு, சீக்கிரம் ஆலோசனையையாவது செய்யுங்கள். விடத்தகாத ஸ்நேகத்தை விட்டுவிட்டு ஜலமுள்ளவிடத் திற்குப் போகிறீர்களே. கஷ்டம்! புத்திரனை விட்டுப்பிரிந்து,

இறந்த புத்திரனில்லாத இடத்தையடைந்து, அழும் உங்களுக்குக் கன்றையிழந்த பசுக்களுக்கு உண்டாவது போல மிகவும் துக்கமுண்டாகும். பூதலத்தில் மனிதர்களுக்குள்ள சோகத்தை இப்பொழுது அறிகிறேன். ஏனெனில், சிநேகத்தைக் காரணமாகச் செய்துகொண்டு எனக்கும் கண்ணீர் விழுந்தது. எப்பொழுதும் முயற்சி செய்யவேண்டும். பிறகு, தெய்வத்தால் சித்திக்கும். தெய்வம் முயற்சி இரண்டிலும் ஒரே உறுதியாயிருப்பது யுக்தமாகும். எப்பொழுதும் வெறுப்பில்லாமலிருக்கவேண்டும். வெறுப்படைந்தால் எங்கிருந்து சுகமுண்டாகும்? முயற்சியாலன்றோ பொருளடையப்படுகிறது? ஏன் தயையில்லாமற் செல்லுகிறீர்கள்? தன் மாம்ஸத்திலிருந்து உண்டானதும் தன் பாதிச்சரீரம் போன்றதும் பிதுர்க்களுக்கு வேண்டிய வம்சத்தை உண்டுபண்ணுவதுமான புத்திரனுடைய சரீரத்தை வனத்தில் தள்ளிவிட்டு எங்கே போகிறீர்கள்? சூரியன் அஸ்தமயத்தை அடைந்து ஸந்தியாகாலம் வந்துவிட்டால், புத்திரனை எடுத்துக்கொண்டாவது போங்கள்; அல்லது, இவ்விடத்திலேயே இருக்கவாவது செய்யுங்கள்" என்று சொல்லிற்று.

கழுகு, "மானிடர்களே! இப்பொழுது நான் பிறந்து ஆயிரம் வருஷத்துக்குமேலாகிறது. பெண்ணோ, ஆணோ, அலியோ மரித்தவர் பிழைப்பதைக் காணேன். சிலர் கர்ப்பங்களில் மரித்துப் பிறக்கிறார்கள். சிலர் பிறந்தவுடனும் மரிக்கிறார்கள். சிலர் தவழ்ந்துகொண்டிருக்கையிலும் மரிக்கிறார்கள். சிலர் யௌவனத்தில் மரிக்கிறார்கள். இவ்வுலகில் நாற்காற் பிராணிகளுக்கும் பறவைகளுக்குங்கூடப் பாக்கியங்கள் நிலைத்தவைகளல்ல. அசைவுள்ளவைகளுக்கும்



அசையாமலிருப்பவைகளுக்கும் வாழ்நாள் எதிர்காலத்தில் முடிவு பெறுகிறது. இஷ்டமான தாரங்களைவிட்டுப் பிரிந்தவர்களும் புத்திரசோகத்துடன் கூடியவர்களுமாய்ச் சோகத்தால் எரிக்கப்பட்டு ஒவ்வொருநாளும் பலர் வீடு செல்லுகின்றனர். ஆயிரம் அனிஷ்டங்களையும் நூறு இஷ்டங்களையும் இவ்விடத்தில் தள்ளிவிட்டுப் பந்துக்களாயிருப்பவர்கள் மிகவும் துக்கத்துடன் செல்லுகிறார்கள். தேஜஸின்றிச் சூன்யமாகக் கட்டைத் தன்மையை அடைந்த இந்தச் சிசுவை விடுங்கள். வேறு தேகத்தில் சம்பந்தம் அடைந்து கட்டையாயிருக்கும் சிசுவை உபாசிக்கிறீர்களே. உயிரை விட்ட குழந்தைக்குக் கண்ணீரை விட்டுக்கொண்டு ஏன் திரும்பிப் போகாமலிருக்கிறீர்கள்? இந்தச் சிநேகம் பயனற்றதாயிற்றே? சிரமமும் பயனற்றது. இந்தக் குழந்தை கண்களால் பார்க்கிறதுமில்லை; செவிகளால் கேட்கிறதுமில்லை. ஏன் இதைத் தள்ளிவிட்டு வேகமாக வீடு செல்லாமலிருக்கிறீர்கள்? மோக்ஷ தர்மமுள்ளவைகளும் யுக்தியுள்ளவைகளும் மிக்க குரூரமானவைகளுமான வசனங்களால் என்னாலுபதேசிக்கப்பட்ட நீங்கள் வேகமாக உங்கள் உங்கள் வீட்டையே போய் அடையுங்கள். அறிவும் பேரறிவுமுள்ளவனும் புத்தியையும் நல்லறிவையுங்கொடுப்பவனுமான என்னால் நல்ல வார்த்தை சொல்லப்பட்டீர்கள். மானிடர்களே! திரும்புங்கள். நடந்ததை நினைத்துக் கண்டும் சோகமானது இரண்டு மடங்காகும்" என்று சொல்லிற்று. இவ்விதம் இக்கழுகின் வசனத்தைக் கேட்டபின், மனிதர்கள் திரும்பினார்கள்.

அப்பொழுது, நரியானது வேகமாகவந்து அக்கழு

அசையாமலிருப்பவைகளுக்கும் வாழ்நாள் எதிர்காலத்தில் முடிவு பெறுகிறது. இஷ்டமான் தாரங்களைவிட்டுப் பிரிந்தவர்களும் புத்திரசோகத்துடன் கூடியவர்களுமாய்ச் சோகத்தால் எரிக்கப்பட்டு ஒவ்வொருநாளும் பலர் வீடு செல்லுகின்றனர். ஆயிரம் அனிஷ்டங்களையும் நூறு இஷ்டங்களையும் இவ்விடத்தில் தள்ளிவிட்டுப் பந்துக்களாயிருப்பவர்கள் மிகவும் துக்கத்துடன் செல்லுகிறார்கள். தேஜஸின்றிச் சூன்யமாகக் கட்டைத் தன்மையை அடைந்த இந்தச் சிசுவை விடுங்கள். வேறு தேகத்தில் சம்பந்தம் அடைந்து கட்டையாயிருக்கும் சிசுவை உபாசிக்கிறீர்களே. உயிரை விட்ட குழந்தைக்குக் கண்ணீரை விட்டுக்கொண்டு ஏன் திரும்பிப் போகாமலிருக்கிறீர்கள்? இந்தச் சிநேகம் பயனற்றதாயிற்றே? சிரமமும் பயனற்றது. இந்தக் குழந்தை கண்களால் பார்க்கிறதுமில்லை; செவிகளால் கேட்கிறதுமில்லை. ஏன் இதைத் தள்ளிவிட்டு வேகமாக வீடு செல்லாமலிருக்கிறீர்கள்? மோக்ஷ தர்மமுள்ளவைகளும் யுக்தியுள்ளவைகளும் மிக்க குரூரமானவைகளுமான வசனங்களால் என்னுலுபதேசிக்கப்பட்ட நீங்கள் வேகமாக உங்கள் உங்கள் வீட்டையே போய் அடையுங்கள். அறிவும் பேரறிவுமுள்ளவனும் புத்தியையும் நல்லறிவையுங்கொடுப்பவனுமான என்னுல் நல்ல வார்த்தை சொல்லப்பட்டீர்கள். மானிடர்களே! திரும்புங்கள். நடந்ததை நினைத்தும் கண்டும் சோகமானது இரண்டு மடங்காகும்" என்று சொல்லிற்று. இவ்விதம் இக்கழுகின் வசனத்தைக் கேட்டபின், மனிதர்கள் திரும்பினர்கள்.

அப்பொழுது, நரியானது வேகமாகவந்து அக்கழுகு

உறங்கி இருப்பதைக்கண்டு "பொன்போன்ற மேனியுள்ளவனும் ஆபரணங்களால் நன்றாக அலங்கரிக்கப்பட்டவனும் பிதுர்க்களுக்குப் பிண்டமளிப்பவனுமான இந்தப்புத்திரனைக் கழுகின் சொல்லால் எப்படி விடுகிறீர்கள்? இறந்த இந்தப் புத்திரனை விடுவதால் சிநேகத்திற்கும் புலம்பலுக்கும் அழுகைக்கும் நிவிருத்தியில்லை; நிச்சயமாகத் தாபமுண்டாகும். ஸ்ருஞ்சயனென்னும் ராஜரிஷியின் பாலகன் காலத்தின் முடிவை அடைந்து மரித்தான்; தர்மத்தில் நிலைபெற்ற நாரத முனிவரால் திரும்பவும் ஜீவித்திருக்கும்படி செய்யப்பட்டான். அவ்வாறே சித்தனோ, முனியோ, தேவதையோ ஒருவனிருக்கலாம். அவன் துன்பமுள்ளவர்களாக இங்கு அழுதுகொண்டிருக்கும் உங்களுக்குத் தயை பண்ணலாம்" என்று சொல்லிற்று. இவ்விதஞ்சொல்லப்பட்ட அவர்கள் புத்திரனிடம் சிநேகமுள்ளவர்களும் சோகத்தால் பிடிக்கப்பட்டவர்களுமாகித் திரும்பினார்கள். அவர்கள் மடியில் புத்திரனின் தலையை வைத்துக்கொண்டு அதிக விஸ்தாரமாக அழத்தொடங்கினார்கள்.

அவர்களின் அழுகைக் குரலைக்கேட்டுக் கழுகு "தர்மராஜனின் செய்கையால் நீண்டதூக்கமென்னும் மரணத்தை அடைவிக்கப்பட்ட சிசுவானது, கண்ணீர் விழுந்து நனைந்ததும் கைகள்பட்டுத் துன்பப்படுத்தப்பட்டதுமாயிருக்கிறது. தவமுள்ளவர்களும் தனமுள்ளவர்களும் பெரிய புத்தியுள்ளவர்களுமாகிய எல்லோரும் மிருத்யுவின் வசத்தை அடைகிறார்கள். இது பிரேதங்களிருக்கும் நகரமாகும். பல்லாயிரம் பாலர்களையும் பல்லாயிரம் கிழவர்களையும் எப்பொழுதும் இங்குத் தள்ளிவிட்டுப் பந்துக்கள் பூதலத்தில் பகலும் இரவும் துக்கத்துடனிருக்கிறார்கள்.



சோகத்தை விலக்கக் காரணமாகாத பிடிவாதத்தை
வதில் பயனில்லை. இந்தக் குழந்தைக்கு இப்பொ
திரும்பவும் பிழைப்பேது? நரியின் வசனத்தால்
குழந்தை திரும்பவும் உயிரை அடையமாட்டாது. ம
சரீரத்தை விட்டதற்குத் திரும்பவும் அச்சரீரம்
ஆது. பலநூறு நரிகளாலும் இந்தக் குழந்தையை
நூறு வருஷங்களிலும் சரீரத்தைக் கொடுத்துப் பிழை
படி செய்யமுடியாது. ஒருசமயம், ருத்ரராவது
மண்யராவது பிரம்மாவாவது விஷ்ணுவாவது இக்கு
பின் பொருட்டு வரமளிப்பார்களாகில் அப்பொழு
குழந்தை பிழைக்கக்கூடும். கண்ணீர்விடுவதாலும்
மூச்சு விடுவதாலும் நீண்ட அழுகையாலும் இது திரு
ஜீவனை அடையாது. இவ்வுலகில் நானும் நரியும்
தைக்குப் பந்துக்களான நீங்களும் ஆகிய யாவரு
தர்மங்களைத் துணையாகக்கொண்டு பரலோகத்
போகும் வழியில் சென்றுகொண்டிருக்கிறோம். அ
வன், அப்ரியத்தையும் குரூரத்தையும் பிறர்களுக்கு
சத்தையும் அதர்மத்தையும் பொய்யையும் தூரத்தி
வேண்டும். நீங்கள் தர்மத்தையும் ஸத்யத்தையும்
தையும் நியாயம் தவறாமையையும் பிராணிகளிட
தயையையும் கோணலில்லாமலிருப்பதையும் வஞ்ச
யிருப்பதையும் முயற்சியுடன் தேடுங்கள். தாயும்
பந்துக்களும் அப்படியே சிநேகிதர்களும் ஜீவிக்கு
முயற்சியைச் செய்யாதவர்களுக்குத் தர்மம் கெடும்
கண்களால் பார்க்கவில்லையோ எவ்விதத்திலும்
யில்லையோ அவனது நிலைமை முடிவுபெற்றதென்
யிருக்கும்பொழுது, அழுதுகொண்டு என்
போகிறீர்கள்?" என்று சொல்லிற்று. இவ்விதஞ்

CamScanner

சோகத்தை விலக்கக் காரணமாகாத பிடிவாதத்தை அடைவதில் பயனில்லை. இந்தக் குழந்தைக்கு இப்பொழுது திரும்பவும் பிழைப்பேது? நரியின் வசனத்தால் இந்தக் குழந்தை திரும்பவும் உயிரை அடையமாட்டாது. மரித்துச் சரீரத்தை விட்டதற்குத் திரும்பவும் அச்சரீரம் கிடைக்காது. பலநூறு நரிகளாலும் இந்தக் குழந்தையைப் பல நூறு வருஷங்களிலும் சரீரத்தைக் கொடுத்துப் பிழைக்கும்படி செய்யமுடியாது. ஒருசமயம், ருத்ராாவது சுப்ரம் மண்யராவது பிரம்மாவாவது விஷ்ணுவாவது இக்குழந்தையின் பொருட்டு வரமளிப்பார்களாகில் அப்பொழுது இக்குழந்தை பிழைக்கக்கூடும். கண்ணீர்விடுவதாலும் பெருமூச்சு விடுவதாலும் நீண்ட அழுகையாலும் இது திரும்பவும் ஜீவனை அடையாது. இவ்வுலகில் நானும் நரியும் இக்குழந்தைக்குப் பந்துக்களான நீங்களும் ஆகிய யாவரும் தர்மாதர்மங்களைத் துணையாகக்கொண்டு பரலோகத்துக்குப் போகும் வழியில் சென்றுகொண்டிருக்கிறோம். அறிவுள்ளவன், அப்ரியத்தையும் குரூரத்தையும் பிறர்களுக்குத் துரோகத்தையும் அதர்மத்தையும்:பொய்யையும் தூரத்தில் விலக்க வேண்டும். நீங்கள் தர்மத்தையும் ஸத்யத்தையும் சாஸ்திரத்தையும் நியாயம் தவறாமையையும் பிராணிகளிடம் பெரியதயையையும் கோணலில்லாமலிருப்பதையும் வஞ்சகமில்லாமலிருப்பதையும் முயற்சியுடன் தேடுங்கள். தாயும் தந்தையும் பந்துக்களும் அப்படியே சினேகிதர்களும் ஜீவிக்கும்படியான முயற்சியைச் செய்யாதவர்களுக்குத் தர்மம் கெடும். எவன் கண்களால் பார்க்கவில்லையோ எவ்விதத்திலும் அசையவில்லையோ அவனது நிலைமை முடிவுபெற்றதென்று நிச்சயமிருக்கும்பொழுது, அழுதுகொண்டு என்னசெய்யப் போகிறீர்கள்?" என்று சொல்லிற்று. இவ்விதஞ் சொல்லக்

கேட்ட அந்தப்பந்துக்கள் புத்திரனைப் பூமியில் போட்டு விட்டுச் சோகத்தால் பீடிக்கப்பட்டவர்களும் புத்திரனிட முள்ள ஸ்னேகத்தால் எரிக்கப்படுகிறவர்களுமாகி வீடு செல்லப் புறப்பட்டார்கள்.

நரி "எல்லாப் பிராணிகளையும் நசிக்கச்செய்யும் இம் மானிடலோகம் குரூரமானது. இவ்வுலகில் நண்பர்களையும் உறவினர்களையும் விட்டுப் பிரிய வேண்டியதாயிருக்கிறது. உயிரோடிருக்குங்காலமும் கொஞ்சம். பல கபடங்களுள் ளதும் பொய்புள்ளதும் அதிகமாகப்பேசுவதும் அப்ரி யத்தைப் பேசுவதுமான இவ்வுலகத்தையும் துக்கசோகங் களை வளரச்செய்யும் விஷயத்தையும் பார்க்கையில், ஒரு முகூர்த்தமும் இம் மானிடஉலகம் எனக்குப் பிரியமாக இருக்கவில்லை. அந்தோ! சீ! கழுகின் வாக்கியத்தால் புத்தியில்லாதவர்களைப்போலப் புத்திரனிடமுள்ள ஸ்னே கத்தைத் தள்ளிவிட்டுச் ஸ்னேகமற்றவர்களாக எப்படிப் போகிறீர்கள்? புத்திரசோகத்தால் எரிக்கப்பட்ட மானிடர் களே! பாவியும் புத்தியில்லாததுமான கழுகின் சொல்லைக் கேட்டுத் திரும்புகிறீர்களே. சுகத்திற்குப்பின் துக்கமும் துக்கத்திற்குப்பின் சுகமும் உண்டு. சுகதுக்கங்களால் சூழப்பட்ட உலகத்தில் முடிவடையாத சுகமென்பதில்லை. அழகுள்ளவனும் குலத்தை விளங்கச்செய்கிறவனும் பாலகனுமான இந்தப் புத்திரனைப் பூதலத்தில் தள்ளிவிட்டு எங்கே போகிறீர்கள்? மூடர்களே! அழகும் யௌவன மும் நிறைந்து லக்ஷ்மியுடன் விளங்குகிறவன்போன்ற பாலகனை உயிரோடிருப்பவனாகவே நான் மனத்தால் பார்க்கிறேன். இதில் சந்தேகமில்லை. மானிடர்களே! இந்தப் பாலனின் நாசத்தால் சுகத்தை அடையவேமாட்

டீர்கள். புத்திரசோகத்தால் மிகவும் தபிக்கப்பட்ட உங்களுக்கு இப்பொழுது மரிப்பது உசிதம். சுகம் வரலாமென்று நினைத்து நீங்களாகவே சுகத்தை உறுதியாகக் கருதிக் கொண்டு அல்பபுத்தியுள்ளவர்களைப்போல இவனைத் தள்ளிவிட்டு இப்பொழுது எங்கே போகப்போகிறீர்கள்?" என்று சொல்லிற்று. அவ்விதம் தர்மத்திற்கு விரோதமாகப் பொய்யான பிரியத்தைச் சொல்லுவதும் மயானத்தில் வஸிப்பதும் தன் காரியத்திற்குவேண்டி எப்பொழுதும் ராத்ரியைத்தேடுகிறதுமான நரியினுல் அமிர்தத்திற்கொப்பான வசனங்களால் அவ்விடத்தில் தடுக்கப்பட்ட பந்து ஜனங்கள் உடனே நடுவிலிருக்கும் நிலைமையை அடையும்படி செய்யப்பட்டார்கள்.

கழுகு "இந்த அரணியப்பிரதேசமானது பிரேதங்களால் சூழப்பட்டதும் யக்ஷர்களாலும் ராக்ஷஸர்களாலும் அடையப்பட்டதும் குரூரமானதும் கோட்டான்களால் சப்திக்கப்பட்டதும் பயங்கரமானதும் மிக்ககோரமானதும் கறுத்தமேகம் போன்ற நிறமுள்ளதுமாயிருக்கிறது. இதில் பிணத்தைப் போட்டு விட்டுப் பிரேதத்திற்குச் செய்ய வேண்டிய காரியங்களைச் செய்யுங்கள். சூரியன் அஸ்தமயத்தை அடையுமுன் திக்குக்கள் பிரகாசமாயிருக்கும் பொழுதே இதைத்தள்ளிவிட்டுப் பிரேதத்திற்குள்ள காரியங்களைச் செய்யுங்கள். பருந்துகள் கொடுமையாகக் கத்துகின்றன. நரிகள் பயங்கரமாக ஊளையிடுகின்றன. சிங்கங்கள் கர்ச்சிக்கின்றன. சூரியனும் அஸ்தமயத்தை அடைகிறுன். கறுத்ததான சிதையின் புகையால் மரங்கள் நன்றாக இருட்டுகின்றன. மயானத்திலுள்ள தேவதைகளும் ஆகாரமில்லாதவைகளாய்க் கூச்சலிடுகின்றன. மிக்ககுரூரமான

இவ்விடத்திலுள்ளவர்களும் விகாரமான சரீரமுள்ளவர்களும் விகாரமுள்ளவர்களும் மாம்ஸத்தைப் புஜிப்பவர்களுமான அனைவரும் உங்களை மிகவும் பயப்படும்படி செய்வார்கள். இந்தக் காடு பயங்கரமானது. இப்பொழுது பயமுண்டாகும். கட்டைபோன்றதான இந்தப்பிணத்தைப் போடுங்கள். நரியின் வார்த்தையை விடுங்கள். பயனற்றனவும் பொய்யுமான நரியின் வார்த்தைகளைப் புத்தியிழந்து கேட்பீர்களானல் அப்பொழுது யாவரும் நாசமடைவீர்கள்" என்று சொல்லிற்று.

நரி "நில்லுங்கள்; உங்களுக்குப் பயம் வேண்டாம். எவ்வளவுவரையில் சூரியன் பிரகாசிக்கிறானே அவ்வளவுவரையில் இந்தப்புத்திரனிடம் சினேகத்தால் வெறுப்பில்லாமலிருங்கள். இஷ்டம்போல அழுதுகொண்டு நம்பிக்கையுள்ளவர்களாக நெடுநேரம் சினேகத்துடன் பாருங்கள். குரூரமான இந்த அரணியப்பிரதேசத்தில் உங்களுக்குப் பயமுண்டாகுமென்பதில்லை. இந்த அரணியப்பிரதேசமானது அழகுள்ளதும் பிதுர்க்களுக்கு முடிவில் இடமுமாயிருக்கிறது. சூரியனுள்ளவரையிலிருக்கலாம். மாம்ஸத்தைத் தின்னும் கழுகின் வார்த்தைகளால் உங்களுக்காவதென்ன? விவேகமற்றவர்களாய்க் குரூரமானதும் பரபரப்புள்ளதுமான கழுகின் வசனங்களைக் கேட்பீர்களாகில் உங்களுக்குப் புத்திரனில்லாமற் போவான்" என்று சொல்லிற்று.

அஸ்தமயமானல் கழுகு வராது. இரவில் நரி இருக்கும். ஆகையால், பசியுடன் கூடிய அந்தக்கழுகும் நரியும் இறந்தவனைச் சேர்ந்த அந்த ஜனங்களைப் பார்த்து இவ்விதம்

சொல்லின. தம்தம் காரியத்தில் நல்ல உறுதியுள்ள அந்தக் கழுகும் நரியும் பசியாலும் தாகத்தாலும் மிக்க சிரமமுற்ற வைகளாய்ச் சாஸ்திரத்தைத் தொடர்ந்து பேசின. அறிவில் சாமர்த்தியமுள்ள அந்த மிருக பக்ஷிகளின் அமிர்தம் போன்ற அந்த வசனங்களால் அவர்கள் சற்று இருக்கவும் சற்றுப்போகவுஞ் செய்தார்கள்; அப்பொழுது சோகத் தாலும் தீனத்தனத்தாலும் பிடிக்கப்பட்டு அழுதுகொண்டு நின்றூர்கள். சுயகாரியத்தில் சாமர்த்தியமுள்ள அவ்விரண் டினுலும் அவர்கள் சாமர்த்தியமாகப் பிரமிக்கும்படி செய்யப் பட்டார்கள். அவ்விதம் விவாதப்படுகின்றவைகளும் அறிவுள்ளவைகளுமான அந்தக் கழுகு நரி இரண்டுக்கும் அங்குநிற்கும் அந்தப் பந்துக்களுக்கும் எதிரில் சங்கரர் வந்தார். பார்வதிதேவியால் தூண்டப்பட்டவரும் அருளால் நனைந்த கண்ணுள்ளவரும் தேவருமான சங்கரர் உடனே அந்த மனிதர்களை நோக்கி, "நான் வரமளிக்கிறவனுயிருக் கிறேன்" என்று சொன்னுர். துக்கமுள்ள அந்தஜனங்கள் வணங்கி நின்றுகொண்டு, "ஒரே புத்திரனுயிருப்பவனை இழந்தவர்களும் அவன் ஜீவிக்கவேண்டுமென்று விரும்புகிற வர்களுமான எங்கள் அனைவருக்கும், புத்திரனுக்கு ஜீவனை யளித்து, வாழ்வைக் கொடுக்கவேண்டும்" என்ற இந்த வசனத்தைச் சொன்னுர்கள். இவ்விதஞ்சொல்லக்கேட்ட அந்தப்பகவான், நீர் நிரம்பிய கையினுல் அந்தக் குமாரனுக்கு உயிரையும் நூறுவருஷம் ஆயுளையும் அளித்தார். அப்படியே, எல்லாப்பிராணிகளுக்கும் ஹிதத்தைச் செய்வதில் பிரிய முள்ளவரான பகவான் பினுகியானவர் நரிக்கும் கழுகுக்கும் பசியைப் போக்குவதான வரமளித்தார். பிறகு, அவர்கள் க்ஷேமத்துடனும் சந்தோஷத்துடனும் அந்தச் சங்கரரை நமஸ்கரித்துவிட்டுச் செய்யவேண்டியதைச் செய்துகொண்ட

வர்களாகி மிக்க சந்தோஷத்துடன் புறப்பட்டார்கள். தொடர்ந்த வெறுப்பில்லாமையாலும் உறுதியான நிச்சயத்தாலும் தேவதேவரின் அனுக்கிரகத்தாலும் சீக்கிரமாகப் பயன் அடையப்படும். தெய்வத்தின் சேர்க்கையையும் பந்துக்களின் நிச்சயத்தையும் பார். எளிமையுற்று அழுது கொண்டிருப்பவர்களுக்குக் கண்ணீரானது துடைக்கப்பட்டது. சிறிதுநேரம் நிச்சயத்துடன் தேடியதால் துக்கப்பட்டவர்கள் சங்கரரிடமிருந்து அனுக்கிரகம்பெற்று சுகமடைந்தார்கள்; அவர்கள் சங்கரரின் அனுக்கிரகத்தால் திரும்பவும் புத்திரன் பிழைத்திருப்பதில் மிக்க சந்தோஷமுள்ளவர்களும் ஆச்சரியமுள்ளவர்களுமானார்கள். அவர்கள் குழந்தையிடமுண்டான சோகத்தைத் தள்ளிவிட்டுச் சந்தோஷமுள்ள மனமுள்ளவர்களாய்ச் சென்றார்கள்.

---

# VII. விருந்தோ

ஒரு காட்டில் கெட்ட நடக்கையு
ான்றவனும் பயங்கரனும் அவ
ருத்த அங்கமுள்ளவனும் தலையில்
ளில் கவனமுள்ளவனும் நீண்ட மு
றிய பாதமுள்ளவனும் பெரிய முகமு
மோவாய்க்கட்டையுள்ளவனுமான ஒ
வேடன் சஞ்சரித்துக்கொண்டிருந்தா
ஸ்நேகிதன் ஒருவனுமில்லை; சம்பந்தி
களுமில்லை. அவன் கொடிய செ
னால் விலக்கப்பட்டனன். பாவமா
ன அறிவுள்ளவர்கள் தூரத்தில் விலு
தன்னையே நம்புகிறதில்லையோ அவன்
விதம் ஹிதமாக இருப்பான்? குரூர
புள்ளவர்களும் பிராணிகளின் உயிரை
ிருக்கிற மனிதர்கள் பாம்புகள் போ
பப்படத்தக்கவர்களாவார்கள். அ
ிடித்துக்கொண்டு அரணியத்திலுள்ள
அவைகளை விற்று ஜீவனம் செய்துகொ
புத்தியுள்ள அவ்வேடனுக்கு இவ்வித
லஞ்சென்றது. அவன் அதர்மத்
மில்லை. மனைவியுடன் கூடியவனும்
அறிவற்றவனுமான அந்த வேடனு
விருப்பமாக இருக்கவில்லை.

பிறகு, ஒரு ஸமயத்தில் அ

# VII. விருந்தோம்பல்.

ஒரு காட்டில் கெட்ட நடக்கையுள்ளவனும் காலன் போன்றவனும் பயங்கரனும் அண்டங்காக்கைபோலக் கறுத்த அங்கமுள்ளவனும் தயையில்லாதவனும் பாவங்களில் கவனமுள்ளவனும் நீண்ட முழங்காலுள்ளவனும் சிறிய பாதமுள்ளவனும் பெரிய முகமுள்ளவனும் பெரிய மோவாய்க்கட்டையுள்ளவனுமான ஒரு பறவைபிடிக்கும் வேடன் சஞ்சரித்துக்கொண்டிருந்தான். அவனுக்குச் சிநேகிதன் ஒருவனுமில்லை; சம்பந்தியுமில்லை; உறவினர்களுமில்லை. அவன் கொடிய செய்கையால் பந்துக்களால் விலக்கப்பட்டனன். பாவமான நடையுள்ள மனிதனை அறிவுள்ளவர்கள் தூரத்தில் விலக்கவேண்டும். எவன் தன்னையே நம்புகிறதில்லையோ அவன் மற்றவனுக்கு எவ்விதம் ஹிதமாக இருப்பான்? குரூரர்களும் கெட்ட புத்தியுள்ளவர்களும் பிராணிகளின் உயிரைக் கவர்கிறவர்களுமாயிருக்கிற மனிதர்கள் பாம்புகள் போலப் பிராணிகளுக்குப் பயப்படத்தக்கவர்களாவார்கள். அந்த வேடன் வலையை எடுத்துக்கொண்டு அரணியத்திலுள்ள பக்ஷிகளைக்கொன்று அவைகளை விற்று ஜீவனம் செய்துகொண்டிருந்தான். கெட்ட புத்தியுள்ள அவ்வேடனுக்கு இவ்விதமான நடையில் நெடுங்காலஞ்சென்றது. அவன் அதர்மத்தை அறிந்துகொள்ளவுமில்லை. மனைவியுடன் கூடியவனும் நல்லூழின்மையால் அறிவற்றவனுமான அந்த வேடனுக்கு வேறு சீவனம் விருப்பமாக இருக்கவில்லை.

பிறகு, ஒரு ஸமயத்தில் அவன் காட்டிலிருக்கும்



CamScanner

பொழுது அங்குள்ள மரங்களைக் கீழே தள்ளுவது போன்றதும் மிகப்பெரியதுமான சுழல்காற்று நாற்புறத்திலு முண்டாயிற்று. ஆகாயமானது ஒரு முகூர்த்தத்தில் கப்பற் கூட்டத்தால் நிறைந்த கடல்போல மேகங்களால் நிறைந்ததும் மின்னல் கூட்டங்களால் அலங்கரிக்கப் பட்டதுமாயிற்று. மழை பெய்விக்கத் தொடங்கிய இந்திரன் ஜலத்தால் க்ஷணத்தில் பூமியை நிரம்பச்செய் தான். பிறகு, உலகம் மழையால் கஷ்டப்படும்பொழுது, குளிரால் துன்பப்பட்டவனும் அறிவை இழந்தவனும் துன்பமுள்ள மனத்துடன் அவ்வனமுழுமையும் சுற்று கிறவனும் பக்ஷியைக் கொல்பவனுமாகிய அவன் பள்ளத் தையும் மேட்டையும் அறியவேயில்லை. அந்த அரணியத் தின் வழியானது ஜலத்தின் பிரவாகத்தால் நிறைந்ததா யிற்று. பக்ஷிகள் மழையின் வேகத்தால் அடிக்கப்பட்டு மரத்தில் மறைந்துகொண்டிருந்தன. வனத்தில் வசிக்கும் மான்களும் சிங்கங்களும் பன்றிகளும் அந்த அரணியத்தி லிருக்கும் மற்றப்பக்ஷிகளும் பெரிய காற்றினாலும் மழையி னாலும் உண்டான பயத்தால் துன்பப்பட்டவைகளும் பசியால் பீடிக்கப்பட்டவைகளுமாகிச் சோர்வடைந்து வனத் தில் சுற்றின.

அந்த வேடனோ, குளிரால் அலைக்கப்பட்ட அங்கங் களுடன், நில்லாமல் சென்றுகொண்டேயிருந்தான்; குளி ரால் துன்பமடைந்து பூமியில் விழுந்திருக்கும் ஒரு பெண் புறுவைக் கண்டான். துன்பமுள்ளவனுயிருந்தும், பாவ புத்தியுள்ள அவ்வேடன், அந்தப் பெண்புறுவைத் தன் கூட்டில் எடுத்துப் போட்டுக்கொண்டான்; தான் துக்கத்தால் பீடிக்கப்பட்டவனுயிருந்தும் பிறருக்குத் துக்

தத்தையே செய்தான். பாவபுத்தியுள்ள அவன், பாவத்தைச் செய்யும் சுபாவமுள்ளவனுகையால், பாவத்தையே செய்தான். அவன், மரக்கூட்டங்களுள் மேகம்போலக் கறுத்ததும் நிழலையும் இடத்தையும் கனிகளையும் விரும்பும் பறவைக்கூட்டங்களால் அடுக்கப்படுவதுமான ஒரு பெரிய மரத்தைக் கண்டான். அம்மரமானது சத்புருஷனைப் போலப் பிறருக்கு உபகாரத்தின் பொருட்டே பிரம்மதேவரால் உண்டு பண்ணப்பட்டது. பிறகு, ஆகாயமானது மலர்ந்த ஆம்பல் புஷ்பங்களுடன் கூடிய ஜலமுள்ள பெரிய குளம்போல க்ஷணத்திலேயே சுத்தமான நக்ஷத்திரங்களுள்ளதாயிற்று. புஷ்பங்கள்போன்ற உருவமுள்ள நக்ஷத்திரங்களுடன்கூடிய ஆகாயமானது சிறிது அழுக்கற்றதாயிற்று. மேகங்களால் விடப்பட்ட ஆகாயத்தைக் கண்டபின், குளிரால் துன்பப்படுகிறவனும் மிகக்கெட்ட புத்தியுள்ளவனுமான வேடன், திக்குக்களையும் சமயத்தையும் கவனித்துப் பார்த்தான். அவ்விடத்திலிருந்து கிராமமிருக்குமிடம் தூரமுள்ளதென்று அறிந்தவனுகையால், அவன் அவ்விரவு முழுமையும் அந்த மரத்தினடியில் வசிக்கவேண்டுமென்ற எண்ணமுள்ளவனுனன். பிறகு, அஞ்சலியுடன் நமஸ்காரஞ்செய்து அந்தப்பெரிய மரத்தை நோக்கி, "இதிலுள்ள தெய்வங்களைச் சரணமடைகிறேன்" என்ற வசனத்தைச் சொன்னுன். பிறகு, பக்ஷிகளைக்கொல்லும் அவ்வேடன் பெரிய துக்கத்துடன் பூமியில் இலைகளைப் பரப்பிக் கல்லில் தலையைவைத்துக்கொண்டு உறங்கத் தொடங்கினுன்.

அந்த மரத்தின்கிளையில் விசித்திரமான இறகுள்ள ஒரு புறுவானது இனத்துடன்கூடி நெடுங்காலமாக வசித்துக்

கொண்டிருந்தது. இரை தேடவேண்டிக் காலையில்சென்ற அதன் பெட்டையானது வரவில்லை. இரவு வந்ததைக்கண்டு அந்தப் பக்ஷியானது வருத்தமடைந்தது. 'பெரியகாற்றும் மழையுமாயிருந்ததே; என் காதலி வரவில்லையே; இன்னும் அவள் திரும்பாமலிருப்பதற்கு என்னகாரணமிருக்குமோ? கானகத்தில் என் அன்புள்ள மனைவி க்ஷேமமாயிருப்பளா? அவளில்லாத இந்த எனது வீடு இப்பொழுது சூன்ய மாயிருக்கிறதே? இல்லறத்திலிருப்பவனுடைய வீடானது, நான்குபுறத்திலும் புத்திரர்களாலும் பேரர்களாலும் மருமக்களாலும் வேலைக்காரர்களாலும் நிறைந்திருந்தாலும், மனைவியில்லாமலிருந்தால் சூன்யமாகவேயிருக்கும். அறிந்தவர்கள் வீட்டை வீடென்று சொல்லவில்லை. வீட்டிற்குடையவளான மனைவியே வீடென்று சொல்லப் படுகிறாள். மனையாளில்லாத வீடானது அரணியத்திற் கொப்பானதாகச் சொல்லப்படுகிறது. சிவந்த கடைக் கண்களுள்ளவளும் பலவர்ணமான அங்கங்களுள்ளவளும் இனிமையான குரலுள்ளவளுமான அந்த என்னுடைய மனைவி இப்பொழுது வராவிட்டால் எனக்கு உயிரால் பயனில்லை. நல்ல விரதமுள்ள அவள், நான் உண்ணா விட்டால் உண்பதில்லை; நான் ஸ்நானஞ் செய்யா விட்டால் ஸ்நானஞ் செய்கிறதில்லை; நான் நில்லா விட்டால் நிற்பதில்லை; நான் படுத்தபின் அவள் படுப்பாள்; நான் சந்தோஷமுள்ளவனாயிருந்தால் அவள் சந்தோஷ முள்ளவளாயிருப்பாள்; நான் துக்கமுள்ளவனானால் அவள் துக்கமுள்ளவளாயிருப்பாள்; நான் வெளியிற் செல்லும் பொழுது வாடியமுகமுள்ளவளாயிருப்பாள்; நான் கோபங் கொண்டால் பிரியமாகப் பேசுவாள். பதிவிரதைகளின் தர்மமுள்ளவளும் சாதுவுமான அவள் உயிரினும் மிக

மேலானவள். எந்தமனிதனுக்கு அவ்விதமான மனைவி யிருக்கிறளோ அந்த மனிதன் உலகில் பாக்கியம் பெற்ற வன். நான் சிரமத்தையும் பசியால் துன்பத்தையும் அடைந் தால், தவமும் ஆசையும் உறுதியும் பக்தியும் சிநேக மும் கிர்த்தியுமுள்ளவளான அவளன்றோ அறிவாள். மரத் தினடியிலும் எவனுக்குப் பாரியையிருக்கிறளோ அவ னுக்கு அது வீடாகும். பாரியையில்லாதது மாடியாயிருந் தாலும் காடாகுமென்பது நிச்சயம். புருஷனுக்கு அறம் பொருள் இன்பங்களுக்குரிய காலங்களில் பாரியை சகாய மாக இருப்பாள். இவன் வேறு தேசத்திற்குச் செல்லும் பொழுதும் அவள்தான் நம்பிக்கையை உண்டுபண்ணு கிறவள். இவ்வுலகில் புருஷனுக்குப் பாரியை யென்பவள் தான், உத்தமமான பொருளென்று கூறப்படுகிறள்; சகாயமில்லாத மனிதனுக்கு இவ்வுலகில் உலக நடைக்குச் சகாயமாகவிருப்பாள்; துன்பத்தை அடைந்தவனுக்கும் பிணியால் பீடிக்கப்பட்டவனுக்கும் எப்பொழுதும் சகாயமாக இருப்பாள். துன்பமுள்ள மனிதனுக்குப் பாரியைக்கொப்பான மித்திரனில்லை; பாரியைக்கொப் பான மருந்தில்லை; பாரியைக்கொப்பான பந்துவில்லை; பாரியைக்கொப்பான கதியில்லை. உலகத்தில் தர்மங்களைச் சேர்க்கும் விஷயத்தில் பாரியைக்கொப்பான சகாய மில்லை. எவனுடைய வீட்டில் நற்குணமுள்ளவளும் பிரி யத்தைப் பேசுகிறவளுமான பாரியை இல்லையோ அவன் அரணியஞ் செல்லவேண்டும்; அரணியம் எவ்விதமோ அவ்விதமே அவனது வீடு' என்று புலம்பிற்று.

இவ்விதம் புலம்புகிறதும் துன்பமுள்ளதுமான அந் தப் பக்ஷியின் வசனத்தை, அப்பொழுது வேடனல் பிடிக்

கப்பட்ட பெண்புருவானது கேட்டு, 'அந்தோ! என்னுடைய பிரியமுள்ள பதியானவர், இல்லாதவைகளோ இருப்பவைகளோ என்னைப்பற்றி இவ்விதமான குணங்களைச் சொல்லுகிறார். ஆதலால், நான் மிகவும் நல்ல பாக்கியம் பெற்றவள். எந்த ஸ்திரீயின்பதி ஸந்தோஷமுள்ளவனாயிருக்கிறானோ அவளன்றோ ஸ்திரீயென்று அறியத்தக்கவள். பதி ஸந்தோஷமுள்ளவனானால், ஸ்திரீகளுக்கு எல்லாத் தேவதைகளும் ஸந்தோஷமுள்ளவர்களாகிறார்கள். பதியன்றோ பெரிய சரணமாகிறான். இஃது அக்நியை ஸாக்ஷியாகக்கொண்டதுமாகும். எந்த ஸ்திரீயின் பதி ஸந்தோஷமடையவில்லையோ அவள் காட்டுத்தீயால் எரிக்கப்பட்டதும் பூங்கொத்துடன் கூடியதுமான கொடிபோலச் சாம்பலாகிறாள்' என்று சிந்தித்துக்கொண்டு, துக்கப்படும் பதியை நோக்கி, "கணவனே! இப்பொழுது உனக்கு க்ஷேமத்தைச் சொல்லுகிறேன். அதைக்கேட்டு அவ்விதஞ் செய். விசேஷமாகச் சரணமென்று வந்தவர்களைக் காப்பாற்று. இதோ பறவைபிடிக்கும் வேடன் உன்னிடத்திற்கு வந்து குளிராலும் பசியாலும் துன்பத்துடன் படுத்திருக்கிறான். இவனுக்குப் பூஜைசெய். பிராம்மணனைக் கொல்லுகிறவனுக்கும் உலகத்திற்கு மாதாவான பசுவைக் கொல்லுகிறவனுக்கும் சரணமென்று வந்தவனைக் கொல்லுகிறவனுக்கும் பாதகம் சமானமாகும். ஜாதியின் தர்மப்படி புறாக்களுக்குள்ள பிழைப்பு நமக்கு விதிக்கப்பட்டிருக்கிறது. உன்னைப் போன்ற புத்தியுள்ளவன் எப்பொழுதும் அதனை அனுசரிப்பது நியாயமாகும். இல்லறத்திலிருக்கும் எவன் சக்திக்குத் தக்கபடி தர்மத்தை அனுசரித்திருக்கிறானோ அவன் இறந்தபின் அழிவில்லாத உலகங்களை அடைகிறானென்று கேள்விப்பட்டிருக்கிறோம். அப்படிப்பட்ட நீ

னெப்பொழுது புத்திரனுள்ளவனும் பரம்பரையுள்ளவனுமா யிருக்கிறாய். நீ உன் சரீரத்தில் கருணையைத் தள்ளிவிட்டு அறம் பொருள்களைப் பற்றிக்கொண்டு, இந்த மனிதனுடைய மனம் எவ்விதம் ஸந்தோஷப்படுமோ அவ்விதம் இவன் பொருட்டுப் பூஜைசெய். நீ என்விஷயமாகத் தாபத்தை அடையாதே. சரீரம் நடைபெறத்தக்க ஜீவனத்திற்கு வேண்டி வேறுதாரத்தை அடைவாய்" என்று சொல்லிற்று.

இவ்விதம் கூட்டிலிருப்பதும் தவமுள்ளதும் மிகவும் துக்கத்துடன் கூடியதுமான அந்தப் பெண்பக்ஷியானது இந்த வார்த்தையைச் சொல்லிவிட்டுத் தலையைத் தூக்கிப் பதியை நன்றாகப் பார்த்தது. தர்மத்துடனும் யுக்தியுடனும் கூடியதான மனைவியின் வசனத்தைக் கேட்டு, அந்த ஆண் புறவானது, சந்தோஷத்துடன் கூடியதும் பரபரப்புள்ள கண்களுள்ளதுமாகி, வேடனைக் கண்டு பக்ஷிகளைக்கொன்று பிழைக்கும் அவனை விதியில் காணப்படும் செய்கையால் முயற்சியுடன் பூஜித்தது; "உன் வரவு நல்வரவாகுக. உனக்கு நான் என்ன செய்யவேண்டும்? நீ தாபத்தை அடையவேண்டாம். நீ உன் வீட்டில் இருக்கிறாய். நீ சீக்கிரம் சொல்லு. நான் என்ன செய்யவேண்டும்? நீ எதை விரும்புகிறாய்? சினேகத்துடன் உன்னைக் கேட்கிறேன். நீ எங்களிடம் சரண மென்று வந்தவனன்றோ? வீட்டிற்கு வந்தவன் பகைவனானாலும் அவனுக்கு ஆதித்யஞ் செய்யவேண்டுவது நியாயம். மரமானது வெட்டுவதற்காகவந்த மனிதனிடத் திலும் நிழலைக் குறையச் செய்கிறதில்லை. ஐந்து யஜ்ஞங் களையும் செய்யும் கிருகஸ்தனுயிருப்பவன், சரணமென்று வந்தவனுக்கு விசேஷ முயற்சியுடன் ஆதித்யத்தைச் செய்ய வேண்டுமென்றோ? கிருகஸ்தாசிரமத்திலிருக்கும்

எவன் அவிவேகத்தால் ஐந்துயஜ்ஞங்களையும் செய்யாம லிருக்கிறானோ அவனுக்குத் தர்மப்படி இவ்வுலகமும் மேலுலகமுமில்லை. ஆகையால், நம்பிக்கையுள்ளவனாகி என்னிடஞ் சொல். நீ வாயினால் எதைச் சொல்லுகிறாயோ அதையெல்லாம் நான் செய்கிறேன். நீ சோகத்தில் மனத்தைச் செலுத்தாதே" என்று சொல்லிற்று.

அந்தப் பக்ஷியின் அவ்வசனத்தைக் கேட்ட வேடன், "என்னைக் குளிரானது வருத்துகிறது. ரக்ஷையைச் செய்யவேண்டும்" என்று சொன்னான்.

அதனைச் செவியுற்ற பக்ஷியானது, காய்ந்த இலைகளைப் பூதலத்தில் முயற்சியுடன் பரப்பித் தீயைக்கொண்டுவர வேகமாகச் சென்றது; கம்மாளன் வீட்டினருகிற்சென்று தீயையெடுத்துக்கொண்டு வந்தது. பிறகு, அந்தப் பக்ஷியானது காய்ந்த இலைகளில் தீயைப்பிரகாசிக்கும்படி செய்தது. அந்தப் புறா, அத்தீயை நன்றாக ஜ்வலிக்கும்படி மூட்டியபின், சரணாகதனான அந்த வேடனை நோக்கி, "ஒருவிதபயமுமின்றி நல்ல நம்பிக்கையுள்ளவனாக உன் அங்கங்களைக் காய்ச்சிக்கொள்" என்று சொல்லிற்று. அந்த வேடன், "அப்படியே செய்கிறேன்" என்று சொல்லிவிட்டு, அங்கங்களைக் காய்ச்சிக் கொண்டான். பிறகு, தீயினால் உயிர் திரும்பிவந்தவனும் சந்தோஷத்துடன் கூடியவனும் பரபரப்புள்ள கண்ணுள்ளவனுமான வேடன் பக்ஷியை நோக்கி "முறைப்படி உன்னால் கொடுக்கப்படும் ஆகாரத்தையும் விரும்புகிறேன். பசியானது என்னைப் பீடிக்கிறது" என்று சொன்னான்.

அந்தப் பக்ஷியானது அவன் வார்த்தையை அங்கீகரித்துக்கொண்டு, "உன்னுடைய பசியை விலக்கத்தக்கதான செல்வம் எனக்கில்லை. வனத்திலிருக்கும் நாங்கள்

ஒவ்வொரு நாளும் கிடைப்பதைக்கொண்டு ஜீவிக்கிறோம். கானகத்திலுள்ள ரிஷிகளைப்போல நாங்களும் திரவியம் சேர்த்து வைப்பதில்லை. ரிஷிகள், தேவர்கள், மஹாத்மாக்களான பித்ருக்கள் ஆகிய இவர்களிடமிருந்து, அதிதியைப் பூஜிப்பதில் பெரிய தர்மமுண்டென்று நான் கேட்டிருக்கிறேன். நண்பனே! அனுக்கிரகஞ்செய்" என்று சொல்லிச் சிரித்துக்கொண்டே மூன்று தடவை வலம் வந்து அந்த அக்னியில் பிரவேசித்தது.

அக்னியின் நடுவில் பிரவேசித்த பக்ஷியைக்கண்டவுடன் வேடன், 'இஃது என்ன!' என்று மனத்தில் சிந்தை அடைந்தான்; பிறகு 'கஷ்டம்! குரூரனும் தன்செய்கையால் நிந்திக்கப்பட்டவனுமான எனக்கு மிகப்பெரிதும் கோரமுமான அதர்மம் வருமென்பதில் சந்தேகமில்லை' என்று பயந்து பலவிதமாகப் புலம்பினான்; 'பசியால் துன்பப் பட்டிருந்தும், அக்னியில் விழுந்த புருவைக்கண்டு திரும்பவும் புத்தியில்லாதவனும் குரூரனுமான என்னால் இவ்விதம் கொடியகாரியஞ் செய்யப்பட்டது! பூமியில் உயிரோடிருந்தால் எனக்கு எப்பொழுதும் பாதகமே உண்டாகும்' என்று தன்னை நிந்தித்துக்கொண்டான்; 'மிகவும் கெட்ட புத்தியுள்ளவனும் எப்பொழுதும் துன்பம் செய்வதில் உறுதியுள்ளவனுமான என்னை நிந்திக்கவேண்டும். நல்ல காரியத்தைத் தள்ளி விட்டு நான் பறவைகளைப் பிடிக்கும் வேடனானேன். மஹாத்மாவும் தன்னுடைய மாம்ஸத்தை எரிக்கிறதுமான புருவினால் குரூரனும் நிந்தைக்குரிய செய்கையைச் செய்தவனுமான எனக்கு இப்பொழுது ஓர் உபதேசம் செய்யப்பட்டதென்பதில் சந்தேகமில்லை.

நான் புத்திரர்களையும் தாரங்களையும் தள்ளிவிட்டுப் பிரியமான உயிரையும் விடுவேன். இவ்விஷயத்தில் தர்ம முள்ள புருவினால் எனக்குத் தர்மம் உபதேசிக்கப் பட்டிருக்கிறதன்றோ? இதுமுதல் எல்லாப் போகங்களை யும் விலக்கிவிட்டு என் சரீரத்தைக் கோடைக்காலத்தி லுள்ள மிகச்சிறிய குளத்தைப்போல நான் உலரச் செய்வேன். பசியையும் தாகத்தையும் வெயிலையும் பொறுப் பவனும் நரம்புகளால் சுற்றப்பட்டவனும் இளைத்தவனு மாகப் பலவித உபவாஸங்களுடன் பரலோகத்திற்குரிய தர்மத்தைச் செய்வேன். அந்தோ! அதிதிகளின் பூஜை சரீரத்தை அளித்துக் காண்பிக்கப்பட்டது. ஆகையால், தர்மத்தைச் செய்வேன். தர்மமுள்ள உத்தமபக்ஷியினிடம் எவ்வித தர்மம் காணப்பட்டதோ அவ்விததர்மமன்றோ உத்தமமான கதியாகும்' என்று சொன்னான். இவ்விதஞ் சொன்னபிறகு குரூரமான செய்கையுள்ள அந்த வேடன் மஹாப்ரஸ்தானத்தை அடைந்து மிகக்கடுமையான விரதத் துடன் செல்லத் தொடங்கினான்; தடியையும் சலாகையையும் பறவைகளை எடுக்கும் கூட்டையும் தள்ளினான்; அதில் கட்டுப்பட்டிருக்கும் அந்தப் பெண்புறாவையும் அதிலிருந்து எடுத்துவிட்டான்.

வேடன் சென்றதும், அந்தப் பெண்புறா கணவனை நினைத்துத் துயரமுற்றுச் சோகத்தால்வாடி அழுதுகொண்டு "நாதனே! ஒருபொழுதும் உனக்குப் பிரியமல்லாததை நான் நினைக்கவில்லையே. பல புத்திரர்களுள்ளவர்களானாலும் பதியை இழந்த ஸ்திரீகளெல்லாரும் சோகமடைவார்கள். பதியை இழந்து துக்கப்படும் ஸ்திரீ பந்துக்களாலும் விசனப்படத்தக்கவளாகிறாள். நான் உன்னால் அன்பு

பாராட்டப்பட்டவளும் எப்பொழுதும் வெகுமானத்துடன் இனியவைகளும் ஸ்நேகமுள்ளவைகளும் குரூரமின்றி அழகுள்ளவைகளுமான வசனங்களால் பூஜிக்கப்பட்டவளு மாகிறேன். மலைகளின் குகைகளிலும் ஆறுகளிலும் பிரவாகங்களிலும் அழகான மரத்தின் நுனிகளிலும் நான் உன்னுடன் கூடி விளையாடிக்கொண்டிருந்தேன்; ஆகாயத்தில் போகுங்காலத்திலும் நான் உன்னுடன் சுகமாக விளையாடிக் கொண்டிருந்தேன். காந்தனே! முந்தி விளையாடிக்கொண்டி ருந்தேன். என் பிரியமானவனே! அஃது இப்பொழுது எனக்கில்லை. தகப்பன் அளவுள்ளதை அளிப்பான். உடன் பிறந்தவனும் புத்திரனும் அளவுள்ளதை அளிப்பார்கள். அளவில்லாததை அளிக்கும் பதியை எவள் பூஜியாமலிருப் பாள்? பதிக்குச்சரியான நாதனில்லை; பதிக்குச்சரியான சுகமில்லை. ஸ்திரீக்குப் பொருள் எல்லாவற்றையுங்காட்டி லும் பதியே கதியாவான். என்நாதனே! நீ இல்லாமல் இவ்வுலகில் உயிரால் எனக்குப் பயனில்லை. பதிவிரதையான எந்த ஸ்திரீ பதியை இழந்தபின் உயிரோடிருக்கப் பிரியப் படுவாள்?" என்று சொல்லி நன்றாக ஜ்வலிக்கும் அக்கினி யில் பிரவேசித்தது. பிறகு, விசித்திரமான தோள்வளையணிந் ததும், விமானத்திலிருப்பதும், மஹாத்மாக்களான புண்ய சாலிகளால் பூஜிக்கப்படுகிறதும், ஆச்சரியமான மாலைகளையும் ஆடைகளையுந்தரித்ததும், எல்லா ஆபரணங்களாலும் அலங் கரிக்கப்பட்டதும், நூறுகோடி விமானங்களுடன் புண்ணிய மான கர்மங்களைச் செய்தவர்களால் சூழப்பட்டதுமான தன் பதியை அந்தப் பெண்புறா அடைந்தது. வேடன், தான் மேற்கொண்ட தவத்தால் பாபங்கள் நாசமடைந்தவனாகிப் பெரியசித்தியைப் பெற்றான்.

---

# பிழைதிருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 11 | 21 | என்றும் | என்னும் |
| 62 | 9 | இரட்டைகள் ; | இரட்டைகள் , |
| 67 | 17 | கொடுப்பவகிராய | கொடுப்பவராகிய |
| 85 | 3 | மரங்களையெடுதது்ப் | மரங்களையெடுத்துப் |

கடவுள் துணை.

# ஸ்ரீமஹாபாரதக் கதைகள்

## அரும்பதக்குறிப்பு.

| | | | | |
|---|---|---|---|---|
| பக்கம். | 2 | குருகுலவாசம் | — | ஆசிரியர் இருக்குமிடத்தி லிருந்து கற்பது. |
| | | பாண்டித்யம் | — | கல்வித்திறம். |
| | | அனுக்ரஹம் | — | அருள். |
| | | வித்யாபீடம் | — | வித்தை கற்பிக்குமிடம் (வித்தை - கல்வி). |
| ,, | 3 | மடை | — | நீர்பாயும் மடை; மதகு. |
| ,, | 4 | அயோதௌமியர் | — | எஃகு என்னும் உலோகம் போன்ற தந்தங்களை உடைய தௌமியர்; (தௌமியர் - பெயர்). |
| ,, | 5 | ஆசிரமம் | — | முனிவர் உறைவிடம். |
| ,, | 6 | புஷ்டி | — | பருமை; கொழுப்பு. |
| | | ஜீவனம் | — | உயிர்வாழ்தல். |
| ,, | 7 | விரோதம் | — | மாறுபாடு; இங்கே இடையூறு. |
| ,, | 8 | அனுமதி | — | சம்மதம். |
| | | சந்நிதி | — | முன்னிலை; திருமுன்பு. |
| ,, | 9 | சஞ்சாரம் | — | நடமாட்டம். |
| ,, | 10 | அசுவினீதேவர்கள் | — | இரட்டையர்களான தேவ மருத்துவர்கள். |
| | | மந்திரம் | — | சிறந்த எண்ணங்கள்; வேத மந்திரம். |
| | | அடைக்கலம் | — | புகலிடம். |

| | | | |
|---|---|---|---|
| பக்கம். 10 | பக்ஷணம் | — | தின்பண்டம். |
| ,, 12 | போர்வம் | — | மிக்க விருப்பம். |
| | வித்யாப்யாசம் | — | கல்வி கற்றல். |
| ,, 13 | சுமை | — | பாரம். |
| | தொல்லை | — | துன்பம். |
| | உபதேசம் | — | ஞானபோதனை. |
| | ஸர்வஜ்ஞன் | — | முற்றறிவுடையவன். |
| ,, 14 | பிரமசாரி | — | குருகுலத்திலிருந்து வித்தை கற்பவன்; கலியாணமாகாதவன். |
| | ஸமாவர்த்தனம் | — | பிரமசர்ய விரதத்தை முடிக்கும் சடங்கு. |
| | வையகம் | — | உலகம்; இங்கே உலகமக்கள். |
| ,, 15 | க்ஷத்திரியர் | — | க்ஷத்திரியகுலத்தில் பிறந்தவர் |
| ,, 16 | பயணம் | — | யாத்திரை. |
| | அனுஷ்டித்து | — | கைக்கொண்டு. |
| | தனம் | — | பொருள். |
| | தக்ஷிணை | — | குருமுதலிய பெரியோர்க்குக் கொடுக்கும் பொருள். |
| ,, 17 | குண்டலம் | — | காதணி. |
| | சமாராதனை | — | பிராமண போஜனம். |
| ,, 18 | விருஷபம் | — | காளை. |
| | சம்பந்தம் | — | தொடர்பு. |
| | ஆசமனம் | — | உள்ளங்கையில் உழுந்தளவாக நீர் குடித்தல். |
| | ஆசாரம் | — | ஒழுக்கம். |
| ,, 19 | செவ்வையாக | — | நன்றாக |
| | ராஜமஹிஷி | — | அரசன் தேவி. |
| | நாகராஜன் | — | பாம்பரசன். |
| | ஜாக்கிரதை | — | கவனம். |

| | | | |
|---|---|---|---|
| ..க்கம். 20 | அதிதி | — | விருந்தினன். |
| | சிராத்தம் | — | பிதிர்க்களின் பொருட்டுச் சிரத்தையுடன் செய்வது. |
| | தூஷித்தல் | — | பழித்தல். |
| | ஸந்ததி | — | வழித்தோன்றல்; வம்சம். |
| | பிரதிசாபம் | — | பதிலாகச் சபித்துக் கூறும் மொழி. |
| ,, 21 | கூந்தல் | — | பெண்பால் தலைமயிர். |
| | அசுசி | — | சுத்தமின்மை. |
| | பரிகாரம் | — | நீக்கும் வகை; மாற்றும் உபாயம். |
| | வாக்கு | — | சொல். |
| ,, 22 | பௌத்தஸந்யாஸி | — | புத்தமதத்துறவி. |
| | சுயஉருவம் | — | தன்னுடைய வடிவம். |
| | நாகலோகம் | — | பாதலம். |
| ,, 23 | சக்தி | — | ஆற்றல்; வன்மை. |
| | மஹாபுருஷன் | — | சிறந்தபுருஷன். |
| ,, 24 | சிந்தித்தல் | — | எண்ணுதல். |
| | காரியஸித்தி | — | தொடங்கிய காரியம் நிறைவேறுதல். |
| ,, 25 | இடையூறு | — | நடுவில்வரும் தடை; துன்பம். |
| | வரலாறு | — | சரித்திரம். |
| | காலபேதம் | — | காலவேறுபாடு. |
| ,, 26 | அகம்பாவம் | — | கர்வம்; தான் என்ற செருக்கு. |
| | கிருபை | — | கருணை. |
| | அங்கிரஸவம்சம் | — | ஆங்கிரஸ மஹரிஷியின் வழி. |
| | தனுர்வித்தை | — | வில்வித்தை. |
| | மனத்தாங்கல் | — | மனவருத்தம். |
| | பிதாமஹர் | — | தந்தையின் தகப்பனர். |
| | பிரதிகாவலர் | — | அரசப்பிரதிநிதி. |
| ,, 28 | சமர்த்தன் | — | சாமர்த்தியசாலி; வல்லவன். |

| | | | |
|---|---|---|---|
| பக்கம். 28 | லாகவம் | — | இலகுத்தன்மை ; எளிதாக. |
| | அநுபவம் | — | பழக்கம். |
| ,, 29 | விகாரம் | — | அருவருக்கும்தன்மை. |
| | வில்லாளி | — | வில்லைக் கையாள்பவன். |
| ,, 30 | மாவுரி | — | மரப்பட்டை. |
| | கோலம் | — | தோற்றம். |
| ,, 31 | மஹிமை | — | பெருமை. |
| ,, 32 | அங்கீகரித்தல் | — | ஏற்றுக்கொள்ளுதல். |
| | அர்ப்பணம் | — | உரியதாக்குதல் ; கொடுத்தல். |
| | போஷித்தல் | — | ஆதரித்தல். |
| ,, 33 | அர்க்கியம் | — | சோடசஉபசாரங்களில் ஒன்று ; நீரால்செய்யும் உபசாரம். |
| | பாத்யம் | — | கால்கழுவக்கொடுக்கும் நீர். |
| | வாக்குத்தத்தம் | — | உறுதி கூறுதல். |
| ,, 35 | தருணம் | — | சமயம் ; காலம். |
| | ரஃஸ்யம் | — | பிறரறியாமை. |
| | தேஜஸ்வி | — | கீர்த்திவாய்ந்தவன். |
| ,, 36 | யோகசக்தி | — | தகுதியுடைமை. |
| ,, 37 | லக்ஷ்யம் | — | குறி. |
| | சிற்பி | — | சிற்பத்தொழில் வல்லவன். |
| ,, 38 | ஸவ்யஸாசி | — | வலக்கையாலும் இடக்கையாலும் அம்பு தொடுப்பவன் ; அர்ச்சுனன். |
| ,, 39 | அர்த்தசந்திர பாணம் | — | பிறைச்சந்திரன்போன்ற வடிவமுடைய அம்பு. |
| ,, 40 | திருப்தி | — | போதும்என்ற எண்ணம். |
| | பிரயோகம் | — | செலுத்துதல். |
| | ஸம்ஹாரம் | — | அடக்குதல். |

| | | | |
|---|---|---|---|
| கம். | 41 | நியமம் | — முறை. |
| | | பிரதிஜ்ஞை | — உறுதிமொழி. |
| ,, | 42 | திதி | — நாள். |
| | | காட்சிசாலை | — பல பொருள்களைப் பார்வைக்கு வைக்கும் இடம். |
| | | மஞ்சம் | — கட்டில். |
| | | ஸஹாயம் | — உதவி. |
| ,, | 43 | விருது | — வெற்றிச் சின்னம். |
| | | யஜ்ஞோபவீதம் | — பூணூல். |
| | | அங்காரகன் | — செவ்வாய். |
| ,, | 44 | புண்ணியாஹவாசனம் | — நீரால் சுத்திசெய்யும் ஒரு சடங்கு. |
| | | விரலுறை | — விரலை மறைத்துக்கொள்ளும் உறை |
| | | தூணி | — அம்புகள்வைக்கும்பை. |
| | | அரங்கம் | — சபை. |
| ,, | 45 | கேடகம் | — தோலாலாகிய ஓர் ஆயுதம். |
| ,, | 46 | ஸாகஸம் | — துணிவு. |
| | | பிரளயகாலம். | — உலகம் முடியும்காலம். |
| ,, | 47 | நிபுணன் | — மிக்கவல்லவன். |
| | | யௌவனம் | — இளமை. |
| | | நிதி | — இருப்பிடம். |
| ,, | 48 | கோஷம் | — பேரிரைச்சல். |
| | | பல்குனன் | — பங்குனி மாதத்தில் பிறந்தவன் ; அர்ச்சுனன். |
| | | அரணி | — தீக்கடைகோல். |
| | | மூன்று அக்னி | — கார்கபத்தியம், ஆஹவனீயம், தட்சிணாக்னி. |
| | | ஆக்னேயாஸ்திரம் | — அக்னிசம்பந்தமான ஓர் ஆயுதவிசேஷம். |

| | | | | |
|---|---|---|---|---|
| பக்கம். 48 | வாருணாஸ்திரம் | — | வருண சம்பந்தமான ஓர் ஆயுத விசேஷம். |
| | அந்தர்த்தானம் | — | மறைதல். |
| | ஸௌஷ்டவம் | — | அழகுள்ள தன்மை. |
| ,, 51 | ஸாரதி | — | ஓட்டுபவன். |
| | ராஜமார்க்கம் | — | ராஜவீதி. |
| | கவசம் | — | உடலை மறைத்திருப்பது. |
| | கர்ச்சனம் | — | ஆரவாரம். |
| | குரோசம் | — | இரண்டேகால் மைல் கொண்ட தூரம். |
| ,, 52 | வியாபித்து | — | பரவி. |
| | அபிவாதனம் | — | நமஸ்காரம். |
| ,, 53 | சக்ரரக்ஷகர் | — | உருளைகளைக் காப்பவர். |
| | தண்டாயுதம் | — | உலக்கைபோன்ற ஓர் ஆயுதம். |
| | சதுரங்கசேனை | — | தேர், யானை, குதிரை, காலாள் என்ற நால்வகைப்படை. |
| | மத்தகம் | — | யானைத்தலை. |
| ,, 54 | ஊழித்தீ | — | உலக முடிவுக்காலத்தில் உண்டாகும் நெருப்பு. |
| ,, 55 | யூதபதி | — | தலைமை யானை, |
| ,, 56 | ராஜசிரேஷ்டன் | — | அரசர்களுள் சிறந்தவன். |
| ,, 57 | கர்வபங்கம் | — | செருக்கழிவு. |
| | பிரயத்தனம் | — | முயற்சி. |
| ,, 58 | பிரீதி | — | விருப்பம் ; பட்சம். |
| | தீர்க்கம் | — | நிச்சயம் ; பூரணம். |
| | பிரம்மதேஜஸ் | — | பிராமணஒளி ; ஞானஒளி, |
| | ஜனிக்க | — | உண்டாக. |
| ,, 59 | லக்ஷணம் | — | அழகு ; சாமுத்திரிகாலக்ஷணம். |
| | மௌனவிரதம் | — | பேசாதிருக்கும் நோன்பு. |

| | | | |
|---|---|---|---|
| பக்கம். 60 | ஏகாந்தம் | — | தனிமை. |
| ,, 61 | பிரதியுபகாரம் | — | பதிலுதவி. |
| ,, 62 | அந்தப்புரம் | — | பெண்கள் இருக்குமிடம். |
| | ரசமில்லாதது | — | சாரமில்லாதது. |
| | தாபம் | — | துன்பம். |
| | சிலாக்யமாக | — | சிறப்பாக. |
| | அர்த்தம் | — | பொருள். |
| | வைராக்கியம் | — | ஆசையின்மை. |
| ,, 63 | ஸ்வர்க்கம் | — | தேவலோகம். |
| | ஐம்புலன் | — | சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐந்து அறிவுகள். |
| | ஸந்தானம் | — | சந்ததி ; வம்சம். |
| | கற்பு | — | பெண்பாற் சிறப்புக்குணம் : பெரியோர்கள் கற்பித்தவழி நிற்றல்,பதிவ்ரதைத்தன்மை |
| | இன்னாதன | — | துன்பந்தருவன. |
| | மந்திரபூர்வமாக | — | மந்திரங்களை முன்னிட்டு. |
| ,, 64 | பிண்டதர்ப்பணம் | — | பிதிர்க்கள்பொருட்டு அளிப்பன. |
| ,, 65 | பந்து | — | சுற்றத்தார். |
| | ஆத்மதியாகம் | — | தன்னை மாய்த்துக்கொள்ளுதல். |
| ,, 67 | அனுகூலம் | — | நன்மை. |
| ,, 68 | கீர்த்தி | — | புகழ். |
| ,, 69 | அங்கம் | — | உறுப்பு. |
| | அநாதை | — | கதியற்றவர். |
| ,, 70 | மனோவியாதி | — | மனத்தில்உண்டாகும் வேதனை. |
| | பிரவர்த்திக்க | — | செல்ல. |
| ,, 71 | விமோசனம் | — | விடுபடுதல். |

| | | | |
|---|---|---|---|
| பக்கம். 71 | கருமம் | — | காரியம். |
| | ஹிதம் | — | நன்மை. |
| ,, 72 | தபோதனர் | — | தவமாகிய செல்வத்தையுடையவர். |
| ,, 73 | வியாபகம் | — | பரவியிருத்தல்; எங்குமிருத்தல். |
| | நியமம் | — | விதி. |
| ,, 74 | ராக்ஷஸ பாகம் | — | ராக்ஷஸனுக்கு உரியபகுதி. |
| ,, 75 | கழுவாய் | — | பிராயச்சித்தம். |
| ,, 76 | திண்ணம் | — | நிச்சயம். |
| ,, 77 | விதத்தம் | — | ஆயத்தமானது. |
| ,, 78 | ஈனர் | — | கீழ்ப்பட்டவர். |
| | புவனி | — | உலகம். |
| ,, 79 | அவயவம் | — | உறுப்பு. |
| | விவேகம் | — | பகுத்தறிவு. |
| ,, 81 | இடுகாடு | — | சுடுகாடு; மயானம். |
| ,, 82 | ஆக்கிரகம் | — | விடாப்பிடி; கோபம். |
| ,, 83 | உளைய | — | வருந்த. |
| ,, 86 | சூர்ணம் | — | பொடி. |
| ,, 87 | பிரம்மாண்டம் | — | உலகம். |
| | பிரஜ்ஞை | — | உணர்ச்சி. |
| ,, 88 | விருத்தர் | — | வயதுசென்ற முதியோர். |
| ,, 91 | வரம்பு | — | எல்லை. |
| | வியவகாரம் | — | நடத்தை. |
| ,, 92 | விநயம் | — | வணக்கம்; அடக்கம். |
| | ஆசாரியன் | — | அறியாமையை நீக்குபவன். |
| | பாத்திரம் | — | உரியதன்மை. |
| | வாகனம் | — | ஏறிச்செல்லுவது. |
| | அபிவிருத்தி | — | வளர்ச்சி. |
| ,, 93 | இதிஹாஸம் | — | பூர்வகாலத்துச் சரித்திரம். |
| | புராணம் | — | பழங்கதை. |

| | | | |
|---|---|---|---|
| பக்கம். 94 | பரிதானம் | — | லஞ்சம். |
| | கபடம் | — | வஞ்சகம். |
| ,, 95 | அந்தரங்கர் | — | இரகசியச்செய்திகளைக் கேட்பதற்கு உரியவர். |
| ,, 96 | சம்மானம் | — | வெகுமதி. |
| ,, 97 | ஹிதர் | — | நன்மையை நாடுவோர். |
| | பிரதிகூலம் | — | விரோதம். |
| | பிராதா | — | உடன்பிறந்தோன். |
| ,, 98 | மேதாவி | — | பேரறிவாளன். |
| ,, 99 | பேணல் | — | காத்தல். |
| | கிரஹங்கள் | — | நவக்கிரஹங்கள். |
| | மரித்தவன் | — | இறந்தவன். |
| | பிரேதம் | — | பிணம் ; சவம். |
| | காலன் | — | யமன். |
| | கோரம் | — | பயங்கரம். |
| ,, 101 | அபவாதம் | — | வீண்பழி. |
| ,, 102 | இயக்கமற்றது | — | சஞ்சாரமில்லாதது ; அசைவில்லாதது. |
| | அனிஷ்டம் | — | வேண்டாதன. |
| | பாக்கியம் | — | நன்மை. |
| | யோகம் | — | மனம் ஒன்றுபடச் செய்யும் முயற்சி. |
| | தீனத்தனம் | — | எளியதன்மை. |
| ,, 104 | யுக்தம் | — | பொருத்தமானது. |
| ,, 105 | சூன்யம் | — | ஒன்றுமில்லாதிருத்தல். |
| | சிசு | — | குழந்தை. |
| ,, 106 | நிவிருத்தி | — | நீக்கம். |
| | தாபம் | — | துன்பம். |
| | சித்தன் | — | அஷ்டமகாசித்திகளில் வல்லவன். |
| | மிருத்யு | — | யமன். |

| | | | |
|---|---|---|---|
| பக்கம் 107 | ஜீவன் | — | உயிர். |
| ,, 108 | நசிக்க | — | அழிய. |
| ,, 109 | ஆரணியப் பிரதேசம் | — | காட்டிடம். |
| | சிதை | — | பிணஞ்சுடும்விறகு ; ஈமவிறகு. |
| ,, 113 | நல்லூழ் | — | நல்வினைப்பயன். |
| ,, 114 | பிரவாகம் | — | ஓட்டம். |
| ,, 117 | சகாயம் | — | உதவி. |
| | மித்திரன் | — | நண்பன். |
| ,, 119 | ஆதித்யம் | — | விருந்தோம்பல் ; விருந்தினர்க்குச் செய்யும் உபசாரம். |
| | யஜ்ஞம் | — | யாகம் ; வேள்வி. |
| | கிருகஸ்தன் | — | இல்வாழ்வோன் ; இல்லறத்தான். |
| ,, 120 | அவிவேகம் | — | அறிவின்மை. |
| | ரட்சை | — | காவல். |
| | சரணாகதன் | — | அடைக்கலம் புகுந்தவன். |
| ,, 121 | குரூரன் | — | கொடியவன். |
| ,, 122 | உபவாஸம் | — | உண்ணாவிரதம். |
| | மஹாப்ரஸ்தானம் | — | வடதிசைநோக்கிச் செல்லும் மீளாப்பெரும்பயணம். |
| | சலாகை | — | இருப்புக்கம்பி. |
| ,, 123 | வெகுமானம் | — | பெருமதிப்பு. |
| | காந்தன் | — | கணவன். |
| | தோள்வளை | — | தோள்களில் அணிந்துகொள்ளும் வளைவகை. |

---

Printed at the Sri Mahabharata Press, Kumbakonam.

# ஸ்ரீமஹாபாரதக் கதைகள்

MAHAMAHOPADHYAYA
DR. U. V. SWAMINATHA IYER LIBRARY
BESANT NAGAR. MADRAS-600 090.

பாஷாபாரத துரந்தர, மஹாமஹோபாத்யாய,
ஸ்ரீ. ம. வீ. இராமானுஜாசாரியர்
அவர்களால் தொகுக்கப்பெற்றன.

Published by

M. R. RAJAGOPALACHARI,

KUMBAKONAM.

1940.

விலை அணு 10.

CamScanner

GF
O18,1A2:9 (O-3)
31HO

*All Rights Reserved.*

Printed at the
SRI MAHABHARATA PRESS,
KUMBAKONAM.

## பொருளடக்க

I உத்தம மாணாக்கர்கள்

1. உத்தாலகன்
2. உபமன்யு
3. பைதன்
4. உதங்கர்
5. ஏகலவ்யன்

II அரசிளங்குமாரின் ஆயுதப்பயிற
சேத்ரமும்

III துரோணர் குருதக்ஷிணை பெற

IV பீமனும் பகனும்

V அரசரோடு பழகுதல்

VI தன்னலம் பேணல்

VII விருந்தோம்பல்

அரும்பதக்குறிப்பு

# பொருளடக்கம்


| | | பக்கம். |
|---|---|---|
| I | உத்தம மாணுக்கர்கள் | ... 1 |
| | 1. உத்தாலகன் | ... 2 |
| | 2. உபமன்யு | ... 5 |
| | 3. பைதன் | ... 12 |
| | 4. உதங்கர் | ... 14 |
| | 5. ஏகலவ்யன் | ... 26 |
| II | அரசிளங்குமரரின் ஆயுதப்பயிற்சியும் அரங்கேற்றமும் | ... 32 |
| III | துரோணர் குருதக்ஷிணை பெறுதல் | ... 50 |
| IV | பீமனும் பகனும் | ... 59 |
| V | அரசரோடு பழகுதல் | ... 90 |
| VI | தன்னலம் பேணல் | ... 99 |
| VII | விருந்தோம்பல் | ... 113 |
| | அரும்பதக்குறிப்பு | ... 124 |

மீனாமை கோலநெடு நரசிங்க மாகிநிலம்
விரகா லளந்த குறளாய்
ஆனாது நின்றமழு வில்லும்கோல் வெல்லும்முனை
அலமுற்ற செங்கை யவராம்
வானாடர் வந்துதொழ மண்ணாடர் ஐவரையும்
வாழ்விக்க வந்த வடிவாம்
நானாவி தங்கோள்பரி ஆளாகி நின்றருளும்
நாராய ணாய நமவே.

வில்லிபுத்தூரார்.

ஸ்ரீ:

# முகவுரை.

தமிழ் மஹாபாரதப் பதிப்பாசிரியரும்
அரும்பெறல் தந்தையாருமாகிய ஸ்ரீ உ. வே.
தாத்தா, மஹாமஹோபாத்தியாய, ம. வீ.
சாரியஸ்வாமி அவர்கள், தாங்கள் உழைத்துவந்த
பாரதப்பதிப்பு வேலைகளுக்கிடையிலே வேறுபல
மான செயல்களையும் செய்துவந்தார்கள். அந்
ஸ்ரீ மஹாபாரதத்திலுள்ள அருமையான நீதி
தமிழ்நாட்டுச் சிறுவர் சிறுமியர்களும், மாணவ
றத் தெரிந்துகொள்ளும்பொருட்டுப் பல
தொகுத்துவைத்துள்ளார்கள். அவற்றைச் செ
வெளியிடவேண்டும் என அவர்கள்கொண்டிரு
நிறைவேறுமுன் அவர்கள் பெரும்பிரிவெய்திய
யேன் அவர்கள்கொண்ட கருத்தை இயன்றஅ
வேற்ற முயன்றுவருகிறேன். அம்முறையில்
முதல் வெளியீடாகும். ஸ்ரீமஹாபாரதத்தின்
யும், அதனைக்கற்பதால் உண்டாகும்நன்மை
அடியேன் கூறுவது மிகையாகும்.

இப் புத்தகத்தில் அடங்கியகதைகள் மக்
யில் கைக்கொள்ளவேண்டிய சிறந்தநீதிகளை
யில் போதிப்பன. புத்தகத்தில் கடையி
களுக்கு உரையும் சேர்க்கப்பட்டுள்ளது. கா
வியவைகளின்விலை மிக உயர்ந்திருக்கும்
பலரும் எளிதில்பெற்றுப் படிக்கவேண்டும் எ
குறைத்து வைக்கப்பட்டுள்ளது.

7349

ஸ்ரீ:

# முகவுரை.

தமிழ் மஹாபாரதப் பதிப்பாசிரியரும் அடியேனது அரும்பெறல் தந்தையாருமாகிய ஸ்ரீ உ. வே. பாஷாபாரத துரந்தர, மஹாமஹோபாத்தியாய, ம. வீ. இராமானுஜாசாரியஸ்வாமி அவர்கள், தாங்கள் உழைத்துவந்த தமிழ் மஹாபாரதப்பதிப்பு வேலைகளுக்கிடையிலே வேறுபலஉலகஉபகாரமான செயல்களையும் செய்துவந்தார்கள். அந்த முறையில் ஸ்ரீ மஹாபாரதத்திலுள்ள அருமையான நீதிக்கதைகளைத் தமிழ்நாட்டுச் சிறுவர் சிறுமியர்களும், மாணுக்கர்களும் கற்றுத் தெரிந்துகொள்ளும்பொருட்டுப் பல கதைகளைத் தொகுத்துவைத்துள்ளார்கள். அவற்றைச் செப்பஞ்செய்து வெளியிடவேண்டும் என அவர்கள்கொண்டிருந்த எண்ணம் நிறைவேறுமுன் அவர்கள் பெரும்பிரிவுஎய்தியமையின், அடியேன் அவர்கள்கொண்டகருத்தை இயன்றஅளவு நிறைவேற்ற முயன்றுவருகிறேன். அம்முறையில் இப்புத்தகம் முதல் வெளியீடாகும். ஸ்ரீமஹாபாரதத்தின் பெருமையையும், அதனைக்கற்பதால் உண்டாகும்நன்மையையும் பற்றி அடியேன் கூறுவது மிகையாகும்.

இப் புத்தகத்தில் அடங்கியகதைகள் மக்கள் வாழ்க்கையில் கைக்கொள்ளவேண்டிய சிறந்தநீதிகளை எளியமுறையில் போதிப்பன. புத்தகத்தில் கடைசியில் அரும்பதங்களுக்கு உரையும் சேர்க்கப்பட்டுள்ளது. காகிதம் மை முதலியவைகளின்விலை மிக உயர்ந்திருக்கும் இக்காலத்தில், பலரும் எளிதில்பெற்றுப் படிக்கவேண்டும் என்றே விலையும் குறைத்து வைக்கப்பட்டுள்ளது.

CamScanner

இப் புத்தகத்தை ஆதரிக்கும் முகத்தால் அடியேற்கு உற்சாகமூட்டுமாறு வித்யா இலாகா அதிகாரிகளையும் தமிழ் மக்களையும் கேட்டுக்கொள்ளுகிறேன். இவ்வாறு செய்வது தமிழ்நாட்டிற்கும் தமிழ்மொழிக்கும் பெருந்தொண்டியற்றிச்சென்ற எனது தந்தையார் பொருட்டுக் காட்டிய நன்றியறிதலுமாகும்.

இஃது ஆதரவுபெற்றால் இதனைத்தொடர்ந்து பின்னும் பலபுத்தகங்களை வெளியிடும் கருத்துடையேன்.

இப் புத்தகத்தைப் புரூப் திருத்திக்கொடுத்து உதவிய டவுன்ஹைஸ்கூல் தலைமைத்தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமான் ஊ. சா. வேங்கடராமையரவர்களுக்கும் இந்நகர் அரசியல் கல்லூரித் தலைமைத்தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமான் L. ஸ்ரீநிவாஸ ஐயரவர்களுக்கும் இந்நகர் பாணாதுறைஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமான் T. V. சதாசிவப்பண்டாரத்தாரவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைச்செலுத்துகிறேன்.

கும்பகோணம்,
1–12–1940. }

*M. R.* ராஜகோபாலாச்சாரி.

ஸ்ரீ:

# மஹாபாரதக் கதைகள்.

## I. உத்தம மாணாக்கர்கள்.

### நூன்முகம்.

“அரிது அரிது மானிடராதல் அரிது” என்பர்
யார். மானிடர் அரியராவது, விலங்கு முதலிய
காட்டிலும் வேறுபட்டுச் சிறப்பான பகுத்தறிவைப்
இருப்பதனால். அந்தப் பகுத்தறிவு, “கற்றனை
அறிவு” “தாங்கற்ற நூலளவேயாகும் நுண்ணறி
வாக்கியங்களுக் கேற்பப் பலதிறப்பட்ட பற்பல நூ
கற்பதால் பெருகி வளரும். “கண்டது கற்கப்
ணுவான்” என்ற பழமொழியும் இங்கே கவனிக்கத்

அப்படிக் கற்பது ஒரு வரன்முறையை
இருக்குமாயின், அது, தவறுதல்களுக்கு உள்
நன்னெறியிலே செலுத்தும் தகுதியுள்ளதாகும்.
சிறந்த ஆசிரியரது உதவியும், அவரது உப
தெரிந்துகொள்ளத் தகுந்தபருவமும் இன்றிய
“குருவில்லாத வித்தை விழல்” “தொட்
வித்தை சுட்டுப்போட்டாலும் வராது” என்பன
உதவி இருக்கவேண்டியதன் அவசியத்தையும், “
கல்வி சிலையில் எழுத்து”: “இளமையிற் கல்” 
வேண்டிய பருவம் இன்னது என்பதையும்
இது, மாணவப்பருவம் எனப்படும்.